https://tamileelamarchive.com/

# சுதந்திரக்கீற்று



சிறப்பு மலர் 1996

தமிழ்ப் பெண்கள் அமைப்பு

பிரான்ஸ்.

https://tamileelamarchive.com/

தமிழீழப் பெண் எந்த நிலைப்புள்ளியில் நிற்கிறாள்? அவளுடைய தளம் எது? அவளுக்கிருக்கும் எல்லைக் கோடுகள் எவை? எல்லைகள் உடைந்த நிலைகள் என்ன?

சாத்திரம் பார்த்துத் திருமணம் பேசி, சீதனம் கொடுத்து, மூகூர்த்தம் பார்த்துத் தாலிகட்டி கணவனே கண்கண்ட தெய்வம் என்ற வரையறைகளோடு, தாலியும், வேலியுமாக வாழ்ந்தவள் தமிழீழப் பெண். கிராமிய, பழமைவாதச் சூழலில் அவள் வகித்த பாத்திரம் அது.

தேசிய விடுதலையுடன், சமூக விடுதலை, பெண் விடுதலை என்ற புரட்சிகர கருத்துக்களைச் சுமந்த வண்ணம், கையில் ஆயுதத்துடனும், புதுமைக் கனவுகளுடனும் புறப்பட்டவள் இன்னொரு தமிழீழப் பெண். சீதனத்தை மறுத்து, ஆணுக்குச் சமனாக, பழைய எல்லைக் கோடுகளை அழித்து விட்டு விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டவள் அவள். போராட்டச் சூழலில் கர்ம வீராங்கனையாகப் பாயும் புலிப்பாத்திரம் இது.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும், நவீனத்துவமும், கைத்தொழில்களும், முதலாளித்துவமும் வளர்ந்த நாடுகளில் அகதியாகப் புலம் பெயர்ந்து வந்து விழுந்தவள் இன்னொரு தமிழீழப் பெண். நவீன நகர்ப்புறச்சூழல், காலநிலை, மனிதர், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் அனைத்தும் அந்நியமானவை. கிராமிய, பழமைவாத கருத்தோட்டங்களில் திளைத்திருந்த மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு இது ஒரு புதிய கோலமாய் அமைந்தது. எது சரி, எது பிழை, எது நாகரிகம், எது சீரழிவு என்ற குழப்பங்களிலிருந்து விடுபடவே நெடுங்காலம் பிடிக்கும். விடுதலைப் போராட்டத்துக்கு காலரீதியான படிமுறையும் மனப்பக்குவ வளர்ச்சியும் இருந்தது. இதுவோ திடீர் மாற்றம்.

இவ்வேறுபட்ட மூன்று தளங்களை எவ்வாறு சமன் செய்வது?

இவற்றில் பொது உண்மைகளைக் கண்டறிவதன் மூலம், அதன் அடிப்படையில் புதிய எல்லைகளை வகுத்துக் கொள்வதன் மூலம் (எல்லைகளே இல்லாவிட்டால் குழப்பமும், சீரழிவும் தான் மிஞ்சும். கட்டற்ற சுதந்திரம் அராஜகத்தில் முடியும். 'எய்ட்ஸ்' நோயை அனுபவித்து அறிய சுதந்திரம் வழங்க முடியாது) தமிழீழப் பெண்கள் புதுமைப் பெண்களாக விளங்குவார்கள். எமது தாயக மண்ணில் தான், எமது சுயநிர்ணய உரிமையை, தேசிய விடுதலையை, பெண் விடுதலை உட்பட்ட அனைத்து விடுதலைகளையும் அடையலாம் என்ற உண்மை – குடும்ப அலகு, நாகரிக உலகிலும் சமூக முன்னேற்றத்திற்கு உகந்தது என்ற உண்மை – ஆணுக்கு பெண் சமமானவள் என்ற உண்மை – தொழில்நுட்ப, கைத்தொழில், விஞ்ஞான, தகவல் பரிவர்த்தனை ஆகிய அறிவியல், தொழில்துறை வளர்ச்சிகள் மனித முன்னேற்றத்திற்கு அவசியமானவை என்ற உண்மை – ஒடுக்குமுறை அகன்ற, சுரண்டலற்ற, ஏற்றத்தாழ்வு இல்லாத சுபீட்சமான புதிய உலகு ஒன்று உருவாக அனைவரும் உழைக்க வேண்டும் என்ற உண்மை – இவ்வுண்மைகள் உணரப்பட்ட நிலையில் அறிவு, சுதந்திரம், வெளிப்படை என்ற பரந்த தளத்தில், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்க வேண்டும்; அதற்காகத் தியாகங்களைப் புரிய வேண்டும் என்ற உணர்வுதான் – அந்த மன நிலைதான் சுதந்திரக் கீற்று. அவ்வொளிக்கீற்றின் பாய்ச்சல் ஒவ்வொருவர் மனங்களிலும் நிகழுதல் வேண்டும். அதுவே அற்புத நிகழ்வாகும்.

அன்பின்
ஊற்றாக
சுதந்திரக்கீற்று

https://tamileelamarchive.com/

# பெண்ணினம் புரட்சி சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது



எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப காலம் தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சி கொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும்போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசியப் போராட்டமாக முழு வடிவத்தையும் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந்தோம்.

நாம் ஒடுக்கப்பட்டு வரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கியொடுக்கி வருகிறோம். இப்படியாக எம் மத்தியில் நிலவிவரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழமைவாதத்திலும் மூட நம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாகப் பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலம் தொட்டே பெண் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது; அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.

எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்துக்கு அவர்களை அணிதிரட்டியது. இவ் வகையில் நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.

காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப் போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. எதிரியைக் களத்தில் சந்தித்து நிற்கிறது.

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கின்றது.


வீரத்திலும் தியாகத்திலும் விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண் போராளிகள் தமது வீர சாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

ஒரு புதுமைப்பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது.

தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடர வேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரளவேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும் பெண் விடுதலையையும் வென்றெடுக்கமுடியும்.

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், 03-08-1991 அன்று வெளியிட்ட அறிக்கையிலிருந்து.....

https://tamileelamarchive.com/



# வேங்கையிற் சேரடி கிளியே!

- தில்லைச் சிவன் -

நேர்மையில்லாதவர் வாய்வீரம் பேசிடும்
நெஞ்சில் உரமற்ற வஞ்சக ராமடி
கிளியே
ஆர் எவர் என்றெனக் கேட்டு விடாதே போ
மாமி
ஆடை கலைந்ததை மூடவோ சொல்லவோ
அதுமுடி யாதடி கிளியே! அது முடியாதடி!

பேர் தெரியாதவர் 'தமிழ் தமிழ்' என்றதால்
பெரியவராயினர் கிளியே — பின்னர்
ஊர் உலகத்து உயர்த்திய ஏணியை
உதைத்து விழுத்தினர் கிளியே!

'போர் போர்' என்றறை கூவினார் மேடையில்,
போய் ஒழித்தாரடி கிளியே! — இன்று
ஆருமைப் போராடச் சொன்ன தெனக்கேட்டு
அழுவதைக் கேளடி கிளியே!

ஆரையும் தூண்டி விட்டுக் கிடைத்ததில்
ஆளுக்குப் பாதிஎன் பாரே— கிளியே
போருக்கு அஞ்சிப் புறஞ் சொல்லி வாழ்கின்ற
புல்லர்க ளாமடி கிளியே!

அஞ்சி அஞ்சி சாகும் அடிமைக்கு சுதந்திரம்
அரிதெனக் கூறி நிற்பாயே — கிளியே
பிஞ்சி வரும் அரக்கர் படையை ஒழித்திட
வேங்கையிற் சேரடி கிளியே!

https://tamileelamarchive.com/

# தமிழீழ விடுதலைப் போரும் பெண்களும்



ஒரு விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி பெறுவதும் முழுமை பெறுவதும் பெண்களின் பங்களிப்பில் தங்கியிருக்கிறது. உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளை எடுத்துக்கொண்டால் இந்த எதார்த்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம். ஒரு தேசத்தினது அல்லது இனத்தினது சனத்தொகையில் சரி பாதியாகவுள்ள பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் முழுமையான பங்களிப்பைச் செய்ய முன்வரும்போதுதான் போராட்டம் முனைப்புப்பெற்று முன்னேறுகிறது. உலக வரலாற்றில் வெற்றிகண்ட தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் ஆயுதமேந்திப் போராடியிருக்கிறார்கள். தேசியப் பொருளாதாரத்தை பேணி வளர்ப்பதிலும் கல்வி, சுகாதாரம், சமூகசேவை போன்ற துறைகளிலும் அளப்பரிய தொண்டுபுரிந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். விடுதலைப் பற்றும், தேசப்பற்றும் கொண்ட இந்தப் புரட்சிகரப் பெண்களின் பங்களிப்பால் எத்தனையோ ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் இன்று சுதந்திரம் பெற்ற நாடுகளாக மாறியுள்ளன.



https://tamileelamarchive.com/

> "பெண் விடுதலை என்பது முற்று முழுதாக பெண்களது விவகாரமாகும். பெண்கள் தாமாகவே போராடி தங்களது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமே தவிர மற்றவர்கள் பெற்றுத்தருவார்கள் எனக் காத்திருக்கக் கூடாது."
>
> டெங் சிங்கோ – ஒரு சீனப் பெண் போராளி

தமிழீழத்திலும் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலை யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. இந்த யுத்தமானது எமது சமுதாயக் கட்டமைப்பில் பூகம்பமான தாக்கங்களை விளைவித்திருக்கிறது. வரலாறு கண்டிராத பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இலட்சக்கணக்கான மக்களை இடம்பெயரச் செய்து அகதிகளாக்கியிருக்கிறது. இந்த யுத்தத்தின் ஒட்டுமொத்த விளைவாக எமது சமுதாயத்தில் ஆண்களின் சனத்தொகை கணிசமான அளவு குறைந்துள்ளது. சிங்கள இராணுவத்தின் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான ஆண்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எதிரியுடன் போராடி ஆயிரக்கணக்கில் எமது போராளிகள் வீரமரணத்தைத் தழுவியுள்ளனர். இது ஒருபுறமிருக்க, பல்லாயிரக்கணக்கான ஆண்கள் தமது சொந்தத் தாயகத்தை விட்டு அந்நிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். பயத்தினால் ஓடியவர்களும், படிக்கச் சென்றவர்களும், வேலைவாய்ப்புத் தேடிச் சென்றவர்களுமாக பெருந்தொகையான ஆண்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதன்காரணமாக இன்று தமிழீழத்தில் பெண்களின் சனத்தொகையே ஆண்களைவிடக் கூடுதலாக உள்ளது. பெண்கள் பெரும்பான்மையாகவுள்ள சமுதாயம் என்பதால் தேசிய சுதந்திரப் போராட்டத்திலும் எமது தேசத்தின் வாழ்விலும் பெண்களின் பங்கு முக்கியமாகிறது.

காலம் காலமாக பெண் ஒடுக்குமுறை நிலவி வந்த ஒரு பழமைவாத சமுதாயமாக இருந்தபோதும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை இது ஒரு புரட்சிகரமான முன்னேற்றம் என்றுதான் சொல்லவேண்டும். ஆயுதப் போராட்டக் களத்தில் குதிக்கும் அளவிற்குப் பெண்களின் பங்களிப்பு உயர்ந்த வடிவம் பெற்றிருக்கிறது. ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக அந்நிய காலனித்துவத்தாலும் சிங்கள அடக்குமுறையாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு சமுதாயம், கடந்த பதினைந்து ஆண்டுகாலத்தில், அதாவது புலிகளின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகி வளர்ச்சிகண்ட காலவரம்பிற்குள் மாபெரும் எழுச்சிகொண்டு பெண்களின் புரட்சிக்கும் வழிவகுத்திருக்கிறது.

இன்று ஆயிரக்கணக்கில் இளம் பெண்கள் ஆயுதமேந்திப் போராட்டக் களத்தில் குதித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பழமைவாத, பெண் அடிமைத்தன விலங்குகளை உடைத்தெறிந்து, தாய்மண்ணை மீட்டெடுக்க களத்தில் குதித்திருக்கும் இந்தப் பெண் புலிகளின் வீரமும் தியாகமும் தேசாபிமானப் பற்றும் பெண்ணுலகிற்கே பெருமைதரக்கூடியது. பலம்வாய்ந்த மகளிர் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலை இராணுவத்தின் ஒரு அங்கமாக செயற்பட்டு வருகிறது. ஆண் போராளிகளுடன் சரிசமமாக நின்று போர் புரியும் துணிச்சலும், மனவலிமையும், தியாக உணர்வும் தமக்குண்டு என்பதை பெண்புலி வீராங்கனைகள் நிரூபித்துக்காட்டியுள்ளனர். கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்ட போது மகளிர்படை அணிகளும் அதில் பங்குபற்றி மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கின்றன. யாழ். கோட்டை முற்றுகையிலும் பங்குகொண்டு, பயங்கரமான விமானக்குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் எதிரியுடன் போரிட்டிருக்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்தச் சண்டைகளில் பெண் போராளிகள் பலர் களத்தில் மடிந்திருக்கிறார்கள். இப்படியாக இளம் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கி வியத்தகு தியாகங்களைப் புரிந்துவருவது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமான ஒரு புதிய பரிமாணத்தை பிறப்பித்திருக்கிறது.

பெண்களின் பங்களிப்புடன் ஆயுதப் போராட்டம் முன்னேறி வருவதும் பரந்துபட்ட வெகுசனங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின்னால் அணிதிரண்டு நிற்பதும் சிங்களப் பேரினவாத அரசுக்கு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களை தாங்கொணாத் துன்பத்திற்குள் தள்ளி அவர்களது மனவுறுதியை உடைத்து விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட சிங்கள அரசு பல நாசகாரச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இவற்றில் ஒன்றுதான் திட்டமிட்ட பொருளாதாரத் தடை. இதனால் இன்று தமிழீழத்தில் உணவு வகைகளுக்கும், மருந்துகளுக்கும், எரிபொருட்களுக்கும் பெரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் பொதுமக்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். இது எமது மக்களுக்கு ஒரு புதிதான அனுபவமில்லை. எமது பொருளாதார வாழ்வைச் சிதைத்து, மக்களைப் பட்டினிச் சாவின் விளிம்புக்குத் தள்ளிவிட சிங்கள இனவாத ஆட்சிபீடம் பல தடவைகள் முயற்சிசெய்துள்ளது. உணவுக்கும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாம் தொடர்ந்தும் சிங்கள தேசத்தில் தங்கியிருப்பது காரணமாகவே அடிக்கடி இந்த உணவு நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஆபத்திலிருந்து நாம் தப்பவேண்டுமாயின் தங்குநிலையற்ற, தன்நிறைவான பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும். தனியரசு கோரி ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்திக்கொண்டு எமது எதிரியிடம் நாம் கைநீட்டி நிற்பது அசட்டுத்தனம். தமிழீழத் தனியரசின் அத்திவாரமாக ஒரு தன்னிறைவான, சிங்கள தேசத்தில் தங்குநிலையற்ற பொருளாதார

> "பெண்கள் சமுதாயத்தின் சரிபாதி அங்கம். அவர்கள் விடுவிக்கப் படவில்லையென்றால் சரிபாதி சமுதாயம் விடுவிக்கப்படவில்லை என்றாகும். பெண்கள் விடுதலை பெறவில்லையென்றால் அரைவாசி சோஷலிசம் மட்டுமே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது என்றாகும்."
>
> வியட்நாமின் தந்தை ஹோ–சி–மின்

https://tamileelamarchive.com/



...ாழ்வை நிர்மாணிப்பது அத்தியாவ...யமாகும். இந்தத் தேசிய பொருளா...ார வாழ்வை கட்டி எழுப்பும் பணி...ில் தமிழீழப் பெண்ணினத்தின் பங்கு ...க்கியமானது.

காலம் காலமாக தமிழீழப் பெண்...ள் உணவு உற்பத்தியிலும் மற்றும் ...று கைத்தொழில்களிலும் ஈடுபட்டு ...தசிய பொருளாதார வாழ்வுக்கு ...துகெலும்பாக இருந்து வந்திருக்கி...ார்கள். இன்றைய நெருக்கடியான ...ாலகட்டத்தில், ஆண்களின் சனத் ...தாகை வெகுவாகக் குறைந்துள்ள ...ந்த சூழ்நிலையில் பெண்களின் ...தொழில் ஆக்க சக்தியிலேயே எமது ...தேசம் தங்கியிருக்கிறது. சிங்கள இன ...ாதம் விடுத்துள்ள சவாலை எதிர் ...கொண்டு உற்பத்தித் துறையை தன்னி...றைவாக்கும் பணியில் பெண்கள் ...கூடுதலாக ஈடுபடவேண்டும். உற்பத்...த் துறையில் பங்களிப்பது சொந்த ...ாழ்க்கைக்கு மட்டுமன்றி தேசத்தின் ...ாழ்வுக்கும் இன்றியமையாதது என் ...பதை உணர்ந்து பெண்கள் செயற்பட ...வேண்டும். உணவு உற்பத்தித்துறை...யில் மட்டுமன்றி குடும்பப் பொருளா...தார வாழ்வைச் சீரமைக்கும் பணியி...லும் பெண்களின் பங்கு முக்கியமா...னது. அதாவது சிக்கனமாக வீட்டுப் பொருளாதாரத்தை திட்டமிட்டு, சுதேசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து மரபு வழியில் நுகர்வு வழக்கங்களை மாற்றி இன்றைய நெருக்கடியை சமாளிக்கவும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்கமளிக்கவும் பெண்கள் முன்வரவேண்டும்.

போர்க்கால கால சூழ்நிலையில், ஒரு திட்டமிட்ட இனக்கொலையை நாம் எதிர்கொண்டு நிற்கும் இந்த காலகட்டத்தில், போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை என்ற இந்த இக்கட்டான நேரத்தில் குடும்பத் தலைவி என்ற பொறுப்பை வகிக்கும் ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கு விடுதலையுணர்வையும் தேசப்பற்றையும் ஊட்டி வளர்க்க கடமைப்பட்டிருக்கிறாள். தாய் என்ற அந்தஸ்தை வகிக்கும் பெண்கள் இன்றைய தேசிய விடுதலை போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கமுடியாது. ஏனென்றால் இப்போராட்டம் எமது மக்கள் அனைவரினதும் குறிப்பாக எமது இளம் சந்ததியினரது எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கப்போகிறது. எமது போராட்டத்தின் வெற்றியில் தான் எமது இளம் பரம்பரையினரின் எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கிறது.

விடுதலையுணர்வற்று, சுயநலத்திலும் பழமையிலும் புதைந்துபோய், போராட்டத்தில் அந்நியப்பட்டு நிற்கும் தாய்மாரும் இருக்கத்தான் செய்கிறார்கள். பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டால் பிரச்சினை தீர்ந்துபோகும் எனக் கருதுபவர்களும் நிறையவுண்டு. ஆனால், அதே சமயம், பிள்ளைகளுக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்து அவர்களுக்கு விடுதலை இயக்கத்திற்கு ஒப்படைத்துவிடும் புரட்சிகரப் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்றைய தாய்க்குலமாகவுள்ள பெண்ணினத்தின் புரட்சிகர விழிப்புணர்வில்தான், அவர்களது பங்களிப்பில் தான் எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வும், வீழ்வும் தங்கியிருக்கிறது.

கஷ்டமான வாழ்க்கைக்கு ஆளானவர்கள் அனைவரும் அடக்குமுறையாலும், தேவையாலும், அலைக்கழிக்கப்பட்டு நைந்துபோன மக்கள் அனைவரும் பணக்காரர்களாலும், பணக்காரர்களின் கைக்கூலிகளாலும் தரையோடு தரையாக நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் அனைவரும் மக்களின் நலத்திற்காகப் படுமோசமான சித்திரவதைக்கு ஆளாகி, சிறைக்குள்ளே கிடந்து அழிந்துகொண்டிருக்கும் அந்த மக்களோடு ஒன்றுசேர வேண்டும். தங்களைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிதுகூட இல்லாமல் அவர்கள் சகல மக்களுக்கும் சுபீட்சப் பாதையைக் காட்டுகிறார்கள். அவர்கள் எந்தவித ஒளிவு மறைவுமில்லாமல், இந்தப் பாதையில் வரும்படி அவர்கள் எவரையும் நிர்ப்பந்தித்ததில்லை. ஆனால், ஒரு மனிதன் அவர்களோடு போய்ச்சேர்ந்துகொண்டால் அவனே அவர்களை விட்டு பிரிந்து செல்லமாட்டான். ‘ஏனெனில் அதுவே சரியான பாதை என்பதையும், அதைத்தவிர வேறு மார்க்கமே கிடையாது என்பதையும் அவன் கண்டுகொள்வான்’. ‘அம்மாதிரி மனிதர்களோடு சேர்ந்து செல்வதைப் பற்றிச் சாதாரண மக்கள் கவலைப்படவே தேவையில்லை. அந்த மனிதர்கள் அற்ப சொற்ப வெற்றியோடு திருப்தியடைய மாட்டார்கள். சகல ஏமாற்றுக்களையும், சகல பேராசைகளையும், சகல தீமைகளையும் ஒழித்துக்கட்டினாலன்றி அவர்கள் நிறுத்தமாட்டார்கள். அனைத்து மக்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே குரலில், ‘நான்தான் அதிகாரி. நான்தான் சகல மக்களுக்கும் சமமான பொதுவான சட்ட திட்டங்களை உண்டாக்குவேன்’ என்ற கோஷத்தைக் கிளப்புகிற வரையிலும், அவர்கள் ஓய்வுகொள்ள மாட்டார்கள்.

மக்ஸீம் கார்க்கி – ‘தாய்’ நாவலிலிருந்து

https://tamileelamarchive.com/

# புலம்பெயர் தமிழ் வளரிளம் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஒரு பார்வை

தாய் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து ஒரு அந்நியச் சூழலில் விரும்பியோ விரும்பாமலோ வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிறந்த மண்ணிலேயே எத்தனையோ காலமாக சிறுபான்மையினராய், அடக்கப்பட்டு வாழ்ந்த எமக்கு அந்நியச்சூழலா விடிவைத் தேடித் தரப்போகிறது? முற்றும் முழுதாக வேறுபட்ட ஒரு சமூக அமைப்புக்கு கீழ் ஒன்றவும் முடியாமல் விலகி ஓடவும் முடியாமல் திண்டாடுகிறோம். குறிப்பாக எமது இளம் சமுதாயத்தினர் இரு கலாசார வலையில் சிக்கித் தவிக்கின்றனர். அன்றாடம் பாடசாலையில் ஒரு வேடமும் வீட்டில் ஒரு வேடமும் ஏற்று நடிக்கும் இரட்டை வேடதாரிகளாக அல்லல்படுகின்றனர். பிள்ளைகள் ரீனேஜ் பருவத்தை அடைந்தவுடனேயே அவர்களை சுதந்திரமாக விட்டுப் பழக்கும் முறை ஐரோப்பிய சமூக அமைப்பு முறையில் உள்ளது. ஆனால் நாம் அதற்குப் பிறகு தான் பிள்ளைகளின் வளர்ப்பு முறையில் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முனைகிறோம். அதுவும் குறிப்பாக பெண்பிள்ளை என்றால் இன்னும் கூடக் குறைய கட்டுப்பாடுகளை விதிக்கின்றோம். இப்படி பெற்றோரால் கீறப்படும் கோட்டைத் தாண்ட முடியாமல், இளவயதுப் பெண்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இப்பிரச்சினைகளை இரண்டு களங்களில் வைத்து ஆராயலாம்.

1. கல்விநிலையங்கள்
2. வீட்டுச்சூழல்

**கல்விநிலையங்கள்:**

தமிழ் இளம் பெண்கள்கல்வி நிலையங்களில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இலங்கையின் கல்வித்திட்டத்திலிருந்து முழுதாக வேறுபட்ட இம் மேலைத்தேய நாட்டுக் கல்வித் திட்டமானது மாணவர்களது வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியத் தேவைகளை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு பாலியல் கல்வி புகட்டப்படுகிறது. இதனால் மாணவர்கள் மனித உடல் உறுப்புக்கள் பற்றியும், அவற்றின் இயக்கங்கள் பற்றியும் அறிகின்றனர். அதுமட்டுமல்லாமல் உடல் வளர்ச்சியில் ஏற்படுகின்ற மாற்றங்களையும், அம் மாற்றங்களினால் ஏற்படக்கூடிய உளவியல் ரீதியான மாற்றங்களையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் பாலியல் கல்வி கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இப்பாட நேரங்களின் போது மாணவர்களுக்குத் தேவையான விளக்கங்களுக்காக படங்களும், வீடியோப் படங்களும் உபகரணங்களாக பயன்படுத்தப்படுகின்றன. வகுப்பில் ஒரு தமிழ் மாணவி மட்டும் இருந்தால் இப்பாட நேரங்களில் ஒரு மாதிரி சமாளிப்பாள். ஆனால் கூடவே ஒரு தமிழ் மாணவன் இருந்தானேயானால் அம் மாணவியின் கதி அதோ கதிதான். ஆண்களுடன் இப்படிப்பட்ட விஷங்களைப் பகிர்ந்து பழக்கப்படாத எமது இளம் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதே. ஆசிரியர் மேலதிக அறிவுக்காக புத்தகங்களைக் கொடுத்து வாசித்து விட்டு வரும்படி மாணவர்களைப் பணிப்பார். மறுநாள் அப்பாட சம்பந்தமான கலந்துரையாடலில் எல்லா மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பதே ஆசிரியரின் எதிர்பார்ப்பாகும். வீட்டுக்குப் புத்தகத்தைக் கொண்டு போனால் அங்கு வாசிக்கவோ யாரிடமும் கருத்துக் கேட்கவோ முடியுமா? பாலியல் விஷயங்களை அப்பட்டமாக விளக்கும் படங்களைக் கொண்ட புத்தகத்தைக் கண்டாலே பெற்றோர் கடித்துக் குதறி விடுவார்களே என்ற பயத்தினாலேயே அதை வாசிக்காமலே வந்து.... வகுப்பில் திரு திருவென முழித்து... ஆசிரியரிடமும் திட்டு வாங்கி... இவ்வளவு அவலங்களையும் பெரும்பாலான எமது மாணவிகள் சந்திக்கின்றனர். கணிதம் ஆங்கிலம் போல் பாலியல் என்பதும் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறது என்பதை எத்தனை பெற்றோர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்? பாலியல் என்ற சொல்லே தீண்டத்தகாத சொல்லாய் தாமும் மயங்கி, தம் பிள்ளைகளையும் குழப்புவதாலேயே பாலியல் கல்வி கற்பதில் தமிழ் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.' இந்தப் புள்ள ஸ்கூலுக்குப் போறன் எண்டு சொல்லி கண்ட கண்ட புத்தகங்களையெல்லாம் வாசிக்குது' என்று பெரும்பாலான தமிழ் பெற்றோரின் முணுமுணுப்பைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது. இம் முணுமுணுப்புக்குப் பயந்தே தமிழ் மாணவிகள் பலர் வாழ்க்கையில் அறிந்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான விஷயங்களை எல்லாம் கோட்டை விட்டுவிடுகின்றனர். இப்பேர்ப்பட்ட சிக்கலில் இருக்கும் தமிழ் இளம் பெண்களால் என்னதான் செய்யமுடியும்? யாரிடம் சென்று முறையிட முடியும்? என்னிடம் தமிழ் படிக்கும் 17 வயதுடைய ஒரு மாணவியின் மன வருத்தத்தை இவ்விடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒருநாள் வகுப்பில் இப்பிரச்சினை சம்பந்தமான கலந்துரையாடலின் போது நான் மேலே குறிப்பிட்ட மாணவி "ஏன் அன்ரி எங்களின்ர பெற்றோர் வெட்கப்பட்டு மறைச்சு வைக்க வேண்டிய விஷயங்கள் எது எண்டு தெரியாம பிழை விடுகினம். சாமத்திய வீடு செய்வது எனக்கு விருப்பமே இல்லை. ஏனென்டால் நான் பெரியபிள்ளை ஆன விஷயம் மற்ற ஆட்களுக்குத் தெரியிறது பற்றி எனக்கு வெட்கமா இருந்திச்சு. ஆனால் நான் சொல்லுறதைக் கேட்காம சாமத்திய வீட்டை பெரிசா செய்தவையள். ஆனா வகுப்பில ரீச்சர் தர்ற புத்தகங்களை மட்டும் படிக்க வேண்டாம் எண்டு தடுக்கினம். கண்ட புத்தகங்களையெல்லாம் வாசிக்க உனக்கு வெட்கமாயில்லையா? எண்டு கேக்கினம்." இது ஒரு மாணவியின் குரலாக எனக்குக் கேட்கவில்லை. எத்தனையோ இளம் பெண்களின் குரல்களாக இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

> தமிழ்ப் பெண்ணே!
> தமிழ் காத்து நாட்டினைக்
> காப்பாய் - பெண்ணே
> தமிழரின் மேன்மையைக்
> காப்பாய்
> தமிழகம்
> நமதென்றார்ப்பாய்
> தடையினை காலினாற்றோப்பாய்
>
> – பாவேந்தர் –

https://tamileelamarchive.com/

மேலும் இங்குள்ள கல்வி முறைகளில் அனுபவக் கல்விமுறை என்பதும் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதற்காக சிறுவயதிலிருந்தே மாணவர்களைச் சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் கூட்டிச் செல்லும் வழக்கம் இருந்து வருகிறது. பின்பு அப் பிரயாணங்களினால் மாணவர்களுக்குக் கிடைத்த அனுபவங்களைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுவதும், படங்கள் கீறுவதும், கட்டுரைகள் எழுதுவதும் எல்லாப் பாடசாலைகளிலும் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளாகும். இதன்மூலம் மாணவர்களது கற்பனைத் திறன், மாணவர்களுக்கிடையிலான ஒற்றுமையும் வளர்த்தெடுக்கப்படுகின்றது. புத்தகக் கல்வியைவிட அனுபவக் கல்வியினூடாக நிறைய விஷயங்களை எளிதில் மாணவர் மனதில் பதியப்பண்ணலாம் என்ற கருத்துக்கு இங்கு மாற்றுக் கருத்து இல்லை. இப்பேர்ப்பட்ட உல்லாசப் பயணங்களுக்கு குறிப்பாக இரண்டு மூன்று நாட்கள் தங்க வேண்டி இருப்பின் சில பெற்றோர் தம் இளம் வயதுப் பெண் பிள்ளைகளை விடுவதில்லை. இதனால் இம் மாணவிகள் இங்குள்ள கல்வி முறையைப் பின்பற்றுவதில் பல சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். இது மட்டுமல்ல பாடசாலைகளில் நடக்கும் பொதுவான கொண்டாட்டங்களுக்கோ, சக மாணவர்களது பிறந்தநாள் விழாக்களுக்கோ போவதற்குக் கூட அனுமதி கிடைக்காமல் தவிக்கும் தமிழ் மாணவிகள் இருக்கின்றனர். இக் கொண்டாட்டங்களுக்குப் போனாலுமே இப்பெண் பிள்ளைகள் ஒரு மூலையில் இன்னுமொரு தமிழ் மாணவிக்குப் பக்கத்தில் போய் இருந்து கிசுகிசுப்பதையே காணக் கூடியதாய் இருக்கின்றது. அதாவது இவர்கள் எங்கு போனாலும் சுதந்திரமாய் இயங்குவதில்லை. அதற்காக குடித்துவிட்டு ஆண்பிள்ளைகளுடன் கூத்தாட விட வேண்டும் என்று சொல்லவில்லை. வரம்பு மீறப்படாத நிலையில் சுதந்திரமாக சந்தோஷமாக இருக்கலாம்தானே! ஓய்வு நேரங்களில் சக மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதற்குக் கூட பெரும்பாலான பெண்பிள்ளைகளுக்கு அனுமதி கிடைப்பதில்லை. இதனால் சக மாணவர்களின் விமர்சனத்துக்கு ஆளாகும் தமிழ் மாணவிகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். வேறுநாட்டவர்கள், வேறு நிறத்தவர்கள் போன்ற மனப்பான்மையால் ஏற்கனவே வகுப்பில் முழு சுதந்திரத்துடன் இயங்க முடியாமல் இருக்கும் இளம் வயது மாணவிகள் இதனால் மேன்மேலும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இப்படி பல இளம் வயதுப் பெண்கள் மேலைத்தேய கலாச்சாரத்துடன் இணைவாக்கம் செய்யமுடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள். அதே சமயம் தாம் இணைவாக்கம் செய்து விட்டதாக நினைத்துக் கொண்டு திமிருடன் திரியும் இளம் வயதுப் பெண்கள் பற்றியும் அவர்களது பிரச்சினைகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். இம் மாணவிகள் தம்மை விதம் விதமாக அலங்கரித்துக் கொள்வதில் அதிக நாட்டமுடையவர்களாய் இருக்கின்றனர். அத்துடன் தமிழ் மாணவர்களுடன் சேர்வதையோ, தமிழ் கதைப்பதையோ விரும்பாதவராயும் காணப்படுகின்றனர். அதுவும் இங்கேயே பிறந்தவர்களாக இருந்தால் தமிழ் கதைக்கத் தெரியாதவராயும் உள்ளனர். நான் முன்பு குறிப்பிட்ட இளம் பெண்களை விட இவர்களது நிலை இன்னும் அனுதாபத்துக்குரியதாக உள்ளது. ஏனெனில் சரியான வழிகாட்டிகள் இல்லாததால் இவர்களால் இது நமது நாடல்ல, நாம் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்ல, இங்குள்ள மொழியும் எமது மொழியல்ல என்பவற்றையெல்லாம் விளங்கிக் கொள்ளமுடியாதவராய் இருக்கிறார்கள். தமிழ் சமூகத்துக்குள்ளும் வரமுடியாமல் அந்நிய சமூகத்துக்குள்ளும் முற்று முழுதாக ஒன்றமுடியாமல் தனிமைப்படுத்தப்பட்ட பெண்களாக இவர்கள் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட இளவயதுப் பெண்கள் திருமணப் பருவத்தை அடையும் பொழுதுதான் பெற்றோர்களுக்குப் பெரும் பிரச்சனையாக இருக்கும். இவ்வளவு காலமும் தன் மகள் நன்றாக இங்குள்ள மொழியைக் கதைக்கிறாள் என்றெல்லாம் புகழ்ந்து கொண்டு திரிந்த தமிழ் பெற்றோர்களால், அவள் அன்னிய இனத்தவன் ஒருவனைக் காதலித்து திருமணம் முடிக்கப் போகிறாள் என்ற செய்தியைத் தாங்க முடியுமா? அல்லது தாய் மொழி கதைக்கத் தெரியாமல், தாய்நாட்டையே மறந்து திரியும் அப்பெண்ணுக்கு தமிழ் மாப்பிள்ளை

## தீ

*அவளிடம் நான் ஒரு*
*பூவைக் கொடுத்தேன்*
*அவள் அதை*
*தீப்பொறியாக மாற்றினாள்*
*அதன் நறுமணம் சீறியெழுந்து*
*ஒளிப்பிழம்பாகக் கனன்றது*
*அதன் மென்மை*
*என் முகத்தில் காறி உமிழ்ந்தது*

*அவள் சொன்னாள்;*
*'எழுதுங்கள் — தீ'*
*படிப்பறிவில்லா சில*
*தொழிலாளர்கள்*
*வயல்களில் நாள் முழுதும்*
*பாடுபட்ட களைப்போடு*
*தலைகளைச் சாய்த்துக் கொண்டு*
*தமது கரும்பலகைகளில்*
*எழுதுகுச்சிகளால்*
*தட்டுத் தடுமாறி எழுதினார்கள்*
*"தீ"*

*மீண்டும் அவள் சொன்னாள்;*
*'இன்னொரு தடவை தெளிவாக*
*எழுதுங்கள் — தீ'*
*தலைகளைச் சாய்த்துக் கொண்டு*
*அவர்கள் எழுத ஆரம்பித்தார்கள்*
*இம்முறை அதிக*
*நம்பிக்கையோடு*

*கரும்பலகைகளின் மேல்*
*நகரும்*
*அவர்களுடைய விரல்கள்*
*தீச்சுடர்களாக மாறியதை*
*நான் கண்ணுற்றேன்.*
*அந்தச் சொல்லை*
*எழுதி முடித்த போது*
*'அவர்களுடைய கைகள்*
*தீப்பந்தங்களாக*
*ஒளிர்ந்து கொண்டிருந்தன.*

*'இதோ உங்களுக்குத் தேவையானால்*
*இப்போது எடுத்துக் கொள்ளுங்கள்'*
*சொல்லிக் கொண்டே அவள்*
*அந்தப் பூவைத் திரும்ப*
*என்னிடம் தந்தாள்.*

நன்றி:
'பெண்ணிலைவாதம் சில கேள்விகள்'
மூலம்: Manushi/ inbia
தமிழில்: மொலினா தேன்மொழி.

https://tamileelamarchive.com/

கிடைப்பது இலகுவான காரியமா? சிலவேளை நிறைய சீதனத்தைக் கையில் வைத்துக் கொண்டு அலைந்தால் ஒருவன் கிடைக்காமலா போவான்? இப்படி இணைந்த திருமண வாழ்க்கை சந்தோஷமானதாக அமையுமா? பிறகென்ன... ஒரிரு மாதங்களில் குடும்பத்தில் குழப்பம்... விவாகரத்து. இப்பேர்ப்பட்ட பல பிரச்சினைகளை இங்கே நான் குறிப்பிட்ட இரண்டாம் வகையைச் சேர்ந்த இளம் பெண்கள் எதிர்நோக்குகின்றனர். எனவேதான் கலாச்சார முரண்பாடுகளின் விளைவுகளால் எல்லா வகையாலும் பாதிக்கப்படுவோராய் எமது இளம் பெண்கள் இருக்கின்றார்கள் என்பது அசைக்க முடியாத உண்மை.

**வீட்டுச் சூழல்:**

பெற்றோர் பிள்ளைகள் உறவு முறையில் உள்ள இடைவெளி எமது வளர்ப்பு முறையில் மிகப் பெரியதாக உள்ளது. சிறுவயதிலிருந்தே பிள்ளைகளின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு செவிமடுக்கும் ஒரு நல்ல தன்மையை மேலைத்தேய வளர்ப்புமுறையில் காணக்கூடியதாய் உள்ளது. இதனால் பிள்ளைகள் தன் நம்பிக்கையுடையோராய், தெளிவான சிந்தனை உடையோராய் வளர்கிறார்கள். ஆனால் நாம் எமது பிள்ளைகளின் கோரிக்கைகளை... கருத்துக்களை எவ்வளவு தூரம் செவிமடுக்கிறோம்? இங்கு வாழும் பெற்றோர் தாம் பிரிந்து தனித்தனியே வாழப் போவதைப் பற்றிக் கூட தம் பிள்ளைகளிடம் விளங்கப் படுத்தி அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்பதிலும் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். ஆனால் நாம் எப்பேர்ப்பட்ட பெரிய பிரச்சனைகள் ஆயினும் எமது பிள்ளைகளுக்குச் சொல்லுவதுமில்லை, அவர்களது அபிப்பிராயத்தைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை. இப்படிப்பட்ட ஒரு வீட்டுச் சூழலில் வாழும் இளம் பெண்கள் பாடசாலையில் நடக்கும் பிரச்சினைகளையோ, அல்லது தமது மனப்பிரச்சினைகளையேனும் பெற்றோர்களிடம் எப்படிச் சொல்லுவார்கள்? எத்தனை வயதானாலும் அவள் எங்கள் மகள், அவள் எமக்குக் குழந்தை என்றெண்ணும் தமிழ் பெற்றோர்களால் எவ்வளவு தூரம் தம் மகளின் உணர்வுகளைப் புரிந்து நடக்க முடியும் என்பது சந்தேகமே. தம் பிள்ளைகளின் பிரச்சினைகளை இருந்து ஆற அமர கேட்டு அவர்களை வளர்க்கும் பெற்றோர்களாய் மட்டுமல்லாமல், வழிகாட்டும் நண்பர்களாயும் இருந்து தம் பிள்ளைகளுக்கு உதவும் பெற்றோரும் எம்மில் மிகக் குறைவே. இதனால் கூடுதலாக பாதிப்புக்குள்ளாவது தமிழ் இளம் பெண்களே. ஆகையால் இவர்கள் பாடசாலையில் மட்டுமல்ல வீட்டிலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவராய் உள்ளனர்.

'இங்கிருக்கிற பெட்டையளோட சேர்ந்து இவளும் கெட்டுப்போயிருவா' என்ற பயத்தினாலேயே 18 வயது நெருங்கும் பொழுதே மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கும் தமிழ் பெற்றோரும் உளர். பெற்றோரால் இளம் பெண்ணுக்குப் பூட்டப்பட்ட கடிவாளம் புருஷன் என்ற பெயரில் வரும் ஒருவனிடம் கைமாறுகிறது. பெற்றோரின் முடிவுக்கு எதிர்க் கருத்து தெரிவிக்க முடியாமல் இருக்கும் இவ்விளம் பெண்கள் படிப்பை இடையில் நிறுத்தி... தன் திறமைகளையெல்லாம் மூட்டை கட்டி விட்டு... கொழுத்த சீதனத்தைச் சுமந்து கொண்டு... இருபது பவுண் தாலிக்காக கழுத்தை நீட்டுகின்றனர். பிறகென்ன ஒரு வருடத்திலேயே குழந்தையும் கையுமாக... வண்டிலைத் தள்ளிக் கொண்டு.... கடைத்தெருக்களில் காணலாம். இளம் வயதுத் திருமணம் (பெண்) புலம்பெயர் நாடுகளில் தமிழர் மத்தியில் அதிகரித்து வருகிறது. எப்படியும் வாழலாம் என அமைக்கப்பட்டுள்ள இச் சுதந்திரமான சூழலில் தம் பெண் பிள்ளைகள் சிக்குப்படப் போகிறார்களே என எம் தமிழ் பெற்றோர் கலங்குவது நியாயமே! அதற்கு அவர்கள் தேடும் பரிகாரம் தான் பிழை. பரிகாரம் என நான் இங்கு குறிப்பிடுவது திருமணத்தையே.

தம் பிள்ளைகளைத் தம் சொத்தென அடக்கி ஆளாமல், பெற்றோர் தம் பிள்ளைகளது கருத்துகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும். இம்மதிப்பளித்தலானது பெற்றோர் பிள்ளைகளுக்கான புரிந்துணர்வை வளர்த்து, இருவருக்குமிடையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும். இந் நம்பிக்கையானது, பெற்றோருக்கு விருப்பமில்லாத காரியங்களைப் பிள்ளைகளைச் செய்யவிடாது தடுக்கும். அத்துடன் சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் மனதில் தாய் நாட்டுச் சிந்தனையை, எமது கலாச்சாரம், பண்பாடு, குடும்ப அமைப்பு முறையைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாக பதிய வைக்க வேண்டும். ஆண் பிள்ளையை ஒரு முறையிலும் பெண் பிள்ளையை இன்னொரு முறையிலும் வளர்ப்பது பிழையான வளர்ப்பாகும். வளர்ப்பு முறையில் தம் பிள்ளைகள் எல்லோரும் சமனே என்பதைக் கருத்திற் கொண்டு தமிழ் பெற்றோர் தம் பிள்ளைகளை வளர்த்தெடுத்தல் மிக அவசியமாகும். இதைவிட்டு 'தொப்புளில் பம்பரம் ஒட்டும் தமிழ் சினிமாப் படத்தை' தியேட்டரில் ஓடிஓடிப் போய் பிள்ளைகளுடன் பார்ப்பதால் மட்டும் பிள்ளை – பெற்றோர் உறவுமுறை வளராது. புலம்பெயர் நாடுகளில் பிள்ளை வளர்ப்பு முறை பற்றி சில நல்ல கருத்துக்கள் உள்ளன. அவற்றையும் ஏற்று எமது கலாச்சாரம் பண்புகள் கெடாமல் மிகவும் கவனமாக பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு எம் பெற்றோருக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

நான் இதுவரை குறிப்பிட்ட தமிழ் இளம் பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் கேட்டும், அறிந்தும் எழுதியவையே. குறிப்பாக டென்மார்க்கில் உள்ள இளம் பெண்களை மனதில் வைத்தே எழுதினேன் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

– மல்லீஸ்வரி ஆதவன்

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும் – சமத்துவத்தையும் கௌரவத்தையும் மதித்து குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக் கொண்டு வாழ்ந்தால், இந்தப் பால் வேறுபட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும்,

– தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்



https://tamileelamarchive.com/

# புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி.. தாய்மொழி! கற்பித்தலுக்கான சில முன்மொழிகள்.

புலம்பெயர் நாடுகளில் தாய் மொழிக் கல்வியின் தேவை என்ன? என் பிள்ளை ஏன் தமிழைப் படிக்க வேண்டும்? தமிழ் படித்தால் எதிர்காலத்தில் இங்கு வேலை கிடைக் குமா? போன்ற பல கேள்விகள் பெற்றோரால் இன்று கேட்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாமல் இக்ேள்விகளுக்கு தாமே விடையை யும் தேடியெடுத்து தம் பிள்ளைக ளுக்கு தாய் மொழிக்கல்வி தேவை யில்லையென்று முடிவெடுத்த தமிழ் பெற்றோரும் எத்தனையோ பேர் இருக்கின்றனர். எமக்கென ஒரு நாடு வேண்டும், அதில் நாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உயரிய நோக் கத்துகாகத்தானே தாய் நாட்டில் எத் தனையோ ஜீவன்கள் தம் உயிரைப் பணயம் வைத்துப் போராடிக் கொண் டிருக்கிறார்கள்! எங்கள் எதிர்கால சந்ததியினராவது தாயக மண்ணில் சுதந்திரமாக இருக்கட்டும் என்ற தூய் மையான நோக்குடனேயே தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து போர் முனையில் நிற்கிறார்கள்! இந்த தியா கத்தை, நல்லெண்ணத்தை புரியாத பெரும்பாலான தமிழ் பெற்றோரால் புலம்பெயர்ந்து வாழும் எமது சிறார் களின் தாய்நாட்டுச் சிந்தனைகள், தமிழ்மொழிப்பற்று என்பன மழுங்க டிக்கப்படும் ஒரு இக்கட்டான நிலைமை இன்று ஏற்பட்டுக்கொண் டிக்கிறது. இந்நிலைமையை மேலும் வளரவிட்டால் எமது போராளிக ளின் உயிர்த்தியாகங்களுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். இதனை தடுத்தாற் கொள்ள வேண்டியது தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களது தலை யாய கடமையாகும்.

இக் கடமையை சரியான முறை யில் நிறைவேற்ற ஆசிரியர்கள் என்ன செய்யலாம் என்பதற்கான சில ஆலோசனைகளை வழங்க விரும்புகி றேன்.

1. பெற்றோரின் பூரண ஒத்து ழைப்பைப் பெறுவதற்கான செயற் பாடுகள்.

2. புலம்பெயர் நாடுகளின் கல்வித் திட்டத்துக்கமைய தமிழ் ஆசிரியர் கள் பயிற்சி பெற ஊக்குவிப்பு.

3. தாய்மொழிக் கல்வியின் மூலம் சிறார்களின் தாய் நாட்டுச் சிந்த னையை வளர்த்தல்.

★

## பெற்றோரின் பூரண ஒத்துழைப்பைப் பெறுவதற்கான செயற்பாடுகள்.

ஒரு பிள்ளையின் கல்வி சீரான முறையில் அமைய வேண்டுமாயின் அதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். இதனாலேயே ஐரோப்பிய நாடுகளின் கல்வித்திட் டங்களில் பெற்றோர் – ஆசிரியர் ஒத்துழைப்பு என்ற அம்சம் கொட்டை எழுத்தில் எழுதப்படுகிறது. ரியூசன் மாஸ்ரரிடம் அல்லது டியூட்டரிகளிடம் தம் பிள்ளைகளின் கல்வியை ஒப்ப டைத்து விட்டு 'ஹாயாகத்' திரிந்த பெரும்பாலான தமிழ் பெற்றோருக்கு 'கல்வி விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குதல்' என்பது விளங்காமல் இருப்பது நியாயமே. இப்படி இருப்ப வர்கள் ஒரு வகையினர்; மற்ற வகை யினர் தம் பிள்ளைகளின் வகுப்பாசி ரியர் அல்லது மற்ற பாட ஆசிரியர் களுக்கு வழங்கும் கொஞ்ச ஒத்து ழைப்பையாவது தமிழ் ஆசிரியர்க ளுக்கு வழங்காமல் இருப்பவர்கள். மூன்றாம் வகையினர்; தமிழ்மொழியே தன் பிள்ளைக்குத் தேவையில்லை யென இருப்பவர்கள். இம் மூவகைப் பெற்றோருக்கும் தெளிவான விளக் கம் கொடுக்கப்படவேண்டியது அத் தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. இதற்கான சில வேலைத் திட்டங் களை அமைத்து அதன் மூலம் பெற் றோரின் கவனத்தை ஈர்த்தெடுக்க லாம்.

இவ்வேலைத் திட்டங்களில் கருத் தரங்குகள், கலந்துரையாடல்கள் வைத்தல் சிறந்த வேலைத்திட்டமாக அமையும். இதற்கு கீழ் குறிப்பிடும் முக்கியமான அம்சங்களை மையமா கக் கொள்ளலாம்.

* ஒரு குழந்தை தான் யார் என்ப தையும், தன் வரலாற்றுப் பின்னணி எது என்பது பற்றியும் அறிந்திருத்த லின் முக்கியத்துவம்.

* இரு மொழி பேசும் இரு கலாச்சாரத்துக்கு உட்பட்டவர்களே எமது சிறார்கள் என்பதையும், அதை எங்கள் பிள்ளைகள் அறிந்திருத்தல் எவ்வளவு முக்கியம் என்பது பற்றியும் விளக்கலாம்.

* எமது பிள்ளைகள் தம் பெற் றோருடனும் தாய் நாட்டில் வசிக்கும் உறவினர்களுடன் தொடர்பு கொள் ளக் கூடிய உணர்வு பூர்வமான ஊட கமாக தாய்மொழிக்கல்வி எப்படி அமைகிறது என்பதையும் தெளிவாக் கலாம்.

* தாய்மொழிக் கல்வியின் தேர்ந்த ஒரு பிள்ளையாலேயே பிறமொழிகளி லும் புலமைத்துவம் பெறலாம் என்ற உளவியல் ரீதியான காரணத்தையும் விளக்கலாம்.

* 'பெற்றோரின் ஒத்துழைப்பு' என்ற தலைப்பில் அதன் முக்கியத் துவத்தையும் எந்த வகையான ஒத்து ழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது என் பதை விளக்கலாம்.

* பெற்றோரை மேலும் ஊக்கு விப்பதற்காக கண்காட்சிகள் வைப் பது பற்றியும், பெற்றோர், மாணவர், ஆசிரியர்கள் சேர்ந்து செல்லக்கூடிய சுற்றுலாக்கள் பற்றியும் கலந்துரையா டலாம்.

இப்படிப்பட்ட விடயங்களைப் பெற்றோருடன் கலந்தாலோசிப்பத னால் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கி ருக்கிறது. அத்துடன் தமிழ் மொழிக் கற்பித்தல் சம்பந்தமாக எமது மத்தி யில் ஒரு உடன்பாடான கருத்தையும் ஏற்படுத்தக்கூடியதாயும் இருக்கும்.

## புலம்பெயர் நாடுகளின் கல்வித் திட்டத்துக்கமைய தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெற ஊக்குவிப்பு

புலம்பெயர் நாடுகளில் தாய் மொழிக்கல்வி கற்பிப்பது மிகவும் சிரமமான விடயம் என்பது தான்

நான் கண்ட அனுபவம். கற்பிக்கும் ஆசிரியர்களின் திறமை வகுப்புக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை யில் அறியக்கூடியதாய் இருக்கும். ஏனென்றால் தாய்மொழிக்கல்வி கட்டாயபாடமாக இல்லை. புலம்பெயர் நாடுகளுக்குரிய மொழியையே பெரும் பாலான நேரங்களில் கேட்டும், கதைத்தும் பழக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழி கற்றல் என்பது கஸ்டமான காரியமாகவே படுகிறது. அதை இலகுவாக்கி மாண வர்களுக்கு விருப்பத்தையும், ஆர்வத் தையும் உண்டாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு. அதனாலேயே ஆசிரியர் திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டியது மிகவும் முக்கியமாகின்றது. அதாவது மற்றைய மொழிகளைக் கற்பிக்கும் முறைக்கும் தாய் மொழி கற்பிக்கும் முறைக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது. அதனாலேயே இங்குள்ள மொழி கற்பித்தலுக்கான பாடத்திட் டமும் அமைய வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கின் றேன். இவ்விடயத்தையிட்டு எனது சில கருத்துக்களை கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர் கள் தான் கற்பிக்கும் நாட்டின் மொழி யிலும் ஓரளவுக்கு தேர்ச்சி பெற்றி ருக்க வேண்டும். ஏனெனில் மாண வர்களுக்கு சில தமிழ்ச்சொற்களின் கருத்துக்களை தமிழில் விளங்கப்படுத் துவதை விட அவர்களுக்குக் கூடுத லான பரிச்சயமான மொழியில் சொல்வது மனதில் இலகுவாகப் பதி யும் என்பது நான் கண்ட உண்மை. எனவே தான் ஆசிரியர்கள் அந்தந்த நாட்டுமொழியையும் தெரிந்து வைத் திருப்பது மிக முக்கியமாகும், இதை விடுத்து 'தமிழ் தானே படிப்பிக்கி றேன் தமிழில் மட்டுமே விளக்கம் கொடுப்பேன்' என ஆசிரியர்கள் பிடி வாதம் பிடித்தால், மாணவவர்களின் வருகை நிச்சயம் குறையும் என்பது எனது கணிப்பு.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் நாட்டுக் கல்வித்திட்டம், கற்பிக்கும் முறை என்பவற்றை அறிந்திருத்தலும் மிக மிக முக்கியம். இந்நாடுகளில் நடக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்களில் பங்கு பற்றுவதன் மூலம் தமிழ் ஆசி ரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள லாம். சில புலம்பெயர் நாடுகளில் இவ்வசதிகள் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட நாடுகளில் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர் கள் தங்களுக்குள்ளேயே தொடர்பு களை வளர்த்துக்கொள்ளலாம். தமிழ் ஆசிரியர் சங்கங்களை அமைத்து அவற்றின் உதவியுடன் பயிற்சி வகுப் புக்கள், பொதுவான பாடத்திட்டம் உருவாக்கல், பொதுவான பரீட்சை கள் வைத்தல் போன்ற காரியங்களில் ஈடுபடலாம்.

https://tamileelamarchive.com/

செயற்படுத்தினால் தமிழ்கற்பித் தல் என்பது சிறப்பான முறையில் அமையும் என்பது என் கருத்து.

* விதவிதமான அட்டைப்படங் களுடன் எத்தனையோ தமிழ் பாட நூல்கள் வெளியிடப்பட்டாலும் இந் நூல்களுக்கான ஆசிரியர் வழிகாட்டி கள் தெளிவான விளக்கத்துடன் அமையாவிட்டால், இவற்றால் மாண வர்கள் பயன்பெறுவார்கள் எனக் கூறமுடியாது. ஒரு பாடத்தை ஆசிரி யர் எப்படிக் கற்பிக்கப் போகிறார் என்பதிலேயே மாணவர்களின் மொழி யறிவு வளர்ச்சி தங்கியுள்ளது. இவ் வகையில் ஆசிரியருக்கு உதவியாக இருப்பவை ஆசிரியர் வழிகாட்டி களே. உதாரணமாக டென்மார்க்கி லுள்ள டெனிஸ் மொழிப்பாட நூல் கள், பயிற்சிநூல்களுக்கான ஆசிரியர் வழிகாட்டிகள் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. இதனாலேயே இங்குள்ள ஆசிரியர்க ளால் திட்டமிட்ட முறையில் செயல் படமுடிகிறது. புலம்பெயர்நாடுகளில் தமிழ் கற்பித்தலுக்காக வெளியிடப் பட்ட பெரும்பாலான நூல்கள் என் கைகளில் கிட்டின. இந்நூல்களை வெளியிட்டோர் ஆசிரியர் வழிகாட்டி என்பதை கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. இலங்கையின் பாட நூல்களோ, ஆசிரியர் வழிகாட்டி களோ தமிழை இரண்டாம் மொழி யாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெரிதாக பயன்தராது. அதனால் தான் புலம்பெயர்நாடுகளின் தேவைக் காக வெளியிடப்படும் தமிழ்மொழி பாடல்நூல்களை வெளியிடுவோ ருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். 'தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவக் கூடிய வித மாக ஆசிரியர் வழிகாட்டிகளையும் வெளியிடுங்கள்'.

அடுத்து இங்கு மேலைத்தேய நாடுகளில் கல்வி கற்பிப்பதற்கு நவீன உபகரணங்கள் நிறைய பாவிக்கிறார் கள். குறிப்பாக கணணி மூலம் பாட களைக் கற்பித்தல் முறை இங் வெகுவாக வளர்ந்துள்ளது. இந் நவீ தொழில் நுட்பமுறையினால் மாண வர்கள் பாடரீதியான விஷயங்களை கற்பது மட்டுமல்லாமல் விஞ்ஞா முன்னேற்றத்தின் விளைவுகளையு அறிகிறார்கள். மொழி கற்பதில் ஒ மாணவனுக்கு பிரச்சினையென்றா கணனி மூலம் மிக இலகுவாக எழு வாசிக்க, சொற்களின் கருத்துக்கள அறியப் படிக்கலாம். இவை போன் நவீன உபகரணங்களை தமிழ் கற்பி தலுக்குப் பாவித்தல் மிகவும் பய தரும். இதன் மூலமும் மாணவர் ளின் தமிழ் கற்கும் ஆர்வத்தை இன் னும் தூண்டலாம் என்பது அனுப பூர்வமான உண்மை.

மேலே நான் கூறிய கருத்துக்கள் யாவும் ஆசிரியர்களுக்கு பெரிது பயனளிக்கக் கூடியன. கருத்துக்கள் ஆலோசனைகளை வழங்குவது இலகு அவற்றை செயல் படுத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்கு தெரியும். ஒன்றுமே செய்யாமல் இருப்பது ஆரோக்கியமற்றதாகவே விளங்கும். இதை ஆசிரியர்கள் சமூகப் பிரக்ஞையுடன் செயற்படுதல் மிக அவசியமானதாகும்.

## தாய் மொழிக் கல்வியின் மூலம் தாய்நாட்டுச் சிந்தனையை தமிழ் பிள்ளைகள் மனதில் வளர்த்தல்.

ஒரு பிள்ளையின் தாய்நாட்டுச் சிந்தனையானது தாய்மொழி மூலமே வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அப் பொழுதுதான் அந்தச் சிந்தனை தூய் மையானதாகவும், தெளிவானதாக வும் அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இக்கடமையை செவ்வனே நிறைவேற்ற பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகிய முத்தரப் பினரும் இணைந்து செயலாற்ற வேண்டும் இச் செயற்பாட்டுக்கு உதவக்கூடிய சில வேலைத்திட்டங் களை இங்கே குறிப்பிட விரும்புகி றேன்.

கலை, கலாச்சாரம் சம்மந்தமான விழாக்களை ஒழுங்குபடுத்தல் சிறந்த தொரு வேலைத்திட்டமாகும். புலம் பெயர் நாடுகளில் விழாக்களுக்குப் பஞ்சமில்லை என்றாலும் இன்று விழாக்களை நடத்தும் நோக்கம் வழி

நவறி வேறு திசையில் சென்றுகொண்டிருக்கிறது. அதாவது சிறார்கள் மனதில் தாய்நாட்டுச் சிந்தனையை வளர்ப்பதை விட்டு வேறு சிந்தனைகளைத் தூண்டக்கூடிய விதமாய் பெரும்பாலான விழாக்கள் அமைகின்றன என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமே. சீரழிந்த தமிழ் சினிமா கலாச்சாரத்துக்குள் எங்கள் பிள்ளைகள் சிக்குப்பட இவ்விழாக்கள், கொண்டாட்டங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. எமது நாட்டின் சமூக அமைப்பை, வரலாற்றை, பிரச்சினைகளை, புலம் பெயர் வாழ்வின் அவலங்களை, அவற்றுக்கான தீர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய விஷயங்களை மாணவர் மனதில் பதியும் வகையில் நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். இன்று ஈழத்தில் நடக்கும் பல நிகழ்ச்சிகள் தமிழரின் அவல நிலையை, போராளிகளின் தியாகங்களை, ஒவ்வொரு தமிழரதும் கடமைகளை வலியுறுத்தக்கூடியனவாய் அமைகின்றன. இவ் இக்கட்டான சூழலிலும் இயல், இசை, நாடகம் போன்ற முத்திரைகளின் மூலமாகவும் எமது எதிர்காலச் சந்ததியினரது நாட்டுப்பற்று வளர்க்கப்படுகிறது. பல வழிகளிலும் புலம் பெயர்ந்த தமிழர்களாகிய எம்மால் இக் கடமையை சிறப்பாக நிறைவேற்றலாம், நிறைவேற்ற வேண்டும்.

* தமிழ் சிறார்களின் நாட்டுப் பற்றை வளர்த்தெடுக்கக்கூடிய இன்னொரு வழி 'இலங்கை' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிட்டகாலத்து ஒரு வேலைத்திட்டத்தை அமைப்பதாகும். டென்மார்க்கிலுள்ள பாடசாலைகளில் ஒரு கல்வி ஆண்டில் மூன்று அல்லது நான்கு முறைதான் மேலே குறிப்பிட்ட படி வேலைத்திட்டத்தை அமைப்பார்கள். இவ் வேலைத்திட்டத்தின் போது பாடசாலை மாணவர்கள் எல்லோரும் குழுக்களாக பிரிக்கப்பட்டு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் இயங்குவார்கள்.

உதாரணம்: "நாடுகள்" என்ற தலையங்கத்தை எடுத்தால் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நாட்டைத் தேர்ந்தெடுத்து, அந்நாட்டுத் தரைத்தோற்றம் முதல் சனத்தொகை வரையிலான சகல ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுவர். பெரும்பாலும் ஒரு வாரத்திற்குப் பிறகு கடைசி நாள் வகுப்பறைகளில் கண்காட்சிகளை நடத்துவார்கள். இவற்றைப் பெற்றோர், சகோதரர் வந்து பார்வையிடுவார்கள். இம் முறையினால் மாணவர்களுக்கு உலக நாடுகள் பற்றிய தெளிவான அறிவு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இம் முறையைத் தமிழ் வகுப்புக்களிலும் செய்து பார்க்கலாம். "இலங்கை" என்ற தலைப்பின் கீழ் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தரைத்தோற்றம் பற்றி, காலநிலை பற்றி இப்படிப் பல அம்சங்களை ஒவ்வொரு குழுவிடமும் கொடுக்கலாம். கடைசியில் அவர்கள் கீறிய படங்கள், செய்த பொருட்களைக் கண்காட்சியில் வைத்து பெற்றோர்களின் பார்வைக்கு விடலாம். இச் செயற்பாடுகளின் மூலம் தாய்நாட்டைப் பற்றி மாணவர்களின் மனதில் பல விஷயங்களைப் பதிய வைக்கலாம். இப்படிப் பட்ட வேலைத்திட்டங்களில் மாணவர்கள் விருப்பத்துடன் ஈடுபடுவார்கள் என்பது நான் கண்கூடாகக் கண்ட உண்மையாகும்.

* பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிக் மூலம் தாய்நாட்டுச் சிந்தனைகளை தமிழ் சிறார்கள் மனதில் ஏற்படுத்தலாம். எமது பண்பாடு பாரம்பரியத்தை விளக்கும் விஷயங்களைத் தலையங்களாகக் கொடுத்து இப் போட்டிகளை வைப்பதனால் மாணவர்களின் சொல்வளம், பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை வளர்வதோடு தாய்நாட்டைப் பற்றின அறிவும் வளரும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் போட்டி வைத்தல் என்பது இங்குள்ள கல்வித்திட்டத்தில் இல்லாத ஒன்று. டென்மார்க் கல்வித் திட்டத்தில் பரீட்சை வைத்தல் முறையே எட்டாம் வகுப்பிலேயே ஆரம்பமாகிறது. ஏனெனில் பரீட்சைகள், போட்டிகள் என்பன மாணவர்கள் மனதில் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும் என்ற கருத்தாலேயே. இங்கு பிறந்து இங்கேயே வளரும் தமிழ் சிறார்களுக்கும், சிறு வயதிலேயே புலம்பெயர்ந்த தமிழ்ப் பிள்ளைகளுக்கும் போட்டிகள் என்பது முற்றுமுழுதாக புதிய விடயமே. எனவேதான் போட்டிகளை ஒழுங்குபடுத்துவோர் போட்டிகளுக்கான நிபந்தனைகள், பரிசளிப்பு போன்ற பல விடயங்களில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் மத்தியில் தாழ்வு மனப்பான்மை வராமல் தடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களையே சாரும். இவ் விடத்தில் நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் டென்மார்க்கில் நடாத்தப்பட்ட தமிழ்த் திறன் போட்டிகள் சிலவற்றுக்கு நடுவராகப் போயிருக்கிறேன். எனக்குக் கிடைத்த அனுபவங்களின்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை விட அவர்களின் பெற்றோர்களாலேயே தம் பிள்ளைகளின் தோல்வியைத் தாங்கமுடியாத ஒரு மனநிலை காணப்படுகிறது. இந் நிலமையில் இப்போட்டிகள் தேவைதானா என்ற எண்ணமும் எனக்கு ஏற்பட்டதுண்டு. எனவே இங்கு குறிப்பிட்ட பிரச்சினைகளை பெற்றோர், ஆசிரியர், மாணவர் எனும் முற்தரப்பினரும் புரிந்துணர்வுடன்கூடிய ஒத்துழைப்புடன் இவற்றை வென்றாகலாம்.

நான் மேலே குறிப்பிட்ட ஆலோசனைகள் யாவும் என் அனுபவத்தினூடாக எழுந்தனவே. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்லாது தமிழ் பெற்றோரும் இக்கட்டுரையை வாசித்தால் பயன்தரும் என்பது என் அபிப்பிராயம்.

## திருமதி தவநாதன் வளர்மதி



தாய்த்தேசம் மீதான பற்றுதல் தளத்தில் நின்று பணியாற்றிய இவர் தாயகம் மீளும் சிந்தையுடன் திரிந்தார். புலம்பெயர் வாழ்வின் இரட்டைத்தன்மை, போலித்தன்மையான உறவுகள், பட்டுவாடாக்கள், அகதித்துயரம் எனத்தொடரும் இந்த துக்க சாகரத்துள் விடுபட வேண்டி உழைக்க வேண்டியதின் அவசியத்தை அவர் உணர்ந்து தமிழ் பெண்கள் அமைப்பினருடன் இணைந்து செயலாற்றினார்.

*14.08.96* கொடும் கார்விபத்தில் சிக்கி இவரும் இவரது குழந்தை தவ்சன்யாவும் மரணமடைந்து விட்டார்கள். நேற்றும் எம்முடன் சிரித்திருந்த அவர் தீக்கிரையானதை அறிந்து துடித்தோம்; நெஞ்சில் அழுதோம். இடையில் வந்த மரணம் கொடியது. எப்படி... இந்த அநியாயச் சாவு எப்படியோ நிகழ்ந்து விட்டது? எம்மோடு ஒத்திசைத்த அந்த இதயத்திற்கு எமது இதய அஞ்சலிகள்.

https://tamileelamarchive.com/

# இலங்கையில் வாழும் என் தமிழ் தோழி

**கவிஞர் கண்ணதாசன்**

தோழிநின் கடிதம் கண்டேன்
துவண்டது நெஞ்சம்! ஐயோ!
ஈழவர் நாட்டில் நீயும்
இன்புறுங் கணவர் தாமும்
ஆழியார் அலைகள் மோத
அழிவதை எண்ணுங் காலை
பாழுமித் தமிழர் நாட்டின்
'பாப'த்தை நினைக்கின் றேன்யான்

எங்கோ போனான்; "வெற்றி
ஏறுநான்" என்றான்! இன்று
அங்கங்கே தமிழ ரெல்லாம்
'அவன் வேறு நான்வே றென்றார்
சிங்கம் போல் முன்னோன் சென்றான்;
தீப்பசிக் குணவு தேடி
அங்கெல்லாம் பின்னோன் சென்றான்;
அடங்கினன், ஒடுங்கி மாண்டான்.

தங்கமே! ஈழ நாட்டார்
தாய்மொழி அழிப்ப தற்குப்
பொங்குவ தெழுதி யுள்ளாய்
பொறுமினேன் படித்த போது!
இங்கென்ன வாழ்வு? தூய
எழில் மொழி வெட்டிச் சாய்க்க
இங்குள்ள தமிழ னேதான்
எழுகின்றான் கொடுவாள் தூக்கி!

என்னயான் சொல்வேன்; வாழும்
இருபது லட்சம் பேரும்
என்னவர்! எனது மூச்சு!
இழைபிரித் தெடுத்த பாகம்!
அன்னமே வருந்த வேண்டாம்!
'அழிவது தமிழே' என்று
சொன்னவர் அழியுமாறு
துவக்குக போரை! வெல்வோம்!

குருதியே ஓடினாலும்
குடல்நிணம் சிதைந்த போதும்
பரிதியின் மாலை வண்ணம்
படைத்தது மண்ணென் றாலும்
வருதுயர் தமிழுக் கென்றே
'வாழிய' பாடல் பாடி
உறுதியில் இறங்கு! வெற்றி
உனக்கிது இயற்கை வேதம்!

மொழியின்றி விழிக ளில்லை
மூச்சில்லை பேச்சு மில்லை!
கழிசடை உடமை யாளர்
கருவிலே கயமை தோய்ந்தோர்
இழிமொழி வீசி னாலும்
எடுபிடி வேலை செய்து
அழிவுனக் கீந்த போதும்
அஞ்சிடேல் பண்பு குன்றேல்!
நாமெல்லாம் தமிழ் மக்கள்
நமக்குநாம் பாது காப்பு!
நாமெல்லாம் அழிவ தால்ஓர்
நாட்டினர் வாழ்வா ரென்றால்......

### கடும் உழைப்பாளி

உலகிலே பெண்களே அதிகமான கடின உழைப்பாளிகள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் செல்வி போளி கார்ட்பை. இவர் தனது ஒன்பதாவது வயதில் உழைக்க ஆரம்பித்து எண்பத்தாறு ஆண்டுகள் வரையில் ஒரே தொழிற்சாலையில் தொடர்ச்சியாக உழைத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தில் 'லீசெஸ்டர்' என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலையில் வேலைசெய்து வந்த போளி 1932–ம் ஆண்டு தனது தொண்ணூற்றைந்தாவது வயதில் காலமானார். உலகிலேயே அதிக காலம் உழைத்த பெண்மணி இவர் தான் என்று குறிப்பிடப்படப்படுகிறது.

### முதல் பெண் விண்வெளியாளர்

1984–ஆம் ஆண்டில் Pay load specialist எனப்படும் பதவிக்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் விண்ணப்பங்களைக் கோரியது. நூற்று இருபதுபேர் விண்ணப்பித்தனர். பன்னிரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்பத்தியொரு வயதான மாலதி சந்திரமோகன். முதல் பெண் விண்வெளியாளர் என்ற பெருமமை இவரையே சாரும்.

### இராணுவங்களில் பெண்கள்

சில நாடுகளில் இராணுவத்தில் சேரும் பெண்களின் தொகை ஆண்களை மிஞ்சும் வகையில் உள்ளது. இதில் சிரியா முக்கியமானது. அங்கே இராணுவத்தில் சேரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தங்கள் நாட்டில் ஆண்களை விடப் பெண்கள் அதிக உற்சாகத்துடனும் நுட்பத்துடனும் வீரத்துடனும் போரில் ஈடுபடுவதாகச் சிரிய அரசு அறிவித்துள்ளது. சிரியாவில் பெண்களுக்கென்றே ஒரு தனி இராணுவப் பிரிவும் செயற்பட்டுவருகிறது. மூன்று வருட இராணுவப் பயிற்சி பெண்களுக்கு அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் போர்முனை செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

https://tamileelamarchive.com/

## தாய்க் கோழியும் குஞ்சுகளும்



வெளி முழுவதும்— உனது
சொந்தமெனக் கொண்டும்
முற்றத்தைப் பெருக்கியும்
பாட்டோடு திரிவாய்.

பெட்டைக் கோழி
கூவி விடியாதென்பதெல்லாம்
அறியாதார் பேச்சு
நீ கொடுமை கண்டு கூவுவாய்
கூவு!

குஞ்சுகளைப் பிரிதல் முடியா
வலியின் தீராத அழுகையை
வெளியெங்கும் அறைவாய்;
தீது, பகை
எத்திசை நின்று வரினும்
திசைகள் கலங்க எழுவாய்
உன் இறக்கைகளுக்கு
வலுவில்லாமல் போனது கண்டா— உன்
குஞ்சுகள் திக்கும் சிதறினர்.

காதலுடன்
கூப்பிட்டழைத்துஊட்டிய
சோற்றின் கடனையும்— உன்
குஞ்சுகள் நினையாது போவரோ.

உன் சிறக்கைகளுக்குள் காத்து
தேக்கிய உயிர்ச் சூட்டின்
வெம்மை தணிந்து— அவை
மாண்டிடல் கூடுமோ?

வானத்தில் வட்டமிடும்
வல்லூறுகளின்
அசைவின் நிழலை
கூவிச் சொல்லுகின்ற
குரல் தானும்
செவிகளுக்குள் நின்றொலிக்காது போகுமா?

உன் குஞ்சுகள்
வதைப்படவும்
வான் கழுகளின்
கூரலகில் கிளிபட்டு மாளவும்
சகித்திருக்காத
தாய்மையின்
அழுகையை வெளியெங்கும் இறை.

உன் சிறக்கையின் வலுவை— ஒரு நாளாவது
உன் குஞ்சுகள் உணராது போவரோ.

— சுபா

https://tamileelamarchive.com/

# பெண்ணினத்தைப் பெருமையுறச் செய்யும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்!


ஒக்டோபர் 10. இந்நாள் தமிழீழப் பெண்களை தலை நிமிர்த்தச் செய்யும் ஓர் உன்னத நாளாக அமைகிறது. உலகின் நான்காவது பெரிய வல்லரசு என வர்ணிக்கப்படும் இந்திய இராணுவத்தை எதிர்த்து ஆயுதமேந்தி நின்று போராடி – தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே முதல் முதல் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளான ஒக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

காலங்காலமாக நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையாலும் முதலாளித்துவ அமைப்பு முறையாலும் அடக்கப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும் வந்த பெண்கள், உலகப் பெண்களுடன் ஒன்றிணைந்து அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாளாகிய மார்ச் 8, அன்றே உரிமைக்குரல் எழுப்பி நின்றார்கள்.

ஆனால் ஒப்பீட்டளவில் உலகப் பெண்கள் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத – தியாகத்தின் உச்சமான தற்கொடைத் தியாகத்தைப் புரிந்து வரும் பெண்களைப் பெற்ற எமது தமிழினம் முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளை எழுச்சி நாளாக ஏற்றுக்கொள்வதில் பெருமையடைகிறது.

படைப்பியல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் பாலியல் வேறுபாட்டை மட்டும் கருத்திற் கொண்டு பெண்ணுக்கு பாலியல் சமத்துவம் மறுக்கப்பட்டு வந்தது. பிறப்பிலிருந்தே ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே காட்டப்பட்ட பராமரிப்பு வளர்ப்பு முறைகள் பெண்கள் ஆண்களை விடவும் தாழ்ந்தவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற உணர்வினை ஊட்டின. பெண் என்பவள் ஒரு காட்சிப் பொருளாக, போதைப் பண்டமாக, இனப் பெருக்கம் செய்யும் ஓர் இயந்திரமாக மட்டுமே பார்க்கப்பட்டாள்.

மதங்கள், மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், இலக்கியங்கள், புராண இதிகாச கர்ணபரம்பரைக் கதைகள், திரைப்படத் தொடர்புச் சாதனங்கள் என எல்லாமே பெண்களை இழிவுபடுத்தின. பெண்களிடையே தோன்றிய முன்னேற்றத்துக்கான, புரட்சிகரமான, சமூகமாற்றத்திற்கான முனைப்புகள் அனைத்தையும் கற்பு என்கின்ற பார்வை கருவறுத்தது. இன்று தமிழீழத்தைப் பொறுத்தவரை பெண்கள் தம் மீதான பல்வேறு அடக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து புரட்சியின் உச்சத்தை தொட்டு நிற்கின்றார்கள். அதி உன்னதமான தியாகங்களைப் புரிகிறார்கள்.



**2ம் லெப். மாலதி**

புற உலகம் தமிழீழத்துப் பெண்களை வியப்புடன், விழிகளை விரித்துப் பார்க்கின்றது. இந்தப் பெருமை மிகு நிலையை தமிழீழப் பெண்ணினத்திற்கு உண்டாக்கியவர் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தான். அவரது வழிகாட்டலில் தான் தமிழினம் குறிப்பாக தமிழீழத்துப் பெண்கள் தலை நிமிர்த்தி நிற்கின்றார்கள். தலைவன் ஊட்டும் துணிவில், தன்னம்பிக்கையில் எத்தனையோ சாதனைகள் இம்மண்ணில் பிறப்பெடுக்கின்றன!

பெண்கள் அதீத திறமைகளையும், ஆளுமைகளையும் தம்முள்ளே தேக்கி வைத்திருந்த போதும் சீதனம் என்ற அம்சம் பெண்களை இம்சித்து வந்தது. ஆணை ஒத்த அறிவும் அந்தஸ்தும் கொண்டிருந்த போதும் சீதனம் பெண்ணை குறைந்தவளாகவே கணித்தது. ஆனால் இன்று பெண்ணை இழிவுபடுத்தி வந்த சீதனத்தை இல்லாதொழிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்பு மிக்கவர்களாகத் திகழ்கின்றார்கள். உலக சமுதாயம் உதாரணம் காட்டுமளவுக்கு பெண் இங்கே விழிப்புணர்வு பெற்றிருக்கின்றாள். பூரணமான விழிப்புணர்வு எனச் சொல்ல முடியாவிட்டாலும் பல்வேறு விடயங்களில் பெண்ணின் விழிப்பு நிலை குறிப்பிடத்தக்கதாகவே அமைகின்றது.

பெண்ணின் விடுதலை என்பது ஆணாதிக்கக் கருத்தாதிக்கத்திலிருந்தும் ஏனைய அடக்கு ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுபடுவதாகும். முதலில் பெண்கள் அக விடுதலை பெற்று புரட்சிக்குத் தயாரான தற்துணிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் சமூக உடற்கூறின் இரு அம்சங்கள். எனவே பரஸ்பர புரிந்துணர்வோடு விடுதலை முனைப்புப் பெற வேண்டும்.

உலகில் பெண்கள் விமானிகளாக, விஞ்ஞானிகளாக, நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதிகளாக சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், உலகின் எந்தவொரு பகுதியிலும் நடந்தேறாத தியாகம் தமிழீழத்திலே நடக்கின்றது. இதற்காக தமிழீழத்துப் பெண்ணினம் பெருமையடையவேண்டும். தேசிய விடுதலைப் பணியிலே கைகோர்த்து பணிபுரிந்து, எமது தேசத்தின் விடிவை விரைவுபடுத்த வேண்டும். பல்துறை சார் கல்வியறிவிலே உயர்ந்து, பொருளாதார ரீதியில் யாரையும் சாராது சொந்தக் காலூன்றி நின்று முன்னேற வேண்டும்.

தமிழீழத்துப் பெண்கள் மிகவும் கொடூரமான இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். எதிரியின் பாலியல் பலாத்காரம் எமது பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. எதிரி எம் மீது பிரயோகிக்கும் சகல வன்முறைகளுக்கும் எதிராக உறுதியுடன் போராட வேண்டியவளாகப் பெண் திகழ்கின்றாள். போராட்டத்தின் மூலமே தன் வாழ்வை உறுதி செய்துகொள்ள வேண்டியவளாகின்றாள்.

# தமிழ்ப் பெண்களும் புரட்சியும்

https://tamileelamarchive.com/

- நீற்றா பற்றிமாகரன்



தமிழர் சமுதாயம் தாய்வழிச் சமுதாயம். இதுவே திராவிட இனமென்பதற்கான அடிப்படைப் பண்புகளில் ஒன்று. சங்க இலக்கியத்தில் போர்க்களம் புகுந்த மகனைப் பெற்ற பெருமையினால் "புலி கிடந்த குகை" எனத் தன் வயிற்றை வர்ணிக்கும் வீரத்தாயைக் காண்கிறோம். "என் மகன் புறமுதுகில் புண்பட்டு இறந்திருப்பானாயின் அவனுக்குப் பாலூட்டிய முலை திருகி எறிவேன்." எனவீரகாவியம் பாடி களம் புகுந்து தன் மைந்தன் விழுப்புண் கண்டு இறும் பூதெய்திய தாயினையும் படைத்தது நம் தமிழ் இலக்கியம். என் கணவன் கள்வனோ என நீதி கேட்டு அரசனுக்குமேல் பாய்ந்த வீரப் பெண் கண்ணகிக்கு காவியம் படைத்தது தமிழ் உலகு. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களுடைய வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றை உருவாக்கிய புரட்சித் தலைவி காரைக்கால் அம்மையாரால் சமணத்துக்கு எதிரான எழுச்சி – புரட்சி தமிழ்நாடு எங்கும் முன்னெடுத்துச் செல்லப்பட்டதினால்தான் தமிழர் கலாச்சாரம் தமிழர் பண்பாடு மீண்டும் நிலைப்பட்டு "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் பெண்ணில் நல்லாளுடன்" எனத் தேவாரப் பண் இசைத்து பெண்ணின் சமத்துவம் தமிழ் நாட்டில் நிலைநிறுத்தப்பட்டது.

இவ்வாறாக வீரமுள்ள சமுதாயத்தைப் பிறப்பித்து மானமுள்ள இனமாக தமிழ் இனத்தைத் தமிழ்த்தாய்மார் வாழ்வித்ததினால்தான் 'தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு' என்பதை உலகு உணர்ந்தது. வீரமும் அன்பும்தான் தமிழ் இனத்தின் குணமாகி தமிழ்ப் பண்பின் நிறமாகியது. ஆனால் அந்நிய ஏகாதிபத்திய காலனித்துவங்கள் தமிழ்ப் பெண்ணின் வரலாற்றினை அழிக்கும் சக்தியாய் வீரத்தை மழுங்கடித்தன. அன்பு என்றால் அடிமை வாழ்வு வாழ்தல் என்ற புதுக்கருத்தை வளர்த்தது. அச்சம் என்றால் இனப் பெருமைக்கு தீதுவரவிடாது தடுத்தல், மடம் என்றால் அறிந்தும் அறியாதது போல் பாலியல் விரகதாபங்களில் நடத்தல், நாணம் என்றால் பழிக்கு அஞ்சுதல், பயிர்ப்பு என்றால் வன்முறைத்தன்மைகள் நெருங்கவிடாது காத்தல் என்ற உயர் கருத்துக்கள் அடிபட்டுப் போய் இவை பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் ஆண்மை (குலமானம் காத்தல்), அறிவு (பாலியல் விரகதாபங்களை விலத்தவேண்டிய அறிவு), நாணம் (பழிக்கு அஞ்சுதல்) பிறன் மனை விழையாமை (வன்முறையாக இன்னொரு பெண்ணின் குடும்ப வாழ்

வைக் குலைத்தல்) போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் கூறப்பட்டன என்பனவும் மழுங்கடிக்கப்பட்டு மேலைத் தேய ஆணாதிக்க சமுதாய வழிவந்த சமூக தத்துவங்கள் தமிழர் வாழ்வின் தத்துவங்களாயின.

இதனால் சலுகைகளில் வாழும், எதற்கும் யாரிலாவது தங்கி வாழும் பிச்சைக் கூட்டமாக, இச்சைகளுக்கு தீனி போடுவதே வாழ்வு என்ற இழிந்த சமுதாயம் ஒன்று சிறுமை பெருமை உயர்ந்தோர் தாழ்ந்தோர் போட்டியிலே, சுதந்திரமற்ற ஆதிக்க வெறியிலே வாழ்வைக் கரைக்கின்ற சமுதாயம் ஒன்று தமிழரிடை தோன்றியது.

இதனை இனங்கண்ட பாரதி, புதுமைப் பெண் பற்றி பேசினான். விடுதலை குறித்துகுரல் கொடுத்தான். போர்க்குணம் விரும்பு, அச்சம் தவிர் என்று கட்டளை இட்டான். ஆனால் பாரதிதாசனோ,

"தன் நாட்டைத் தான் பெறான் உலகில்
என் நாட்டான் ஆயினும் இழிந்தவன்"
எனவும்
"பொன்னாட்டை மீட்கப் போக்கும்
பெருநாட்கள் ஒவ்வொன்றும்
திருநாள் ஆகும்" ஆதலால்
"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள்
இனம் என்ற தமிழ்நாடு தனக்கும்
என்னால்
தினையளவு நலமேனும்
கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத்
திருநாளாகும்"

எனவும் பாடினான். ஆனால் இந்தப் பண்பாட்டு மீட்பு, தமிழ்த் தாயை வீரமுள்ள தாயாக காணும் துடிப்பு, விடுதலைப் பயணம் தமிழ் நாட்டில் அல்ல தமிழீழத்தில் தலைவன் பிரபாகரனால்தான் நனவாக்கப் பட்டது. இதனை

"பாரதத்துப் பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
புதுமைப் பெண்களை
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகிறான்"

எனப் பாடினாள் கப்டன் வானதி. காந்தி பாரதத்தில் அகிம்சைப் போராட்டமான சத்தியாக்கிரகத்தை வள்ளியம்மை என்ற தமிழ்ப் பெண்ணிடம் செயல் முறையில் கற்றதாக தனது சத்திய சோதனையில் எழுதினார். ஆனால் எங்கள் தமிழீழ அகிம்சை சக்திகள் தியாகி திலீபனும், அன்னை பூபதியும் தங்கள் இன்னுயிர்களால் பாரதத்தின் ஆக்கிரமிப்புக் கோலத்தை அம்பலப்படுத்தி அகிம்சையின் சக்தியை பாரதத்துக்கே படிப்பித்தனர். இந்நேரத்தில் யாழ். பல்கலைக்கழக வளவில் இதற்கு முன்னர் எங்கள் இளம் பெண்கள் ஐவர் நோற்ற உண்ணா நோன்பினையும் எண்ணிப் பார்க்கிறோம். புரட்சி என்ற சொல்லுக்கு டாக்டர் மு. வரதராசன் தந்துள்ள விளக்கம்.

https://tamileelamarchive.com/

"புரட்சி என்ற சொல்லைக் காண்போம். சொல்லுக்கு நேர்ப்பொருள் புரளுதல், மாறுதல், அடைதல் என்பது அரசியலில் பெரிய மாறுதலுக்கு அடிப்படையான சில நிகழ்ச்சிகளைக் குறிக்க அச்சொல் வழங்கிய காரணத்தால் அரசியல் தொடர்பு பெற்றுவிட்டது."

பாடுகளும் சீதனமும் பாலியல் ஆதிக்க தன்மைகளும் அங்கே மறைந்து வரு கின்றன.

தமிழீழப் பெண்களிடை எவ்வளவு தூரத்துக்கு உறுதியான மனது வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வாழும் பெண்களிடை *PANOS* சர்வதேச அபிவிருத்தி நிறுவனமொன்று நடாத்திய பேட்டியில் கிடைத்த பதில்கள் உறுதிப்படுத்துகின்றன. ரதி என்னும் 42 வயதுப் பெண் கொழும்பிலிருந்து பின்வருமாறு கூறியிருக்கிறார். "நான் படையினர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டமையினால் சுகநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் தையல் வேலை செய்து கொழும்பில் வாழ்ந்து வருகிறேன். ஆயினும் எனது கண்பார்வையும் குறைவடைந்து உள்ளது. நான் எனது பிள்ளைகளையும் விடுதலைப் புலிகளையும் ஒருவராகவே கருதுகிறேன்.



இவ்வகையில் தமிழீழ தேசமக்களின் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் புரட்சியை ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ்ப் பெண்ணையும் புரட்சிப் பெண்ணாக மாற்றியதில் வியப்பில்லை. அதனால் தான் தமிழீழ நாட்டுக்காய் செத்தொழியும் நாளையும் திருநாளாய் ஏற்கும் வீரச் சமுதாயம் விடுதலைப் புலிகளாய் விளைந்து நிற்கிறது. இது வெறும் அரசியல் மாற்றம் அல்ல. அடிப்படையிலான சமூக பொருளாதார அரசியல் ஆன்மீக புரட்சி. ஆகையினால்தான் சாதியும் மனித வேறு

அவர்கள் உணவுக்காகக் கஷ்டப்படும் பொழுது அவர்களுக்கு உணவளித்தேன். அதை நான் ஒருபொழுதும் மறக்கமாட்டேன். இதனை சிலர் இராணுவத்திடம் அறிவித்துவிட்டனர். அவ்வேளை இந்திய அமைதி காக்கும் படையினர் அங்கு வந்து இறங்கினர். எனது தெருவில் வாழ்ந்த சிலரே இவள்தான் விடுதலைப் புலிகளை பாதுகாப்பவள், அவர்களுக்குப் புகலிடம் கொடுப்பவள் என ஒன்று சேர்ந்து கூறினர். வீட்டுக்குள் புகுந்த இந்திய அமைதிப்படையினர் எதற்காக நாலு சாப்பாட்டுத் தட்டு

கள் வைத்திருக்கின்றாய்? உன்னுடைய வீட்டில் நீயும் இரண்டு பிள்ளைகளும்தானே இருக்கின்றீர்கள் என வெருட்டிவிட்டுச் சென்றனர். இதைக் கேள்விப்பட்டு விடுதலைப் புலிகள் வந்து அக்கா நீங்கள் எவ்வளவோ உதவி எங்களுக்குச் செய்து இருக்கிறீர்கள். உங்களுக்கு எதுவும் நடக்கவிடமாட்டோம் என்று கூறிச் சென்றனர். பின்னர் எனது வீட்டை நோக்கி இந்தியப் பாதுகாப்புப் படையினர் வந்து கொண்டு இருக்கையில் விடுதலைப் புலிகள் அவர்கள் மேல் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தினர். அதில் ஒரு படையினன் கொல்லப்பட்டு பலர் காயம் உற்றனர். பெருமளவில் அவ்விடத்துக்கு விரைந்த மற்றைய இராணுவத்தினர், வேலிகளை எரித்தனர். வீட்டுக்குள் புகுந்து எல்லாப் படங்களையும் எரித்தனர்.



இதனால் வீடே பற்றி எரிந்தது. எனது தையல் இயந்திரமும் எரிந்து சாம்பலாகியது. நான் பதினொரு பிள்ளைகளுக்கு தையல் படிப்பித்தே வாழ்ந்து வந்தேன். இதன்பின் பல தடவைகள் நடுநிசியில் எனது வீட்டுக்குள் வந்து புகும் படையினர் என்னை அடித்துத் துன்புறுத்தி பலவாறு துன்புறுத்தினர். இதனைக் கண்டு மனம் பேதலித்த எனது பத்து வயது மூத்த மகன், நாங்கள் வாழ வேண்டுமானால் எமது தேசத்துக்கு சேவை செய்தே ஆகவேண்டும். இந்த மாதிரியாக வாழ்வதில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை எனக் கூறி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு போகப் போவதாகக் கூறினான். நான் அவனுடைய முடிவை மறுக்கும் நிலையில் இருக்கவில்லை. அவன் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான். அவனை அவர்கள் உரிய வயது வரும் வரை போராட்டத்துக்கு அனுப்பாது தகுந்த பயிற்சிகள் கொடுத்து உருவாக்கி வருகிறார்கள் என்பதே எனது நம்பிக்கை. ஒருநாள் இரவு ஏழு வாகனங்களும், ஏழு கவச வாகனங்களும் எனது வீட்டைச் சுற்றிவளைத்தன. எனது அயலவர்கள் ஓடிவந்து, நாங்கள் சொன்னதைக் கேட்டாயா! நீ விடுதலைப் புலிகளுக்கு உதவினதால் இப்பொழுது ஆமி வந்திட்டுது. இப்ப உனது வீட்டுக்கு வைக்கிற குண்டால் எங்கட வீடெல்லாம் இடிந்து நாசமாய்ப் போகப்போகிறது எனத் திட்டினார்கள். அவர்களுடைய பேச்சுக்களால் ஆத்திரம் அடைந்த நான் எங்களுடைய பிள்ளைகள் போராட்டத்திற்கும் போக வேண்டாம் மற்றவர்களுடைய பிள்ளைகள் போராடி அழிந்து சுதந்திர நாட்டைப் பெற்றுத்தர வேண்டுமா, இத்தகைய மனோநிலை முற்றிலும் நன்று எனக் கத்தினேன். இவ்வாறு நான் மற்றவர்களால் வெறுக்கப்பட்டு, எனது சகோதர சகோதரிகளே என்னை 'ஊரைவிட்டுப் போ' எனக் கோரியதினால் எனது இளைய மகனைக் கூட்டிக் கொண்டு கொழும்பில் வந்து தையல் வேலை செய்கிறேன் நான். ஐந்தாறு என்னுடைய நகைகளை விற்றுக் கொடுத்தும் பொறுப்பு நின்று வட்டிக்கு காசு எடுத்துக் கொடுத்தும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல உதவி இருக்கிறேன். ஆனால் இன்று நான் அனாதரவாக கொழும்பில் வாழ்வதற்கும் "நாங்கள் நல்ல சோறும் கறியும் சாப்பிடும்பொழுது மற்றவர்கள் பசித்திருக்கக்கூடாது என எண்ணி செயற்பட்டதுதான் காரணம் என நினைக்கிறேன்." எனக் கூறினாள்.

https://tamileelamarchive.com/

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களின் பாடசாலை ஒன்றின் அதிபராக இருக்கும் 43 வயதான கோகிலா, எங்களுடைய சொந்த வீடுகளை இழந்தோம், தோட்டம் துரவுகளை இழந்தோம், வாழைத் தோட்டங்கள், சின்ன வெங்காயங்கள், மிளகாய்ச் செடிகள், பனை வளங்கள் அனைத்தையும் இழந்தோம். எங்களுடைய நினைவுகளைத் தவிர எதுவுமே சொந்தமில்லாத நிலையில் இடம்பெயருகின்றோம். நாங்கள் இடம்பெயருகின்ற நேரத்தில் எல்லாம் மனித உறவுகளைத் தவிர வேறெதையுமே நாங்கள் கொண்டு வருவதில்லை. நாங்கள் பாரம்பரியமா சேர்த்த கல்விச் செல்வங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. ஆயினும் அகதி முகாம்களில் வாழுகின்ற மக்களைப் பார்க்கும்பொழுது இவையெல்லாவற்றையுமே மறந்து விடுவோம். வெளிநாடுகளுக்கும் கொழும்புக்கும் நல்வாழ்வு தேடி ஓடியவர்களைத் தவிர தமிழீழத்தை தங்கள் வாழ்விடமாகக் கொண்டு வாழ்கின்ற அனைவரும் இந்தப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கெடுக்கின்றோம். எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தை நடாத்த அனுமதித்தவர்கள் போராட்டத்தில் பங்கெடுக்கின்றனர்.

நான் நான்கு சிறுகதைத் தொகுதிகளையும், இரண்டு நாவல்களையும் வெளியிட்டுள்ளேன். இன்னும் இரு நாவல்கள் வெளிவர உள்ளன. ஆயினும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக இவை தடைப்பட்டுள்ளன. மனிதர்கள் மற்றைய மனிதர்களை சமானமானவர்களாக மதிக்கவேணும் என்பதே நான் கூறமுயற்சிக்கும் செய்திகள்.

இந்தப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன் எமது சமுதாயம் பழமையும், கடினமுமானதாக இருந்தது. பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான எந்த இடமும் கொடுக்கப்படவில்லை. தலைநிமிர்ந்து கதைப்பதற்குக் கூட அஞ்சவேண்டிய நிலை இருந்தது. ஆனால், இந்தப் பத்து வருடங்களில் பெருமளவில் மாற்றத்தைக் காண்கின்றோம். பெண்கள் ஆண்களுக்குச் சமனான போர்க்களத்தில் ஆயுதம் ஏந்தி நிற்பது காலத்

https://tamileelamarchive.com/

தின் தேவை. தற்பொழுது உலகப் பெண்கள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். எங்களுடைய பெண்கள் மட்டும் ஏன் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடக்கூடாது. அலநிக்கொண்டு சாவதை விட ஆக்கிரமிப்பு இராணுவத்தால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு துன்புறுவதை விட இராணுவத்தை நாங்களே ஆயுதம் ஏந்தி எதிர்கொள்வது பெண்ணால் முடியும் என்பதை நிரூபித்துள்ள சாதனையாளர்களால், எந்நேரமும் எங்கும் எவ்வித அச்சமுமின்றி நடமாடுகின்ற சுதந்திரம் எங்கள் பெண்களுக்கு உண்டு. எல்லா வாகனங்களையும் அச்சம் இன்றி கையாளுகின்றனர். ஆண்கள் காதலித்து வஞ்சனை செய்து ஏமாற்றிச் செல்வது என்பது முயற்கொம்பாகி வருகிறது. பெண்கள் பத்திரிகையாளர்களாகவும், விற்பனையாளர்களாகவும், சிறு கைத்தொழில் முதலாளிகளாகவும், பொலிஸ்காரர்களாகவும் கடமையாற்றுகின்ற காட்சியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தங்களுடைய தேசத்துக்காக சுயநம்பிக்கையுடன் தியாக உணர்வுடன் அவர்கள் வீராங்கனைகளாக வேலை செய்கின்ற காட்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் நிலத்தை மட்டும் பாதுகாக்கவில்லை முழுப் பெண்களையுமே பாதுகாத்து நிற்கின்றனர். பெண்கள் சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களை எதிர்பார்க்கின்றனர். அது விரைவுபட்டுக் கொண்டிருக்கின்றது. சுதந்திரப் போராட்டம் ஒரு பொழுதும் தோல்வி உறாது. எங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் உண்டு. அது எப்பொழுது என்பது மட்டும்தான் கேள்வி" எனக் கூறி உள்ளார்.

வினோதினி என்னும் ஆயுள்வேத டாக்டர் அளித்த பேட்டியில் "நான் ஏன் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்றேன் என்றால், நான் பிறந்த நாட்டை நேசிக்கிறேன். மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்ற வேளையில் அதற்கொரு தேவையும் உண்டு. இதனால் ஒவ்வொரு தமிழனும் இதில் இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றியே ஆக வேண்டும். எங்களுடைய தேசத்தினதும் மக்களினதும் சுதந்திரத்துக்காக உழைக்கின்றோம். போராளிகளுக்கு மருந்து கட்டுகிறேன். அரசியல் பிரச்சார பொதுக்கூட்டங்களை நடாத்தி மக்களுக்குத் தென்பு ஊட்டுகின்றோம். இவற்றின் மூலம் நாம் பெறுகின்ற சுய நம்பிக்கை எம்மை சமூக சேவைகள் செய்ய வைக்கின்றன. என்னுடைய மகள் இவற்றால் தன்னோடு அதிக நேரம் உறவாடாது தன்னைப் புறக்கணிக்கின்றேன் என நினைக்கக் கூடும். ஆனால் எல்லாவற்றையுமே நான் நேசிக்கிறேன்.

இந்தப் போரினால் கணவனை இழந்த மற்றும் திருமணம் செய்யாத பெண்களின் தொகை அதிகரிப்பது தவிர்க்க முடியாது உள்ளது. இதனால் பெண்கள் தங்களுடைய சொந்தக் காலில் நிற்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டிய காலம் இது. மக்கள் மிகக் கடுமையாக துன்புறுகின்றனர். ஆனால் நாங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ள விரும்பவில்லை. எங்களுடைய தேசத்தையும் மக்களையும் எதிரிகளிடம் இருந்து காப்பதற்குத் துணிந்து நிற்கின்றோம். எங்களுடைய பல உயிர்களை இந்தப் புனித பணிக்காக அர்ப்பணிப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். எங்களுக்கு இந்த மண்ணில வாழ்வதற்கு என்றுமே உரிமை உண்டு. அதையாருமே மறுக்க முடியாது என்பதுதான் எமது பதில்" என்றார்.

அனு என்னும் யாழ். பல்கலைக் கழக மாணவி அளித்த பேட்டியில், நாங்கள் அரசியல்வாதிகளுக்கு இனப் பிரச்சினையை தீர்க்கும்படி போதிய காலம் கெடுத்தோம். அவர்கள் தவறி விட்டனர். இதனால் போரினால் முடிவு காணவேண்டிய நிலையில் இருக்கின்றோம். நான் போராட்டத் துடனேயே வளர்ந்தவள். எனக்குத் தெரியும் தமிழ் சமுதாயத்தை சிங்கள வாதிகள் எவ்விதம் வெறுத்தார்கள் என்று. தங்கள் காடையர்களையும் கூலிகளையும் கொண்டு *1958 – 1983* வரை இனக்கலவரங்களில் அப்பா

> **போராட்டத்தில், புடமிடப்பட்ட உருக்குப் போன்ற ஒரு கட்சி இல்லாமல், சம்பந்தப்பட்ட வர்க்கத்தின் அனைத்து நேர்மையான மக்களதும் நம்பிக்கையை அனுபவிக்கும் ஒரு கட்சி இல்லாமல், வெகுஜனங்களின் மனநிலையை அவதானித்து செல்வாக்கு செலுத்தும் ஆற்றலுள்ள கட்சி இல்லாமல் அத்தகைய போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாது.**
>
> **– லெனின் –**

வித் தமிழ் மக்களை கொள்ளை அடி
தும் கொலை செய்தும் கற்பழித்து
வந்தனர். கல்வியில் காட்டிய பேத
களால், இளைய சமுதாயம் ஆயுத
தாங்கி வாழ வேண்டிய நிலை ஏ
பட்டதும் இதனால் என்னுடை
தாய் எனக்கு சீதனம் கொடுப்பதற்
எதையுமே சேர்த்து வைக்கும் நிலை
யில் இல்லை. எங்கள் இளைஞர்க
சிலர் வெளிநாடுகளில் வாழ்கி
றனர். ஆனால் இளைஞர்கள் பல
விடுதலைப் போராட்டத்திற்கு தோ
கொடுத்து நிற்கின்றனர். இதனா
அனேக திருமணமாகாத பெண்கள
நீங்கள் இங்கு காணலாம். இந்த
போராட்டத்தினால் பெண்களே மிக
கடுமையாகப் பாதிப்புற்றுள்ளனர். 19
இல் நான் வாழ்ந்த நெடுந்தீவில் சி
லங்கா இராணுவம் ஆக்கிரமித்து எா
கள் உடைமைகளை எல்லாம் இழந்
ஓடவைத்தது. இளம் பெண்களாகிய
நாம் பாதுகாப்புக்காக ஓடுகின்றோம்
இப்பொழுது உங்களுக்குப் புரியு
பெண்களின் ஆயுதப் போராட்ட
எப்படி ஆரம்பமாகியது என்று
குண்டுவீச்சுக்களும் எறிகணைகளு
எங்களைப் பயமுறுத்த முடியாது
இதுவே நாங்கள் இளம் பெண்கள்
போராட்டத்தில் இணைவதற்கான
ஒரே காரணம்.

புலம் பெயர்ந்த பெண்களாகிய
எங்களுக்கு

* நாங்கள் இவ்வீரம் மிகு தமிழீழ
பெண்குலத்தின் வாரிசுகள் தானா?

* நாங்கள் ஏன் நாடோடிக
ளானோம் என்பதன் காரணத்தை மற்
றவர்களுக்கு விளக்குகிறோமா?

* எந்தன் அம்மா, எந்தன் சகோத
ரியரும் படும் துன்பம் எடுத்துரைக்
கின்றோமா?

* இந்தப் போராட்டம் எங்கள்
போராட்டம் என்பதை மறந்து விட்
டோமா?

* நாளை அவர்கள் பெற்றுத்
தருவார்கள் பின்னர் அங்கு சென்று
வாழலாம் என்னும் சுயநலம் தொடர
விடலாமா?

* உடல் ரீதியாகத் தான் எம்மால்
உதவமுடியா விட்டாலும் மதியும்,
நிதியும் அளித்தாவது உதவக்கூடாதா?

* நேரம் இல்லை என்பது உண்
மைதான் ஆனாலும் தமிழீழம் இன்
றேல் எமக்கு வாழ்வு இல்லை என்
பதும் உண்மைதான். ஆகையால் எழு
தாத அவர் கவிதை எழுதுவது எம்
கடமை?

# பெண்களின் புலப்பெயர்வும் பயணத் துயரங்களும்

https://tamileelamarchive.com/

தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய பின் எமது சமூகம் பல மாறுதல்களையும் உள்வாங்கிக் கொள்கின்றது. ஆயுதப் போராட்டமாக தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் மாற்றம் பெற்றதைத் தொடர்ந்து காலம் காலமாக வீட்டுச் சிறைக்குள் பூட்டப்பட்டு தாம் சுமப்பது விலங்குகள்தான் எனத் தெரியாமல் ஆணாதிக்கம் பூட்டிய விலங்குகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள் மட்டத்திலும் விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இந்த விழிப்புணர்ச்சியின் செயற்பாடாக பெண்களும் நேரடியாக களத்திலிறங்கி ஆண்களுக்கு நிகராக பௌத்த சிங்கள இனவாத அரச படைகளுக்கெதிரான ஆயுதப் போராட்டத்திலும் பங்குகொள்ளும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. இன்று உலகமே வியக்கும் வகையில் தமிழீழப் பெண்கள் போராட்டக்களத்தில் அளப்பரிய தியாகங்களையும், சாதனைகளையும் நிகழ்த்திக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஆனால் இதேவேளை, தமிழீழப் பெண்களின் புலப்பெயர்வும் இந்தக் காலகட்டத்துடனேயே தோற்றம் பெற்றது எனலாம்.

1983-களில் பெருந்தொகையான இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்ட அதே நேரம் பெருந்தொகையான இளைஞர்கள் மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினர். அந்தப் புலம்பெயர்வின் தொடர்ச்சி இன்று வரை நீண்டு கொண்டிருக்கிறது. எனினும் பெண்களின் புலம்பெயர்வு என்பது அன்றைய காலகட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொகையை உள்ளடக்கியதாக இருக்கவில்லை. பொதுவாக தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்தே பெண்களின் புலம்பெயர்வு ஒரு முக்கியமான இடத்தை வகிக்கத் தொடங்கியுள்ளது எனலாம்.

அனேகமாக பெண்களின் புலம்பெயர்வு என்பது, சிறிலங்கா இனவாத அரசின் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு தப்பித்தல் செயற்பாடாக இல்லாமல் மேற்கு நாடுகளுக்கு ஏற்கனவே புலம்பெயர்ந்த ஆண்களுக்கான திருமணப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வெளியேறலாகவே அமைந்துள்ளது. இந்தப் புலம்பெயர்வு ஆண்களுக்கு நிகரான தொகையில் இல்லாமல் சிறு சிறு அளவிலான உதிரிப் புலம்பெயர்வாகவே இருப்பதைக் காணமுடியும். அனேகமாக இவர்கள் நிச்சயிக்கப்பட்ட அல்லது ஏற்கனவே காதல் கொண்டிருந்த திருமணங்களுக்காகவே மேற்கு நாடுகளை நோக்கிப் புலம்பெயர்கின்றனர். பொதுவாக இவர்களின் புலம்பெயர்வுக்கான காரணங்களை, ஏதோ ஒரு வகையில் தீர்மானிக்கப்பட்ட திருமணம், முன்னமே திருமணமாகியிருந்தால் கணவனிடம் வருதல், தொழில் வாய்ப்பு, அரச இராணுவ அடக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாக்க வெளியேறுதல் என வகைப்படுத்தலாம்.

## பயணத் துயரங்கள்

1985இற்குப் பிறகு ஜேர்மனியில் பேர்லின் ஊடாக அகதிகள் மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்குள் உள்நுழைவது தடை செய்யப்பட்ட பின், பொதுவாக அகதிகள் வெவ்வேறு சட்டவிரோதமான பாதைகள் மூலம் உள்நுழைந்து கொண்டிருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் அகதிகளுக்கான வரவேற்பு இப்போது குறைந்து விட்டது. மனிதாபிமான அடிப்படையில் ஜெனீவா ஒப்பந்தத்தின் கீழ் அகதி விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் நாடுகள், வளர்ந்து வரும் தேசியவாதம், நிறவாதம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல்வேறு காரணங்களினால் அகதிகளுக்கான கதவடைப்புக்களை மேற்கொள்ள சட்டமூலங்களை மாற்றி வருகின்றது. இதனால் ஐரோப்பிய நாடுகளுக்குள் அகதிகளுக்கான வருகை தற்போது சுலபமான ஒன்றாகவில்லாமல் மிகுந்த சிரமங்களுக்கூடாகவே நாடுகளுக்குள் நுழையவேண்டிய நிலை தோன்றி விட்டது.

**வீட்டில் தன் வேலையின் காரணமாக பெண் இன்னும் கஷ்டமான நிலைமையிலேயே இருக்கின்றாள். அவளைப் பூரண விடுதலை அடையச் செய்து அவளை ஆணுக்கு சமமானவளாக்குவதற்கு வீட்டு வேலையை சமூக மயமாக்குவதும் பெண்களைப் பொதுவான உற்பத்திக்குரிய உழைப்பில் ஈடுபடச் செய்வதும் அவசியமாகும்.**

— லெனின் —

முன்னரைப்போல் ஒரு அகதி நேரடியாக தான் விரும்பும் நாட்டுக்கு வந்து தஞ்சம் கோரமுடியாத நிலையில் பல்வேறு நாடுகளூடாக சட்டவிரோதமான முறையில் பல சிரமங்களைச் சந்தித்தே விரும்பிய இடத்தை வந்து சேரமுடிகிறது. உதாரணமாக பாங்கொங் – மொஸ்கோ – கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில், மேற்கு ஐரோப்பிய அல்லது கனடா போன்ற நாடுகளுக்கு வந்து சேருவதற்காக காத்திருக்கும் தமிழர்கள் கணிசமான தொகையினர் உண்டு. இவர்கள் அனைவரும் பிரயாண முகவர்களை நம்பி இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுக்கின்றனர். கொடுத்து விட்டு சொர்க்கம் பற்றிய கனவுடன் காத்திருக்கின்றனர்.

இப்படியாக சட்டவிரோத பிரயாண முகவர்களை நம்பி கனவுகளுடன் காத்திருப்பதில் பெண்களும் அடங்குகின்றனர். ஆண்களைப் பொறுத்தவரை புதிய சூழல்களை ஏற்கனவே உள்ள அனுபவங்கள் மூலம் ஒருவாறாகச் சமாளித்துக் கொள்கிறார்கள். ஆனால் பெண்களின் நிலையோ மிகவும் பரிதாபகரமானதாகவே உள்ளது.

காலம்காலமாக வெளி உலகம் தெரியாமல் கிடுகு வேலிக்குள் அடைத்து வளர்க்கப்பட்ட இவர்கள் புதிய இடம், புதிய கலாச்சாரம், புரியாத மொழி, பழக்கமில்லாத மனிதர்கள் என எல்லோரும் அன்னியமாகிப்போன இடத்தில் பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டு செயற்படும் பிரயாண முகவர்களை நம்பி புறப்பட்டபின் இடைவழியில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பிட்ட நாட்டுக்கு வந்து சேரும் வரை தற்காலிகமாக வெவ்வேறு நாடுகளில் தங்க வைக்கப்படும் இவர்கள் அவ் விடங்களில் பலவிதமான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக பெண்களை முகவர்களாக இருப்பவர்களே தமது பாலியல் இச்சைக்கு இணங்குமாறு வற்புறுத்துவது இதில் ஒரு வகை. குறிப்பிட்ட அப்பெண் இணங்க மறுக்கும் பட்சத்தில் மிகக் கொடுமையாக காட்டுமிராண்டித்தனமாக தண்டிக்கப்படுவதும் – உணவின்றி பட்டினி போடப்பட்டதுமான சம்பவங்கள் நிறையவே உண்டு. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தமது பயணத்துக்காகக் காத்திருக்கும் சில பெண்கள் இவர்களின் வக்கிரங்களுக்கு இணங்க மறுத்த காரணத்தால் செல்ல வேண்டிய இடத்துக்கு அனுப்பாமல் மாதக்கணக்காக அலைக்கழித்து தடுத்து வைக்கப்படுகின்ற செயல்களும் நடக்கின்றன. இது போன்று முகவர் ஒருவரின் பாலியல் வக்கிரத்துக்கு இணங்க மறுத்த பெண் ஒருவரை தனது காரில் ஏற்றிச் சென்று இரவு வேளையில் காட்டுப்புறமான பிரதான வீதியில் இறக்கி விட்டு விட்டு அவரின் கையிலிருந்த பணத்தையும் பறித்துக் கொண்டு சென்ற சம்பவமும், பெண் இணங்க மறுத்ததால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் அண்மைக் கால உதாரணங்களாக உள்ளன.

ஐரோப்பாவில் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குள் வேண்டுமானால், பல்வேறு நாடுகளுக்கூடாக சட்டவிரோத பல்வேறு வழிகளூடாக - பல்வேறு நபர்களூடாக வந்து சேர வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனால் பணமோசடிகள், வக்கிரத்தனமான பகடிவதைகள், அலைக்கழிப்புக்கள், ஏமாற்றுதல்கள் போன்ற விளைவுகளைச் சந்திக்க நேரிடுகிறது. நம்பிக்கை மோசடி துன்புறுத்தல்கள், வன்முறைக்குட்படுத்தல், அச்சுறுத்தி தமது இச்சைக்கு இணங்க வைத்தல், பணத்தை மட்டுமே நோக்காக்கொண்டு அபாயகரமான பாதைளை தேர்ந்தெடுத்து அனுப்புதல். இதனால் மரணங்களை எதிர்கொள்ள நேரிடுதல் (உதாரணமாக ஹங்கேரியூடாக லொறியில் அடைத்து அனுப்பப்பட்டவர்கள் மூச்சு முட்டி இறந்தது, போலந்து ஆற்றைக் கடக்கையில் இரு பெண்கள் நீரினுள் மூழ்கி இறந்தது.) போன்ற துயரங்களை எதிர்கொண்டே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இன்னும், பணத்தை நோக்கமாகக் கொண்ட முகவர்கள், பலரை அறையில் தங்கவைக்கின்றனர். அன்னியச் சூழல், தனித்து வாழும் நிலை, அச்சம், வன்முறைகள் மேற்கொள்ளப்படும் போது எதிர்ப்புக் குணாம்சம் இன்மையால் மனதுக்குள் புழுங்கிப் போதல், வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்ற காலதாமதங்களினால் உடன்படவைக்கும் முயற்சிக்குப் பலியாதல் என தொடர்ந்து வரும் புதிய புதிய சிக்கல்களுக்குள் இவர்கள் தடுமாறிப் போய்விடுகின்றனர்.

https://tamileelamarchive.com/

இந்தத் துயரங்களையும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் சிக்கல்களையும் யாருக்குச் சொல்வது, என்ன செய்வது எனத் தெரியாமல் மொஸ்கோ போன்ற இடங்களில் பயணத்துக்காகக் காத்திருக்கும் பல பெண்கள் உள்ளூர புலம்புகிறார்கள். அநேகமாக திருமணம் செய்து கொள்பவர் நேரடியான அறிமுகம் இல்லாமல் புகைப்படத்தில் மட்டுமே பார்த்தவராக இருக்கும் பட்சத்தில் அதை எப்படிச் சொல்வது? சொன்னதும் பிரிந்து கொள்வான நம்புவானா? காலாதிகாலமாக பெ என்பவள் இப்படித்தான் இருக்கவே டுமென, அதீதமான நடைமுறை சாத்தியங்களை மீறிய ஆணாதிக் கருத்துலகத்தினுள் இருப்பவர்கள இந்தப் பிரச்சினைகளை புரிந்துகொள் முடியுமா? அதனை மீறி இப்பிரச்சினை களை வெளியே கூறினால், பின்ன வாழ்வில் சந்தேகங்களினூடு பிரச்சினை கள் ஏற்படாதிருக்க முடியுமா? என் கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக ம தினுள் எழுவதால் எதனையும் வெளியே தெரிவிக்காமல், எதிர்த்துப் போராட மல் அனைத்துத் துன்பங்களையும் ம துக்குள் விழுங்கிக்கொண்டு துயரங் ளின் சுமைதாங்கியாகவே வாழும் நிலை தான் சில பெண்களுக்கு ஏற்படுகி றது. ஆண் – பெண் பற்றிய எந்த பிரச்சினைக்குமான தீர்வு என்பது ம வுலகில் ஏற்படும் மாற்றத்தையே அடி படையாகக் கொண்டுள்ளது என்பதே உண்மை.

**- அநாதிகன்**

---

*1940 இல் பிறந்த இவர் பாகிஸ்த்தானின் மிக முக்கிய கவிஞருள் ஒருவர். அரசாங்கப் பதவியிலுள்ள இவர் வானொலியில் அறிவிப்பாளாராகப் பணியாற்றுகிறார். பல சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக இருக்கும் இவர் கவிதைத் தொகுப்புக்கள் உட்படப் பல நூல்களை இயற்றியுள்ளார். பெண்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்.*

# ஒரு கதை

ஒரு ஆடுகுதிரையின் மீது
ஒரு குழந்தை ஆடுகிறது
அது மரக்குதிரை
குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது
குழந்தை குதிரையை அடிக்கிறான்
தனது திறமையைக் கண்டு
தன்னையே மெச்சிக் கொள்கிறான்
அவன் வளர்ந்து பெரியவனாகிறான்
மரக்குதிரையில் மீண்டும் சவாரி செய்கிறான்.
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்.
இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது
குதிரையை அடிப்பவன்
தன்னைத்தானே மெச்சிக் கொள்கிறவன்
மாறாமலேயே இருக்கிறான்:
எஜமானாக
சவாரி செய்பவனாக
கணவனாக.

# தமிழ் இலக்கியத்தில் பெண்கள்

https://tamileelamarchive.com/

## (கி.பி. 18—ம் நூற்றாண்டுக்கு முன் — சில குறிப்புகள்)

"ஒரு நாகரிகத்தின் ஆத்மாவை விளங்கிக் கொள்வதற்கும் அதன் வெற்றிகளை உணர்ந்து கொள்வதற்கும் சிறந்த வழிகளில் ஒன்று, அந்த நாகரிகத்தின் வரலாற்றில் பெண்களின் நிலையை ஆராய்வதாகும்".


மனித சமுதாயத்தில் "பெண்ணாக இருத்தல்" என்பது காரணமாக அப் பெண் வாழும் ஒவ்வொரு சமூகமும் அவளுக்கெனப் பிரத்தியேகமான பண்பாட்டுக் கூறுகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளமை கண்கூடு. எனவேதான் அச்சமுதாயத்தில் அவள் வகிக்கும் இடம் பற்றி மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியும் முக்கியமானதாகிறது.

தமிழ் இலக்கியத்திற் பெண்களின் நிலைபற்றி ஆராய முனையும்போது அத் தமிழிலக்கியம் வெளிப்படுத்திய சமூக, சமய, பொருளாதார வரலாற்றுச் சிந்தனைகள் யாவை? அவை இலக்கியங்களையும், குறிப்பாக இலக்கியத்திற் பெண்களையும் பாதித்தன என்பது அவசியமாகும்.

தமிழிலக்கியம் என்பது தானே தோன்றியது அல்ல. அது இந்தியப் பெரும்பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு கூறாகும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே இந்தியப் பெரும் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் தொழிற்பட்ட சமய, சமூக பொருளாதார வரலாற்றுச் சக்திகளை விளங்கிக்கொள்வது அவசியமானதாகும்.

ஆரம்பகாலத்தில் தமிழிலக்கியங்களில் கூறப்படும் தமிழ் மரபு இந்துப் பாரம்பரியத்தினூடாக வெளிவந்தது உண்மையாகும். அந்த இந்துப் பாரம்பரியம் நாம் அறிந்தவரை சிந்துவெளியில் ஆரம்பித்தது என்பது தெளிவு. இக்காலத்தில் இந்துப் பெண்களின் சமத்துவ அல்லது அசமத்துவ நிலையைப் பற்றி அறிய எமக்கு சான்றுகள் இல்லை.

ஆனால் வேதகால (கி.மு.1800 – 3000) ஆண்டு காலப்பகுதியில், இன்றும் பெண்களின் நிலையைப்பற்றி எமக்கு சான்றுகள் கிடைக்கின்றன. இருக்கு வேதம் தாய்வழிச்சமூக அமைப்பு, தந்தை வழிச் சமூக அமைப்புக்கு மாற்றமடைந்த போது




இருந்த பெண்களைப் பற்றிக் கூறுகின்றது. அக்காலத்தில் பெண்களின் பிறப்பு சிறப்பாக கருதப்பட்டது. அவள் போற்றப்பட்டாள், எனச் சில கருத்துக்கள் இருக்குவேத கால சமூகத்தில் பெண்கள் நிலை பற்றிக்கூறும்போது இன்றைய பெண்களின் விடுதலைப் போராட்டம் பற்றிக் கூறும்போது பெண் தனது நிலையை மீளப் பெறுதல் (இருக்குவேத கால நிலை) என்று குறிப்பிடப்படுகின்றது.

ஆனால், அக்காலத்துப் பெண்கள் நிலை திருப்திகரமானதாக அமையவில்லை என்பதனை இருக்கு வேதப் பாடல்கள் எடுத்துக்கூறுகின்றன. பிறப்பை ஒட்டிய வேண்டுதற் பாடல்களில் மகன் பிறக்கவேண்டிப் பாடும் பாடல்கள் இருக்கு வேதத்தில் உள்ளன. உதாரணமாகத் திருமணச் சடங்கின்போது மணப்பெண் ஆண் மகவைப் பெறும்படி வாழ்த்திப் பாடப்படும் பாடல் ஒன்றைக் குறிப்பிடலாம்.

"நச்சு நோக்கின் நலிவின் நீங்கி...."
என்ற பாடலில்

பெண் குழந்தையை விட ஆண் மகப் பெறுதல் மிக முக்கியமானதாக இருத்தலையும் இன்று போலவே அன்றும் காதற் கணவனைக் கண்ணெனக் காத்தலும், மக்கள் மாக்களிற் பரிவு காட்டுதலும், பண்ணை உயிர்களைப் பாதுகாத்தலும், தெய்வம் போற்றலும், மகிழ்வுடன் வாழ்தலும் பெண்ணின் கடமைகளாக இருத்தலையும் காணமுடிகிறது. கருவுயிர்த்த பெண்ணை துர்த்தேவதைகளிடம் இருந்து பாதுகாக்கும் மந்திரம் ஒன்று அதர்வ வேதத்தில் உள்ளது என்றும் அவள் அவ்வாறு காப்பாற்றப்பட்டால் அவளின் வயிற்றிலுள்ள ஆண் குழந்தை பெண்ணாக மாறாது என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது என்றும் கூறப்படுகிறது. இந்து மறுமலர்ச்சி வேண்டிப் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட புத்த மதத்திற் கூட புத்த பிக்குனி ஐந்து வயதிற்குட்பட்ட ஆண்

பிக்குவை விட குறைவாகவே மதிக்கப்பட்டாள். மத நம்பிக்கைகள் அந்நியப் படை எடுப்புக்கள் என்பன பிற்காலத்தில் பெண்களின் நிலையை இன்னும் கீழே தள்ளின. பெண் பிறப்பதென்பது தொடர்ந்தும் விரும்பப்படாத ஒன்றாகவே கருதப்படுகிறது. அவ்வாறு பிறந்த பெண்ணின் சிந்தனைகளுக்கும் இடமளிக்கப்படவில்லை.

மேலே குறிப்பிட்ட இந்தத் தாக்கங்கள் தமிழ் இலக்கியத்தைப் பாதித்தன என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இவ்விடத்து என்தமிழ், செந்தமிழ், பாலர் பாடிய பண்தமிழ் எனப்படும் இந்தத் தமிழிலக்கியத்தினூடாக எத்தனை பெண் புலவர்களைப் பார்க்கின்றோம்? என்பது முக்கியமாகிறது. கி.பி. 1–3 ஆம் நூற்றாண்டுகளையுள்ளடக்கிய வீரயுகத் தமிழிலக்கியத்தில் ஒளவையார், நச்செள்ளையார், காக்கை பாடினியார், ஆதிமந்தியார் எனப் பெயர் குறிப்பிடப்படும் மிகச் சில பெண் புலவர்களை விட்டால் கி.பி. 6–7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காரைக்கால் அம்மையாரும் 8–9 ஆம் நூற்றாண்டினராக கருதப்படும் ஆண்டாளும் தவிரப் பின்னர் 20ம் நூற்றாண்டிலேயே பெண்கள் இலக்கிய கர்த்தாக்களாகின்றனர் என்பது – எங்கள் சமூகத்துப் பெண்களின் அவல நிலையை விளக்கி நிற்கிறது. அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெண்களான காரைக்காலம்மை கணவனால் கைவிடப்பட்ட நிலையிலேயே இலக்கிய கர்த்தா ஆகிறார். ஆண்டாள் கடவுளைக் கணவனாக வரித்த நிலையிலேயே இலக்கிய கர்த்தா ஆகிறாள். இண்டு பேரும் இந்த சமூகத்தின் குடும்ப அமைப்பிலிருந்து விலகியவர்களே. ஒளவை பற்றிக் கூறப்படும் பௌராணிகக் கதையும் ஒளவை யாரைத் திருமணம் செய்தவராகக் கூறவில்லை. அவ்வாறே ஆதிமந்தியும் ஆட்டனத்தியை ஆற்றுக்குப் பலிகொடுத்த பின்னர் ஏற்பட்ட கழிவிரக்க நிலையில் பாடிய பாடல்களே உள்ளன என்பதும் நோக்குதற்குரியது.

பெண் படைப்பாளிகள் என்ற நிலையில் பெண்ணின் நிலை இதுவாகும்.

இனிமேல் அவ் இலக்கியங்களிற் கூறப்பட்டுள்ள பெண்ணும் அவளது குணாம்சங்களும் பற்றி நோக்குவோம்.

தமிழ் இலக்கிய வரலாறு கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பிக்கிறது என்பது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்த இலக்கியங்களில் கூறப்படும் பெண்கள் எல்லாம் தந்தை வழிச் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது இவ்விடத்துக் குறிப்பிடற்குரியது. புறநானூற்றில் வரும் தாய் சொல்வதான பாடல் ஒன்று பெண்ணின் ஒரு முக்கியமான கடமையாக பிள்ளைப் பேற்றையும், பிள்ளைகளை வளர்த்தலையும் வற்புறுத்துகிறது.

https://tamileelamarchive.com/

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே.

என்பது பாடல்.

இது ரிக் வேதத்தில் ஆண்மகப் பெறுதலை வற்புறுத்துவதுடன் ஒப்பிடற்குரியது.

இன்னொரு பாடல் தாய் தன்னுடைய மகன் போருக்கு சென்றதையே பெருமையாகக் கூறுகிறார்.

சிற்றில் நற்றூண் பற்றி.... என்று தொடங்கும் இப்புறப் பாடல் தூணைப் பற்றி நின்று என்னுடைய மகன் எங்கே என விரும்புபவரே! அவன் எங்கு என நான் அறியேன். ஆனால் புலி கிடந்த குகைபோல என் வயிறு இங்கே உள்ளது – எங்கேயோ போர்ப்பறை கேட்கிறது. அவன் அங்கே இருப்பான் என்று சொல்வதாக அமைகிறது.

பெண் தைரியமுள்ள தாயாக மகளை – கணவனை – தந்தையை – தமையனைப் போருக்கு அனுப்பிய செய்தி கூறப்படுகிறதே தவிர பெண்ணே போருக்குச் சென்ற கதை கூறப்படவில்லை.

ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும்
நும்மரண் சேர்மின்

> **பெண்களை இரண்டாதரப் பிரசைகளாகவும் ஆண்களின் தேவைகளையும், விருப்பங்களையும் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றுவதற்கென்றே படைக்கப்பட்ட உயிரினமாகப் பார்க்கும் சமூகத்தின் குரூர மனோபாவத்தை உடைத்தெறிந்து இந்த சமூகத்தில் ஆண்களைப் போன்று பெண்களும் சமபாத்திரத்தை வகித்து சம கௌரவத்தைப் பெற்று சமநீதியை அனுபவிக்க வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். இந்த நிலையில் பெண்கள் மீதான வன்முறைப் பிரயோகத்தை நாம் அனுமதிக்கவே முடியாது.**
>
> நன்றி: 'விடுதலைப் புலிகள்' தை 1992

என்ற புறப்பட்டால் அந்தப் போ[ர்] மறவரின் கருணையைக் காட்டுகின்[றது]. அதேவேளை பெண்கள் கருணைக்[கு] உரியவர்கள் என்ற கருத்தை மு[ன்] வைக்கிறது.

அகப்பாடல்களில் சித்திரிக்கப்படு[ம்] பெண் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனப்படும் ஒழுக்கங்களுக்குரியவளாகக் கொள்ளப்படுகி[]றாள். அதாவது அன்பினைந்திணையி[ல்] கூறப்படும் முற்கூறப்பட்ட ஒழுக்க[ங்]களில் பெண்ணைப் புணர்தலுக்கும், பிரிதலுக்கும், இருத்தலுக்கும் இரங்கலுக்கும் ஊடலுக்கும் உரியவளாகவே சித்திரித்தது.

யாருமில்லைத் தானே கள்வன்
தானவன் பொய்ப்பினை யானெவன் செய்கோ
தினைத்தாளன்ன சிறு பசுங்கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு யாம் புணர்ந்த ஞான்றே

எவருமில்லாத நிலையில் தன்னைப் புணர்ந்து பிரிந்த தலைவன் தன்னை ஏமாற்றினால் தான் என்ன செய்யமுடியும்? என்று இரங்கும் தலைவியினுடைய இரக்கநிலை இப்பாட்டில் தெளிவுற விளங்குகிறது.

இதைவிட கணவன்மாரின் பரத்தமை ஒரு நிறுவனமாகவே வளர்ந்திருக்கின்றது என்பதை சங்க இலக்கிய மருதப் பாடல்கள் தெளிவுறுத்தும். அவனுடை ஒழுக்கம் "போற்றா ஒழுக்கம்" ஆயினும் அது அச்சமூகத்தில் மறுக்கப்படவில்லை. மாறாக அந்தப் போற்றா ஒழுக்கத்தினால் மனமுடைந்த பெண்கள் அவனை எதிர்ப்பாரெனின் அப்பெண்கள் கணவனின் ஆதரவின்றி குழந்தைக்கும் பாலின்றி நொய்யரியை உண்டு வருந்த வேண்டி நேரிடும் என்பதற்கான குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் உண்டு.

பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் சமூகத்தினரால் கீழ்மட்டத்தவராகவே மதிக்கப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிட்டு அறிய வேண்டியதில்லை. இதிலே நகைப்புக்குரிய விடயம் ஒன்றைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

**'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்'**

என்கிறது திருக்குறள்.

ஆனால், சங்க இலக்கியத்து 'ஊடல்' ஐயும் காமத்திற்கின்பம் தரும் ஒரு செயலாகப் பின்வந்தோர், பின் வந்த

தந்தை வழிச் சமூகம் கொண்டுள்ளது என்பதுதான் வியப்புக்குரியது. இங்கு கூறப்பட்ட ஊடல் உண்மையில் ஆணுக்கு இன்பமூட்டுவதற்காக பெண் கொண்ட ஊடல் அல்ல. உண்மையில் அவள் அவன்மீது கொண்ட கோபமே சங்க இலக்கியத்தில் ஊடல் என்ற ஒழுக்கமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பது மனங்கொள்ள வேண்டியது. பின்வரும் அகநானூறுப் பாடல் ஒன்று ஒழுக்கமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பது மனங்கொள்ள வேண்டியது. பின்வரும் அகநூற்றுப்பாடல் முக்கிய மானது. செய்யுள் க எ கா துறை:- தோழி தலைமகனை வாயில் மறுத்தது. வாயில் மறுத்தல் என்பது அவளை வீட்டிற்குள் விடாமல் தடுத்தது என்று பொருள்படவரும். மனைவி தன் அறக் கடமை காரணமாக வீட்டிலிருத்தல் அங்கு வலியுறுத்தப்படுகிறது. அப்பாட லில் அந்த மனைவியின் தோழி தன் தலைவி அவனது பரத்தமை ஒழுக் கத்தை அறிந்து கோபித்து தன் அழகு கெட அழுதாள் என்றும் ஊரே பேசும் உன்னைத் தேடி சென்றாள் என்றும் புதல்வனைப் பெற்ற அவள் நீ பிரிந்து தங்க என்ன கடனை உடையவளா னாளோ? என்கிறாள். திருக்குறளில் இல் லறத்தானுக்குரிய கடமைகளும் மனை விக்குரிய கடமைகளும் ஆக்கப்பட்டுள் ளன. மனைவிக்குரிய கடமைகளாக பின்வருவன கூறப்படுகின்றன.

"தற்காத்து தற்கொண்டாற் பேணி தகை சான்ற சொற்காத்துச் சோர்வி லாள் பெண்" என்கிறது திருக்குறள். இங்கு பெண்களின் வீட்டுப் பணிக ளான புதல்வரைப் பெறுதல் கணவ ரைக் காத்தலும் பொருளைக்காத்தலும் வற்புறுத்தப்படுவதைக் காணலாம்.

இன்னொரு பாடலில் (அக 196) பரத்தையிடம் சென்று வந்த கணவ னைப் பார்த்து 'தொடுகலம் குறுக வாரல்' அதாவது 'உன்னைத் தொட மாட்டேன் கிட்டவராதே' என்று மறுத் துவைப்பதைக் காணலாம். இவ்வாறு தலைவி கணவன் மீது கொண்ட ஊடல் பற்றிய செய்திகள் இங்கு காணப்படு கின்றன.

முல்லையிற் கூறப்படுகின்ற இருத் தல் ஒழுக்கம் பெண்ணின் கற்பினை வலியுறுத்தியது. கற்பு என்ற கோட் பாடே தந்தை வழிச் சமூகத்திலிருந்து பெறப்பட்டதெனக் கூறப்பட்டது. இருத் தல் ஒழுக்கத்தில் இருக்கும் முல்லை நிலத்தாய் கணவன் தான் வெளியே சென்று வரும் வரை வீட்டின் செல்வத்

**தமிழகத்திலிருந்து வெளிவரும் 'கிழக்கு' சஞ்சிகையில் புலம்பெயர் வாழ்வின் அவலத்தை புலப்படுத்தி நிற்கும் பார்த்திபனின் "பழைய ஞாப கங்களில் எங்கள் சீவியங்கள் கழிகின்றன" என்ற நேர்காணலிலிருந்து.**

https://tamileelamarchive.com/

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் மத்தியில் பெண் விடுதலை உணர்வுக்குப் பரிச்சயமாகியுள்ளனரா?**

ஊர்ல இருந்ததைவிட இங்க பெண்கள் தங்களுடைய கருத்தை வைக்கிறதுக் கான ஒரு சுதந்திரத்தையும் துணிவையும் இந்தப் புலம்பெயர்ந்த வாழ்வு அவுங்க ளுக்குக் கொடுத்திருக்கு. ஆனா எல்லாப் பொம்பிளைகளும் அப்பிடி இல்லே. மூன்று வகையாகப் பொம்பிளையளைப் பிரிக்கலாம். முதலாவது: ஊர்ல இருந்த மாதிரியே கணவனே கண்கண்ட தெய்வம், பிள்ளைகளுக்காக வேண்டிய சீவி யம்.... இப்படியான ஆக்களும் இருக்கினம். மற்றப்படி பொருளாதாரத் தேவைக ளுக்காக வேண்டி கொஞ்சம் வெளியிலே போய் வேலைசெய்து பலதுகளையும் கவனிக்கக்கூடிய அளவிற்குக் கொஞ்சம் வளர்ச்சிபெற்ற பொம்பிளைகளும் இருக்கினம். இவைகளையும் தாண்டி அரசியல் வாழ்விலயும் எங்களை இணைச் சுக்க வேணும் அல்லது பொம்பிளைகளுக்கு உள்ள பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக்கொள்ளவேணும் என்று கூறுகிற முன்னேறிய பிரிவும் இருக்கு.

**புலம்பெயர்ந்து வாழ்கிறவர்களது இதர முக்கியமான பிரச்சினைகள் பற்றிச் சொல்லுங்கள்.**

குழந்தைகளுடைய பிரச்சினை ரொம்ப முக்கியமானது. வெளிநாட்டுக்கு வந்ததிலே நாங்க முதலாவது சந்ததி. அடுத்த சந்ததி இங்க பிறந்த பிள்ளையள். மற்றது படிச்சுக்கொண்டிருந்தப்பக் கூட்டிக்கொண்டு வந்த சின்னப்பிள்ளையள். இரண்டுவிதமான வாழ்க்கையில் அந்தப் பிள்ளைகள் போகுது. பள்ளிக்கூடத்துக் குப் போற எட்டு மணித்தியாலத்தில ஒரு வாழ்நிலை. மிச்சமா இருக்கிற நேரத்தில அது இன்னொரு வாழ்நிலையில இருக்கு. கிட்டத்தட்ட ரெண்டு உலகத்திலே ஒரே நாளையில அந்தப் பிள்ளை இருக்க வேண்டியிருக்கு. இது அந்தப் பிள்ளையிடத் தில ஒரு உளவியல் பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டு வருது. கூடுதலான பிள்ளைக ளுக்கு ஐரோப்பியச் சூழல்தான் தெரிஞ்சிருக்கு. தமிழ்ச் சமூக வாழ்நிலை இங்குள்ளதைவிடக் கூட ஒடுக்குமுறையானது. இதுக்கு மாற்றா இல்லையெண் டாலும் இதைவிடக் கொஞ்சம் 'லிபரலா' இந்த ஐரோப்பிய வாழ்க்கை இருக்குது. இது சம்மந்தமா பெற்றோருக்கு நிறையவே அச்சமிருக்கு. முக்கியமா தங்க ளுடைய பொம்பிளைப் புள்ளைகள் சம்மந்தமா. நம்முடைய பொம்பிளப் புள்ளை யள் இந்த ஈரோப்பில இருக்கிற பிள்ளையள் போல 'கெட்டுப் போவினம்' எண்டால் அவைகள் வச்சிருக்கிற அர்த்தம் தங்களை விட்டுத் தனியாப் போகுங் கள். சுயமா இருக்குங்கள், தனக்குப் பிடிச்ச ஒரு ஆண் துணையத் தேடிக்கொள் ளுவினம். இது தங்கள் கலாச்சாரத்தை மழுங்கடிக்கும்னு சொல்லி சிலர் தங்கள் பிள்ளையள் வளர்ந்தவுடனே ஈழத்துக்குப் போறதோ இல்லை இந்தியாவுக்காவது போறதோ என்கிற 'அய்டியா'க்களோட இருக்கினம். மற்றது எங்கட புள்ளைய ளைப் பொறுத்து மட்டும் பெற்றோர்களுடைய அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டால் அவர்கள் குடும்பத்தோட இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டியநிலைமை இருக்குது, அப்போ அவை தங்களுடைய சொந்தப் பாஷையையும் விட்டு, இங்க கத்துக்கிட்ட பாஷையையும் விட்டு.... இது அந்தப் பிள்ளையளுடைய எதிர்காலத் தையே அழிக்கும். எங்களுக்குக் கனக்க பழைய நினைவுகள் இருக்கு. நாங்கள் ஓடித்திரிந்த ரோட்டுக்கள், பொடியன்களோட 'மார்பிள்' விளையாடிய இடங்கள். நாங்கள் படிச்ச பள்ளிக்கூடங்கள், மற்றது எங்களுடைய சொந்தக்காரர்கள்.... இந்த ஞாபகத்திலேயே நாங்க எங்க மிச்ச சீவியத்தைக் கொண்டுபோறம்.

ஆனா இங்க பிறந்த பிள்ளையள் சம்பந்தமா ஊர்ல இருந்து வாற கடிதங்கள், டி.வி.யிலே போடுற படங்கள், புத்தகங்கள்.... இப்படியெல்லாம் நமக்கு ஒரு நாடு இருக்கா அங்கேயெல்லாம் நாம இல்லாமப் போனமே என்று அவைகளுக்கொரு ஏக்கம். முதியவர்கள் ஒப்பீட்டளவில் மிகச் சரியான அளவுக் குறைவு. அவையு டைய சீவியம் கிட்டத்தட்ட வீட்டுக்குள்ளேயே கழிஞ்சிடும். வெளியில போகமுடி யாது. பாஷைப் பிரச்சினை. ஊரில இருக்கிற மாதிரி கூடின சமூகமாக இங்க இல்ல. மற்ற முதியவர்களைச் சந்திக்க இயலாது. அதெல்லாம் இல்லாம ஒரு வெட்டப்பட்ட மனிதரா வீட்ல அடைக்கப்பட்டுக் கிடக்கினம்.

தையும் வீட்டுக்கடமைகளையும் பார்த்துப் பேணிக்கொண்டிருக்க வேண்டிய கட்டத்தில் கணவனது சொத்துடமையைப் பேணுவதற்கு அவளது மகன் முக்கியம் பெறுகிறான். அந்த இடத்தில் அவளது மகனை மனைவியின் கற்புடமையிலிருந்தே பெற்றுக்கொள்கிறான். சங்க இலக்கியத்தில் புதல்வன் தாய் "மனைக்கு விளக்கு" என்ற தொடர்கள் அடிக்கடி இல்லக்கிழத்தியைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்துவதை அவதானிக்கலாம்.

இக்காலத்திற்கும் பின் வந்த இலக்கியங்கள் பெரும்பாலும் இவ்விலக்கியங்களிற் கூறப்பட்ட பெண்ணையே சித்தரித்தன என்று துணிந்து கூறலாம்.

சிலப்பதிகாரத்துக் கண்ணகியைக் குறைகூறுவது என்பது நோக்கமல்ல – எனினும் அவளை ஒரு இலக்கியக் கதாபாத்திரமாக நோக்குமிடத்து கணவனின் ஒழுக்கத்தை இட்டு அவள் மனத்தாங்கல் என்பது சிலப்பதிகாரத்தினூடாகப் பெறப்படுகிறது. எனினும் அவள் தன் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாமல் இருந்தாள் என்பதனை கண்ணகி கூற்றாக வருகின்ற பாடல் வரிகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஆயர் சேரியில் கண்ணகியை மாதவியின் பாதுகாப்பில் விட்டுச் சென்றபோது கோவலனுடன் நடத்திய உரையாடல் இதனைத் தெரிவிக்கின்து.

> போரில் மக்கள் அதிசயிக்கத் தக்கவாறு வளர்கின்றார்கள். சாவுக்கு அடுத்து வசிக்கிறார்கள். ஒருவன் தனது அண்டை வீட்டானை அறிந்தது போல அதை அறிவார்கள், புத்திசாலியாக வளர்கிறார்கள். அச்சத்தை வென்று விடுகின்றார்கள். இது மக்களை உயர்த்துகிறது. நம்பிக்கையை, உளமகிழ்ச்சியை, வலிமையைத் தருகின்றது. போரில் இடைப்பட்ட நிழல்கள் இல்லை, வெளிறிய வர்ணமே கிடையாது, எல்லாமே உச்சந்தான். நல்லதோ கெட்டதோ, கறுப்போ வெள்ளையோ, போரிலே பல விஷயங்கள் திரும்பவும் சிந்திக்கப்படுகின்றன; திறனாய்வு செய்யப்படுகின்றன; மறுமதிப்பீடு செய்யப்படுகின்றன.
>
> 'ஸ்ராலின் கிராடு சண்டை,' என்ற நூலிலிருந்து

**கோவலன்:**

..... இருமுது குரவரேவலும் பிழைத்தேன் சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன் வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண் டெழுகென எழுந்தாய் என்செய்தனை?...

**கண்ணகி:**

..... அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலுமிழந்த வெள்ளை போற்றாவொழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றாவுள்ள வாழ்க்கையேனாதலின் ஏற்றெழுந்தனன் யான்....

மற்றோரால் போற்றப்படாத ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்தீர். நான் மாற்ற முடியாத வாழ்க்கையை உடையவள் – அதனால் நீ எழு என்று சொல்ல எழுந்தேன்.... என்கிறாள் வணிகுலத்துப் பெருமாட்டி. ஆனாலும் கணவனுக்கு அடங்கியவள் என்ற கோட்பாடு இங்கே பின்பற்றப்படுகிறமையைக் காணமுடிகிறது.

மேலும் கணவனுடன் வாழமுடியாத நிலையில் அவளால் இல்லறக் கடமைகளைச் செய்ய முடியாமற் போயிருக்கிறது.

"அற வோர்க்களித்தல்
அந்தண ரோம்பல்
துறவோர்க் கெதிர்தல்
விருந்தெதிர் கோடல்

எதையும் அந்தப் பெண் செய்ய முடியாத ஒரு சட்டதிட்டத்தில் அகப்பட்டிருந்தமை புலனாகிறது.

பல்லவ சோழர்கால இலக்கியங்களும் அவ்வாறே. பக்தி இலக்கியங்கள் கூட பெண்ணைக் காதலி நிலையிலேயே நோக்குகின்றன. கண்ணனின் காதலி ஆண்டாளின் கதை தெரிந்ததே. காரைக்காலம்மையார் கணவனாற் கைவிடப்பட்ட நிலையிலேயே இறைவனைப் பற்றிய பாடல்களைப் பாடுவதில் ஈடுபடுகிறார்.

காரைக்காலம்மை புராணத்தில் பெண்ணின் நிலைமை பற்றிய இன்னொரு செய்தி சேக்கிளாராற் கூறப்படுகிறது. காரைக்காலம்மையார் நாகபட்டினத்திற்கு போகாமல் தன்னோடு இருக்கவேண்டும் என்று விரும்பிய தந்தையாகிய தனதத்தன் தன்னுடைய வீட்டின் அருகே "அணிமாடம் அமைத்து மருமகனுக்குப் பல செல்வங்களையும் வழங்கினான்." எனப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் முதல் முறையில் சீதணம் வழங்கப்பட்ட செய்தி இங்கு வருகிறது.

இராமன் காடாளச் சென்றபோது சீதையும் பின்னே சென்றமையாலே தான் கம்பராமாயணத்தில் சீதை போற்றப்படுகின்றாள். பெண்ணற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின் என்ற வாக்குக்கிணங்க சீதை கற்பென்கின்ற திண்மை பொருந்தியவளாக இருந்தமையால் தான் போற்றப்பட்டாள்.

மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை வற்புறுத்திய இந்தச் சமூகம் தனது இலக்கியங்களில் (கம்பராமயணம் ஒன்றைத் தவிர) அதனை வலியுறுத்தவில்லை. சீவகசிந்தாமணியில் சீவகன் ஒன்பது பெண்களை மணக்கின்றான். சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை கைவிட்டு மாதவியுடன் வாழ்கிறான். கலிங்கத்துப் பரணியில் வரும் குலோத்துங்கன் பல பெண்களைக் கொண்டவன் ஆக இருப்பதைக் காணமுடிகிறது.

உலா என்னும் சிற்றிலக்கிய வகை ஒன்று போதை, வெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய ஏழு பருவமகளிரும், உலாவரும் தலைவரின் அழகையும், வீரத்தையும், புகழையும் கண்டு மயங்குவதாகச் சித்தரிக்கப்படும் ஒன்றாகும். இங்கு ஒருவனுக்கு ஒருத்தி என்பதை விட்டு ஒருவனுக்குப் பல பெண்கள் என்ற நிலையே போற்றப்படுகிறது.

பரணிப் பிரபந்தத்தில் கடைதிறப்புப் படலத்திலும் தலைவனாகிய அரசனிடம் மயங்கும் பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர்.

கூடிய இன்கனவு அதனிலே
கொடை நரதுங்கனோடு அணைவுறாது
ஊடிய நெஞ்சினொடு ஊடுவீர்
உமது நெடுங்கடை திறமினோ.

என அந்தப் பாடல் அமைகிறது.

பெண்கள் அரசனின் திறைப்பொருளாக அமைந்தனர். அரசர் படையெடுக்கும் போது பெண்களைச் சிறைப்பிடித்து வந்தனர். அந்தச் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்கள் அரசனால் அனுபவிக்கப்பட்டனர் என்பதையும் கலிங்கத்துப் பரணி கூறும்.

அவை நாடிய புனல்நாடுடை
அபயற்கு இடுதிறையாம்
மலை நாடியர் துளு நாடியர்
மனையிற் கடைதிறமின்

என அந்தப் பாடல் கூறும்.

14ம் நூற்றாண்டின் பின் 18–ம் நூற்றாண்டு வரை எழுந்த இலக்கியங்கள்

பலவும் பெண்ணைக் கீழ் நிலையிலேயே பார்த்துள்ளது. அருணகிரியாரின் பாடல்கள் பல பெண்ணை அனுபவித்த பின் எழுந்த பாடல்களாகும். அவற்றிலே பெண் இழிந்துரைக்கப்படுகிறாள்.

கரிய குழல் மாதர் தங்கள்
அடுகவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொற்று மிகவாடி
திருப்புகழ்
ஆசை நேச மயக்கிக்
காசு தேடு மனத்திகள்
ஆவிசோர உருத்திகள் - தெருமீதே
யாவரோடு நகைப்பவர்
வேறு கூறு விளைப்பவர்
ஆலகால விழிச்சிகள் - மலை போலும்
மாசிலாத தனத்தியர்
ஆடை சோர நடப்பவர்
வாரி ஒதி முடிப்பவர்..

திருப்புகழ்

எனக் குறிப்பிடுகின்றனர்.

காளமேகப் புலவர் பெண்ணுறுப்பை வைத்தே சிலேடை பாடியுள்ளார். பெண்ணாலே தான் உறுதி மிக்கவர் அழிந்தனர் என்று பாடுகிறார்.

வாலி மடிந்ததுவும்
வாலரக்கர் பட்டதுவும்
சால மகியுடைய நூற்றொருவர்
மாண்டதுவுமே
சதவிகரத்தால் வந்த தாழ்வு

சதவிகரம் – சதி – பெண் – பெண்ணால் வந்த தாழ்வு தான் மேற்குறிப்பிட்ட எல்லாம் என்கிறார்.

நளவெண்பாவில் பெண்ணின் குணங்களாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன சிறப்பிக்கப்படுகின்றன.

ஒளவையார் பெண்ணாய் பிறத்தல் கூடாது என்று பாடுகையில்,

கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தலிரிது என்று கூன், குருடு செவிட்டுக்கு இணையாகப் பெண்ணின் பிறப்பைக் கூறுகிறார்.

எனவே தமிழிலக்கியத்தை 18-ம் நூற்றாண்டு வரை நோக்கும்போது தமிழிலக்கியத்திற் போற்றப்பெறும் கண்ணகியும் சீதையும் மனைத்தக்க மாண்பு என அக்காலத்துக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைய வாழ்ந்திருந்தமையாலே போற்றப்பட்டனர்.

காரைக்காலம்மையார் (கணவனாற் கைவிடப்பட்டவர்), ஆண்டாள் (திருமணம் வேண்டாது கடவுளை கணவனாக வரித்தவர்), திலகவதியார் (மணம் பேசிய கணவன் இறந்தமையால் மண முடிக்காது வாழ்ந்தவர்), மணிமேகலை (உதயகுமாரன் இறந்தமையால் துறவியாகிப் போனவர்) இவர்கள் இறைவன் தொண்டில் ஈடுபட்டவர்கள். மணிமேகலை தான்சார்ந்த சமயம் காரணமாகப் பொதுத் தொண்டில் ஈடுபட்டாள். இவர்கள் தவிர ஏனையோரெல்லாம்,

மொத்தத்தில் பார்க்கும்போது தமிழிலக்கியத்தில் பெண்,

1) கணவனுக்குரியவளாக

2) காதலுக்குரியவளாக

3) கருணைக்குரியவளாக

4) மனைமாட்சிக்குரியவளாக வீட்டு வேலை, விருந்தோம்பல், கணவனைப் பேணல், புதல்வரைப் பெறுதல், மற்றும் அனைத்தும்

5) பாலியல் அனுபவிப்புக்குரியவளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

நவீன இலக்கியம் தான் அதிலும் சில மட்டும் இந்தக் கோட்பாடுகளிலிருந்து விலகிப் பெண்ணை மனமுள்ள ஒரு உயிராகப் பார்க்கத் தொடங்கியுள்ளது.

*- திருமதி அமுதா*

# புதிய பிறவிகளாக

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது நீண்டகாலமாக மேற்கொண்டுவரும் இன ஒடுக்குமுறை நடவடிக்கையானது எம் மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் பாரியளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்தி நிற்கின்றது. அரசின் அடக்குமுறை காரணமாக வெடித்துள்ள இந்த யுத்தம் எம் மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புக்களின் ஒட்டுமொத்த விளைவாக தமிழீழப் பெண்கள் மத்தயில் பல சமூகப் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக சமூக பொருளாதார வாழ்வில் பின் தங்கிய நிலையில் உள்ள பெண்களிடையே விபச்சாரம், சிசுக்கொலை, கசிப்புக் காச்சுதல், களவெடுத்தல் போன்ற சமூகப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இச் சமூகப் பிரச்சினைகளில் ஈடுபட்டு குற்றமிழைத்தவர்களாகி, இதிலிருந்து மீளமுடியாதவர்களாகி, பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள பெண்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையில் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் 'நன்னடத்தைப் பள்ளி' என்ற சீர்திருத்த நிலையம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந் நன்னடத்தைப் பள்ளியின் முக்கிய நோக்கங்களை ஆராய்வோமாயின், சமூகத்தில் குற்றமிழைத்தவர்களெனக் கருதப்படும் பெண்களை இனங்காணுதல், அவர்கள் குற்றமிழைப்பதற்கான காரணங்களை ஆராய்தல், அதற்கேற்ப அவர்களை அணுகி இத்தகைய செயற்பாடுகள் பிழையானவை என்பதையும், இவற்றால் அவர்களும், அவர்கள் வாழுகின்ற சமூகமும் பாதிப்புக்குள்ளாகின்றது என்பதையும் விளங்க வைத்தல், அவர்களைத் திருத்தி தாம் வாழுகின்ற சமூகத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் வாழ்வதற்குரிய புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இந்தச் சமூகக் குற்றங்களை அவர்கள் தொடர்ந்தும் புரிவதைத் தடுத்து அவர்களும் சமூகத்தில் நல்லவர்களாக வாழ்வதற்குரிய சீர்திருத்தக் கல்வி முறையை மேற்கொள்ளல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதில் சிசுக்கொலை புரிந்தவர்களைப் பொறுத்தவரை இவர்களின் நிலை பரிதாபமானது.. ஒருபுறம் இராணுவ வன்முறையால் பாதிக்கப்படுகின்ற அதேவேளை, ஆணாதிக்க மேலாண்மையாலும் பாதிக்கப்படுகின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் தவறினைச் செய்துவிட்டு அதை இலகுவாக ஆண்கள் மறைத்து விடுகிறார்கள். பெண்களோ தவறினை மறைக்கவும் முடியாமல் ஊருக்குப் பயந்து அச்சத்தின் காரணமாக இப்படியான தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கசிப்புக் காச்சுதல், களவெடுத்தல் போன்வற்றில் ஈடுபட்டோரும் வறுமை காரணமாகவே இதை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுடைய பிரச்சினைகள் தமிழீழ நீதித் துறையினரால் ஆராய்ந்து தீர்க்கப்பட்டுவருகிறது. அவர்கள் சமூகத்தில் ஆளுமையோடு வாழும் தகமையையும் பெற்று புதிய மனிதர்களாகி ஒரு நம்பிக்கை மிகுந்த உலகுகள் பிரவேசிக்கிறார்கள்.

https://tamileelamarchive.com/

# எமது பண்டைய மரபின் சிறப்பும் நெறியுடைய பண்பாட்டு அம்சங்களும் அழிந்துவிடக்கூடாது

தமிழீழப் போராட்டத்தில் தீவிர ஈடுபாடும் அக்கறையும் கொண்ட இவர், புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த போதும் தாயகத்தின் மீது தீராத காதல் கொண்ட செயற்பாட்டா ளர்களாக இருக்கின்றார். அண்மையில், அவுஸ்திரேலியாவில் நடைபெற்றதுமான, 'சகாப்தத்தின் பிரதிபலிப்பு என வர்ணிக்கப் பட்டதுமான 'நீதியான சமாதானத்தை நோக்கி' எனும் மாநாட்டின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தவர். தமிழீழ விடுதலைப் பெண் போராளிகளோடு பழக பேசக் கிடைத்த சில நாட்களாயினும், அந்நாட்களே தன் வாழ்நாளில் மறக்க முடியாத நாட்கள் எனப் பெருமைப்பட்டுக்கொள்ளும் மனோ அக்காவுடன் 'சுதந்திரக்கீற்று' ஆண்டிதழுக்காக தமிழ்ப் பெண்கள் அமைப்பினராகிய நாங்கள் உரையாடியபோது...



**புலம் பெயர்ந்து வாழும் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் என்னவாக உள்ளன?**

புலம்பெயர்ந்து வாழ்வதால் தான் இந்தப் பிரச்சினை என்று சொல்லும் படியாக பிரச்சினைகள் தனியாக இல்லையென நான் நினைக்கிறேன். என்னைப்பொறுத்தவரை பெண்கள் எங்கு, எந்த சூழலில் வாழ்தாலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகத் தான் இவற்றைக் காண்கிறேன்.

மிதமிஞ்சிய ஆணாதிக்கம் – இல் வாழ்வில் சமத்துவம் இல்லாமை மனைவியிடமிருந்து மிதமிஞ்சிய எதிர்பார்ப்புகள், பெண்கள் வேலைக் கும் போய் வந்து முழு நேர தாயாக, முழு நேர மனைவியாக, இயங்கும் போது ஏற்படும் அசதிகளால் உள் ளத்தில், உடலில் உண்டாகும் சலிப்பு ஆகியன.

வேலைக்குப் போக வாய்ப்புக் கிடைக்காத பெண்களால் அது இன் னொரு வித பிரச்சினை, ஆனால் பணமுடை இல்லாத பட்சத்தில் பெண்கள் வேலைக்குப் போகாமல் வீட்டிலிருந்து பிள்ளைகளை வளர்ப் பது புலம் பெயர்ந்து வாழும் சூழலில் மிகவும் விரும்பத்தக்கது.

உண்மையில் இவை புலம்பெயர்ந்து வாழுவதால்தான் ஏற்படும் பிரச் சினை என்று கூற முடியாதல்லவா?

**இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பிரச்சினையைப் பொறுத்து இப் பெண்களின் பளுவை சுற்றத்தார் திட்டமிட்டு பகிர்ந்து கொள்ளும் புரிந்துணர்வு தான் ஒரே வழி.

**தற்போதுள்ள சூழலில் திருமணச் சடங்குள் ஒரு முற்போக்கான உலகத் துக்குப் பொருத்தமானதாக இருக்கின்ற னவா?**

முற்போக்கான உலகத்துக்கு எமது திருமணச்சடங்குகள் பொருத்தமான தாக இல்லையென அவற்றுக்கான காரணங்களை நோக்கினால் கூறத் தோன்றும். ஏனென்றால் முக்கிய மான திருமணச் சடங்குள் பலவும், பண்டைய சூழலில் மணமகனும் மணமகளும் முற்றிலும் அறிமுகமில் லாத புதியவர்களாக இருந்த பட்சத் தில், பயம், கூச்சம் ஆகியன அகல் வதற்கு அவசியமாகத் தேவைப்பட் டன. இப்போதோ மணமக்கள் சுமுக மாக பழகிய பின்பு தானே திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

ஆனால் தேவை நிமித்தம் இல் லாது போனாலும், இந்த மெருகூட் டும் திருமணச்சடங்குகள் மரபு வழி வந்த ஒரு பாரம்பரிய கலாச்சாரத்தை பிரதிபலிப்பனவையாக இருப்பதால் இவற்றை தொடர்ந்து கடைப்பிடிப் பதை நான் பெரிதும் விரும்புகிறேன். பின்வரும் சந்ததியினருக்கு எமது பண்டைய மரபினை நினைவு படுத் தும் இனிய சம்பிரதாயங்களாக இவை எனக்குப் படுகின்றன. அவசியம், அவ சியமில்லை என ஒதுக்கும் போது புலம்பெயர்ந்து பல்லினங்களிடையே வாழும் நாம் எம்மை இனம் காட்டி எமது இனத்தின் தனித்துவத்தை ஒழித்து விடமால் பேணுவது முக்கிய மான தேவையுமாகிறது. முன்னேறிய மேற்கத்தைய சமுதாயங்களில் கூட வழமை (*tradition*) என்று கூறி பழைய சம்பிரதாயங்களை இன்னமும் கடைப் பிடிப்பதை காண்கிறோம்.

**இங்கு குறிப்பாக பெண்கள் தமது பண்பாட்டுச்சின்னங்களை அணிந்து கொள்வதில்லை. இவ்வாறு அணிந்து செல்வதால் ஏற்படுகின்ற பிரச்சினைக ளாலா? அல்லது வேறு காரணங்க ளாலா?**

பண்பாட்டுசின்னங்களென்று சேலையணிவது, நெற்றிக்கு திலக மிட்டுக்கொள்வது, தாலிக்கொடி, என்பன இங்கு பலரும் அணிந்து செல்கின்றனர். இது அவரவர் விருப் பத்தை பொறுத்திருக்கிறது. ஆடைய ன்பது தனிநபர் ஆசை, ரசனை, தேவை என்பவற்றை பிரதிபலிப்பன.

www.tamileelamarchive.com

ஈழத்தில் கூட இப்போது வசதி கருதி தேவைக்கேற்ப உடை மாறி வருகிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் குளிர் காரணமாகவும் சேலையணிந்து செல்வதை தவிர்க்கின்றனர்.

பெண்கள் வெளிநாடுகளில் ஆற்றக் கூடிய பணிகள் எவை எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

வெளிநாடுகளில் தமிழ் பெண்கள் ஆற்றக்கூடிய பணிகள் பல உள்ளன. முக்கியமாக எமது கலாச்சராத்தைப் பேணிவளர்ப்பது. எமது பிள்ளகை ளுக்கு அவற்றை புகட்ட வேண்டும். வீட்டில் தாய் தான் பிள்ளைகளின் எண்ணங்களை சமைக்கும் கருவியா கிறாள். தமிழை, எமது பண்பாட்டை எமது பிள்ளைகளும் தொடரும் வண் ணம் செய்ய வேண்டும்.

மேல்நாட்டு பண்பாட்டு அம்சங்கள் குறிப்பாக பெண்களை எவ்வாறு பாதிக் கின்றன.?

மேல்நாட்டு பண்பாட்டு அம்சங்க ளில் குறிப்பாக ஆடைகள் தான் பெண்களை பாதிக்கின்றன. நாகரீக மோகத்தின் காரணத்தினால் சில பெண்கள் கேளிக்கைகளில் மூழ்கி விடுவதையும் காண்கிறோம். மற்றும் சிலர் சமத்துவம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் எல்லை மீறி கணவனை எதிர்த்து பிரிந்து வாழ்வவை வீணாக்கிக் கொள் கின்றனர்.

தாயகத்தில் போராட்டத்தில் ஈடுபட் டுள்ள பெண்களைப் பற்றிய அபிப்பிரா யம் என்ன?

தாயகத்தில் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள பெண்களைப் பற்றி நினைக்கும்போது மிகவும் பெருமித மாக உள்ளது. என்னால் தலை வணங்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில் கோழி கூடத் தன் குஞ்சுகளைக் காக்க பருந்துடன் கூட போரிட முனைகிறது. சூழ்நிலை இனம், மானம், உயிர் காக்க இந்த பெண்களை போராளிகளாக்கியுள் ளதை நினைத்து கலங்காமலும் இருக்க முடியவில்லை.

இந்த பெண்களில் சிலருடன் ஒன்றரை மாத காலத்துக்கு மேல் தங்கியிருக்கும் பெரும் பேறு *1995*–ல் எனக்கு கிடைத்தது. கனரக ஆயுதங் களை ஏந்தி போராடுவதால் இவர் கள் தமது மென்மையான பெண்மை உணர்வுகளை இழந்து இறுகிப் போன வர்களாக இருப்பார்களோ என நான் நினைத்ததற்கு மாறாக, அன்பும் பாசமும் குழந்தைத்தனமும் குறும்பும் மிக்க இயல்பான பெண்களை கண்டு நான் பூரித்துப் போனேன். போர்க் களத்தில் பிரிவுகளை சந்தித்தவர்கள், கொடூரங்களை அநுபவித்தவர்கள், ஒரு மாதமே பழகிய நான் விடை பெறும் போது, என்னைப் போலவே கண் கலங்கி அழுதபோது, அவர்க ளது மென்மையான இதயங்களைப் புரிந்து கொண்டேன்.

பெண்களுக்கான பாலியல் கல்வி புகட்டப்படுவது ஆரோக்கியமானதா? இது ஆரோக்கியமற்றதாக அமைந்து விடுவதற்கான காரணம் என்ன?

நீங்கள் எந்தக் கேள்வி கேட்டா லும் எமது கலாச்சார பின்னணியில் தான் நான் பதில் தர முடியும். எமது கலாச்சாரத்தில் பாலியல் கல்வியை கணவனிடமே கற்று அறிந்ததே மரபு. *40* வயதில் கூட திருமணமாகாத பட் சத்தில் பாலியல் அறிவு சற்றுமில் லாத பெண்கள் எமது சமுதாயத்தில் புதுமையானதல்ல. இந்த நாட்டு பெண் பிள்ளைகள் *13– 14* வயதில் கருத்தடை மாத்திரைகளை கைப்பை யில் காவலாகக் கொண்டு திரிவதும் புதுமையானதல்ல. இது ஒரு வாழ்க்கை முறை ( *A way of life*) இதனால்தான் இந்த சூழ்நிலைகளில் பிரவேசிக்கும் எமது பிள்ளைகளுக்கு எமது கலாச் சார பின்னணி பற்றிய போதனை அவசியமாகிறது. அவர்களது அணுகு முறை சந்தர்ப்பங்களை எப்படிக் கையாளுவது என்பது. எமது அணுகு முறை சந்தர்ப்பங்களை எப்படித் தவிர்ப்பது என்பது. பாலியல் கல்வி ஆரோக்கியமானதாக நான் கருத வில்லை.

> மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டுக்கு அப்பாலனது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. இந்த மனிதத் தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.
>
> பெண்ணிடமும் மனிதம் இருக் கிறது. அதன் அற்புதமான ஆற் றல்களையும், அலாதியான பண்பு களையும் பாலியல் அளவு கோலால் நிர்ணயிக்க முடியாது. எதையம் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஓர் உன்னதமான உதாரணமாகத் திகழ்கிறது.
>
> **— தலைவர் வே. பிரபாகரன்**

புலம் பெயர்ந்த நாடுகளில் குடும்ப உறவுகள் நிலைகெட்டும் சீர் கெட்டும் போவதற்கான நிலை எவ்வாறு உருவா கின்றன?

கேள்வியில் உள்ள 'புலம்பெயர்ந்த நாடுகளில்' என்பதை என்னால்

ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதோடு இந்நிலை பரவலானது என றும் நான் ஒத்துக் கொள்ள முடியாது. எங்கு வாழ்ந்தாலும் கணவன் மனைவி இருவரதும் புரிந்துணர்வும் அடிப் படை குணாதிசயங்களும் தான் கார ணம் என்பேன். புலம்பெயர்ந்த நாடு களில் வேண்டுமானால் சந்தர்ப்பங் கள் கூடுதலாக அமைந்து விடுகின் றன என்பது உண்மை. ஒன்றிரண்டு தடம் மாறினாலும் பெரும்பான்மை யாக எம்மவர்கள் எமது பண்புக ளைப் பேணி மேன்மையுடன் வாழு வதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது.

எங்கள் பிள்ளைகளை தமிழ்த்தேசிய உணர்வோடு வளர்க்கவேண்டும் என்பது பற்றிய தங்கள் கருத்து என்ன?

நிச்சயமாக எமது பிள்ளைகளை தமிழ்த்தேசிய உணர்வோடு வளர்க்க வேண்டும் என்பதில் மிக ஆர்வம் கொண்டுள்ளேன். உணர்வு எனும் போது மொழியை மட்டும் பிள்ளை பேசி விட்டால் போதாது. எமது கலாச்சாரம், பின்னணி, மரபு, எமது அடி, நாம் புலம் பெயர்ந்த கார ணங்கள், எமது இனத்தின்நிலை, என் பன பற்றி எமது பிள்ளகைள் அறிந் திருக்க வேண்டியது அவசியம்.

பொதுவாழ்வில் பெண்களுடைய பங்கு எப்படி இருக்க வேண்டும் என நீங் கள் கருதுகிறீர்கள்?

பொது வாழ்வில் ஈடுபடுவது அவரவர் வசதியையும் விருப்பத்தை யும் பொறுத்திருக்கிறது. நாட்டமும் அக்கறையும் இருந்தாலும் கூட வேலை என வரும் போது ஆர்வமும் சங்கற்பமும் இருந்தாலன்றி செய்து கொள்ள முடிவதில்லை. இன்னும் பெண்கள் முன்வந்து பொது வேலை யில் ஈடுபட வேண்டிய தேவை யுண்டு. தத்தம் குடும்பங்களை பேணு வதோடு நாட்டு நலனிலும் ஈடுபாடு காட்டுதல் அவசியம் என கருதுகி றேன்.

★★★

# யுத்தங்களின்போது பாலியல் வன்முறை
# சர்வதேச இராணுவத்தின் வரலாறு

https://tamileelamarchive.com/

லீப்பா மலெட் ஜெனவிக் என்ற சேர்பியப் பெண்ணிலை வாதி எழுதிய “Rape in war - The history of the Universal soldier” என்ற கட்டுரையின் தமிழாக்கம்



கொரேசியா, பொசுனியா, சேபியா, இந்தோனேசியா, அல்லது உஸ்பெக்கிஸ்தான் என்ற எந்த நாட்டில் யுத்தம் நடந்தாலும் இராணுவத்தினர் பெண்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்துகின்றனர்.

“ஆண்கள் யுத்தத்துக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெண்கள், இராணுவத்தினரை மகிழ்விப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்” என்று நியேட்சேயும், ஹிட்லரும் கூறியிருக்கின்றார்கள்.

இதுதான் நிலைமை என்றால், இதைத்தான் தலைவர்கள் சொல்கிறார்கள் என்றால் பாலியல் வன்முறை ஒரு யுத்த தர்ம விதியாக மாறுகிறது. ஆகவே பாலியல் வன்முறை தனியொருவரின் விருப்பு, வெறுப்பைச் சார்ந்ததாக அல்லாமல் கூட்டு நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்படுகிறது. இராணுவத்தினர் கொலைவதை செய்யும் போதும், பாலியல் வன்முறையில் ஈடுபடும் போதும் இச் செயல்களை அனுமதிக்கும் எல்லாம் வல்ல தலைவனின் ஆசீர்வாதம் தனக்கிருப்பதாக எண்ணுகின்றனர். அவர்களை ஊக்குவிப்பதும் அதுதான்.

பாலியல் வன்முறை என்பது பொழுதுபோக்குக்காக ஈடுபடும் செயல் அல்ல. ஒருவன் தனது ஆணாதிக்க அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் ஒரு விபரீதமான நடத்தை. ‘ஆண்மையுள்ள’ மனிதர்கள் என்று தம்மை எண்ணிக் கொள்ளும் மனித கூட்டத்துடன் சேர்ந்து கொண்டு ஒருவன் தனது அகங்காரத்தைத் திருப்திப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் வன்செயல். இந்த ‘ஆண்மை’ என்ற கருத்து ஆணாதிக்க சமூகத்தால் உருவாக்கப்பட்டதே தவிர, இயல்பான மனித உணர்வு அல்ல என்று பெண்நிலைவாதிகள் வாதாடுகிறார்கள். ஆகவே பாலியல் வன்முறை ஒரு அழிவு நடவடிக்கை. ஆணதிகாரத்தின் வெளிப்பாடு. அது ஒரு இயல்பான எழுச்சி அல்ல.

## லீப்பா மலெட் ஜெனவிக்

ஆண் படைப்பிரிவு, பெண்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தும்படி தனது அணியைச் சேர்ந்தவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கிறது. குழந்தைப் பருவத்தில் சகோதரியுடன் விளையாடியதாலும், தன் அன்னை மீது கொண்ட அன்பினாலும் சிப்பாய் பாலியல் வன்முறையில் ஈடுபடத் தயங்கலாம். ஆனால் அவனை அவ்வழியில் சக இராணுவத்தினர் ஈடுபடுத்திவிடுவர்.

யுத்தம் வேறுவிதமானது. எதிரித் தரப்புப் பெண்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்துவதுதான் முதன்முறையான விதி. எதிரியின் ஆதனங்களை அழித்தல் மற்றும் அவமானப்படுத்தல் மூலம் சிப்பாயின் பலம் செயற்படுத்தப்படுவதோடு அவனது ஆண்மையும் குலத்தின் மேன்மையும் உறுதியாக்கப்படுகின்றன. அவனுக்கு முந்தியவர்களும் இதைத்தான் செய்துள்ளார்கள். ஆண் – பெண் கலப்பினச் சமூகத்தின் ஆரம்பகாலப் படிமுறைகளில் பாலியல் வன்முறையும் ஒன்று. ஒரே மொழி பேசுபவர்களிடையே மோதல் என்றால், முதலாவது இலக்கு பாலியல் வன்முறையே. வேண்டுமானால் எந்தப் பெண்மீதும் பாலியல் வன்முறையைப் பிரயோகிப்பார்கள்.

ஒரு முஸ்லீம் இராணுவச் சிப்பாய் தனக்கு ஏறத்தாள இருபது வயது இருக்கும் போது தன்னிடம் வெறுப்புக் காட்டிய ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறை செய்து கொன்றதாகக் கூறினார். இறந்தவளின் வயிற்றில் நான்கு ரவைகள். இதனால் உலகில் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. எந்த நீதி நிறுவனமும் எப்பொழுதும் இதை விசாரிக்காது. சமூக விழுமியங்கள் என்ற கட்டமைப்பில் அவளது

...ள்ளார்ந்த துயரங்கள் சொல் வடி வம் பெறாது.

யுத்தங்களில் சாகும் ஆண்களுக்கு உயர்ந்த விழுமியங்களுக்கு உறுதிய ளிக்கப்படுகின்றது. அவர்கள் அடை வது வீரச்சாவு. அவர்களுக்கு நினை வாலயங்கள் எழுப்பப்படுகின்றன. இவர்கள் நூற்றுக்கணக்கான பெண் களை, நூற்றுக்கும் அதிகமான தட வைகள் பாலியல் வன்முறைக்கு உட் படுத்தியவர்கள்.

பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்டு, கொல்லப்படுகின்ற பெண் கள் வீரச்சாவடைவதில்லை. 'காணா மல் போனவர்கள்' என்று அவர்க ளுக்கு நினைவாலயங்கள் எழுப்பப் படுவதில்லை. பெண்கள், பெண்க ளின் கண்களினால் உலகை நோக்கும் போதே அவர்கள் வீராங்கனைகளா கத் தெரிகின்றார்கள்.

இந்த யுத்தத்தில் கொரேசியாவி லும் பொஸ்னியாவிலும் பல ஆயி ரக்கணக்கில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஒரு முறை அல்ல பல முறைகள் பாலியல் வன்முறைக்கு உட்பட்டி ருக்கிறார்கள். அனைத்து இனத்தின ரும் அனைத்து வயதினரும் எனப் பல பெண்கள் கொல்லப்பட்டிருக்கின்ற னர். தரவு சேகரிப்பவர்கள் எந்த யுத்தப் பதிவேடுகளாலும் இந்தப் பெண்களைப் பற்றிய தகவல்களைப் பதியவில்லை.

சரயிவோவிலும் ஏனைய நகரங்க ளின் விடுதிகளிலும், பாடசாலைக ளிலும் பல பெண்கள் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள் ளார்கள். இந்தப் பெண்களில் சிலரா வது தப்பினார்களா, தப்பியிருந்தால் எப்படி எதிர்த்தார்கள், மற்றவர்களின் பயமுறுத்தல்கள், பாலியல் அடிமைத் தனத்துக்கு எவ்வாறு இரையானார் கள். அவர்களால் எந்தெந்த வாழ்க்கை முறையை மாற்றியமைக்கமுடியாதுள் ளது, அவர்களது சுயம் அல்லது சிருங் கார மனோபாவம் என்னவாகும், பல் லைக் காட்டுகின்ற வன்முறையா ளரை அவர்கள் தொடர்ந்தும் எதிர் பார்ப்பார்களா?

எமக்குத் தெரியாது.

வியட்நாம் யுத்தத்துக்குப் பிறகு பெண்கள் மீதான பாலியல் வன் முறை குறித்த, மறைந்துபோன ஆவ ணங்களைப் பெண்ணிலைவாதிகள் தேட ஆரம்பித்தனர். நாகரிகத்தின் ஆரம்ப காலம் முதல், அனைத்து யுத்தங்களிலும் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது தொடர்பான வரலாற்றுப் பிரதிக ளையும் அவர்கள் படிக்க ஆரம்பித்த னர்.

https://tamileelamarchive.com/

"யுத்தத்தில் வெற்றி பெற்றவ னுக்கே கைப்பற்றிய பொருட்கள்" என்று கிரேக்கரின் புராதன வாசகம் ஒன்று கூறுகிறது. யுத்தத்தின் பிறகு கிரேக்க வீரர்களுக்குப் பெண்களை வழங்குவது ஒரு மரபு ரீதியான பரிசாகும். இதில் யுத்த விபச்சாரத் துக்கும் பாலியல் வன்முறைக்கும் இடையில் வேறுபாடு காண்பது கடினமானது. சிப்பாய்கள் தமது உடற்பலத்தின் மூலம் அல்லது பணத் தினால் நிர்ப்பந்தப்படுத்தி பெண்கள் மீது உரிமை பாராட்டுவது ஒரு இரா ணுவ எண்ணக் கருவாகும்.

ஆறாம் நூற்றாண்டு ரோம யுத்தத் தில் பாலியல் வன்முறை நிகழ்ந்ததா கப் பதிவுகள் உண்டு. பிரான்சு – இங் கிலாந்துக்கிடையிலான நூற்றாண்டு யுத்தத்திலும், இங்கிலாந்தில் ஒவ்வொரு மன்னர் ஆட்சிக்காலத்திலும், அமெ ரிக்க விடுதலைப் போர்களிலும் பாலி யல் வன்முறை நடைபெற்றதற்கான பதிவுகள் உள்ளன.

உக்ரெயினின் கிராமமொன்றில் பாசிஸ்டுகள் பெண்கள் மீதும், பரு வப் பெண்கள் மீதும் பாலியல் வன் முறையைப் பாவித்தார்கள். பெரசொ வ்கா பிரதேசத்தில் குடிபோதையில் இருந்த ஜேர்மன் படையினர் பதினா றுக்கும் முப்பது வயதுக்கும் இடைப் பட்ட எல்லாப் பெண்களையும் தூக் கிச் சென்றுவிட்டார்கள்.

அலெக்சாண்டர் சோல்ஹென் சின் என்பவர், யுத்தத்தின் மறுபக்கத் தைப் பற்றி *The Gulag Archipelage* என்ற நூலில், 'மூன்று வாரங்கள் ஜேர்மனியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது ஜேர்மனியப் பரு வப் பெண்களைப் பாலியல் வன் முறைக்கு உட்படுத்தியபின் சுட்டுக் கொல்லலாம் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இது யுத்தத்தின் தனிச்சிறப்பாகும்' என்று எழுதியுள் ளார்.

*1945*–இல் செஞ்சேனை, கிழக்கு ஜேர்மனிக்கும் போலந்துக்கும் இடைப்பட்ட பகுதியில் சுமார் இரு பது இலட்சம் பெண்களைப் பாலி யல் வன்முறைக்கு உட்படுத்தியதாக, ஜேர்மன் பெண்ணிலைவாதியான இயக்குனர் ஹெல்கி சான்டர்ஸ், *1992* இல் பெர்லினில் நடந்த திரைப்பட விழாவில் விவரணப்படம் ஒன்றைக் காட்டினார். அப்போது (யுத்தகாலத் தில்) பதினைந்து வயதுப் பெண்கள் தாம் நூறு தடவைகளுக்கு மேல் பாலியல் வன்முறைக்குட்பட்டதாகச் சாட்சியம் கூறுவதை ஒளிப்படக் கருவி படம் பிடித்துள்ளது.

கொரியா – யப்பான் போரில் (*1920 – 1940*) ஒரு இலட்சம் கொரியப் பெண்கள் பசுபிக் தீவுகளில் நீண்ட காலம் பாலியல் அடிமைகளாக வைத் திருக்கப்பட்டதற்காக, கொரியாவின் பெண்கள் குழுவொன்று யப்பானிய அரசிடம் நட்டஈடு கோரியுள்ளது. பெரும்பாலான பெண்கள் அப்போது பதினாறிலிருந்து பதினெட்டு வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தனர். வீடுகளிலிருந்து பிடித்துச் செல்லப் பட்டனர். அவர்கள் திரும்பி வீட் டுக்கு வரமுடியாது. நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவரும் குறைந்தது பதி னைந்து தடவை இராணுவத்தினரு டன் பாலியல் உறவில் ஈடுபடும்படி வற்புறுத்தப்பட்டனர்.

*1990*ல் குவைத் ஆக்கிரமிக்கப் பட்டபோது ஈராக்கியர் வயது எல்லை இல்லாமல் பெண்களைத் துன்புறுத் தியதோடு பாலியல் வன்முறையை

**இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கின்றது.**

– தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் –

யும் பிரயோகித்தனர். கருச்சிதைவு செய்வது குவைத்தில் சட்டவிரோத மானது. பெண்கள் மகப்பேறு வரை யிலும் குழந்தைகளை வயிற்றில் சுமக் கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். பிறந்த குழந்தைகளை குவைத் ஆண் கள் கொன்றனர். குழந்தைகள் எதிரிக ளின் குழந்தைகள். இந்தப் பெண்க ளால் சாதாரணமாக வாழ்க்கையைத் தொடரமுடியாது. பலவந்தமாக விபச் சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டவர்கள், அவர்கள் தங்களைத் தாங்களே வேறு பல வழிகளில் அழித்துக்கொண்ட னர். சிலர் தற்கொலையும் செய்தனர்.

கொரேசியா மற்றும் பொஸ்னியா வில் உள்ள அனைத்து யுத்த முனைக ளிலும் பாலியல் வன்முறைகள் பெரு வாரியாக நடைபெறுகின்றன. இரா ணுவத்தினர் திரும்பிச் செல்லும் வழி யிலுள்ள முன்னாள் யூகோசிலேவாக் கியா நகரங்களிலும் பாலியல் வன் முறைச் சம்பவங்களுக்கு குறைச்ச லில்லை. சக்ரெப் மற்றும் பெல்கிரட் நகரங்களில் சிறுவர்கள், பெண்களுக் கான சிறப்புத் தொலைபேசி அழைப் புக்களிலிருந்து, யுத்தம் ஆரம்பித்தது முதல் பாலியல் வன்முறைச் சம்பவங் கள் நூறுவீதம் அதிகரித்துள்ளதாகப் பதியப்பட்டுள்ளது.

இவர்கள் அனேகமாக முன்னாள் இராணுவத்தினர். தமது மனைவியர் களையும் துன்புறுத்தல், பாலியல் வன்முறையில் இறங்கல் எண்ணங்க ளுடனேயே அணுகுகின்றனர்.

கொரேசியா யுத்தத்தைப் பற்றிய, ஹெல்சிங்கிவோச் என்ற மனித நேய அமைப்பின் முதல் அறிக்கையில் கொசோவைச் சேர்ந்த அல்பேனியப் பெண்ணின் வாக்குமூலத்தை வெளி யிட்டுள்ளது. சமஷ்டி ஆட்சிப்படை யின் இராணுவ நடவடிக்கையின் போது அந்தப் பெண் கொரேசியரு டன் அறை ஒன்றில் வைக்கப்பட் டாள். ஆண்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். பதிலாக அவளின் உயி ருக்கு ஆபத்து ஏற்படுத்தவில்லை. உயிர் வழங்கியதற்குக் கைமாறாக அவள் பலமுறை குறுக்கு விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டதோடு, பன் னிரண்டு மணித்தியாலங்கள் பாலி யல் வன்முறைக்குட்படுத்தப்பட்டாள். *(1992 ஜனவரியில்)* தன்னுடைய மௌனத்தை அவளால் வார்த்தைக ளாலும் செயலாலும் எப்போதாவது கலைக்கமுடியுமா?

பெண்கள் பற்றிய ஆய்வுகளிலி

> கலைஞனுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவு ஒரு இரு வழிப்பாதை. அவன் தனக்குத் தான் நம்பிக்கையானவனாகவும் வெற்று விவாதங்களிலிருந்து விடு தலை பெற்றவனாகவும் இருப்பதன் மூலம் புதிய கண்ணோட்டங்களை உருவாக்குகிறான். மக்களின் புரிந்துகொள்ளும் திறனை உயர்த் துகிறான். இதன் விளைவாக ஒரு சமுதாயத்தின் விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது. அதன்மூலம் ஒரு புதிய கலைஞன் பிறப்பதற் கான வழியை உருவாக்குகிறது.
>
> — அந்த்ராய் தார்க்கோவ்ஸ்கி —

ருந்து பாலியல் வன்முறையில் மூன்று அம்சங்கள் இருப்பதாகக் கருதப்படுகி றது. முதலாவதாக யுத்தத்தில் பாலி யல் வன்முறையைப் பாவிப்பது பகி ரங்கமானது. துன்புறுத்தல் மற்றும் பாலியல் சம்பவங்கள் சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டிலேயே இடம் பெறுகின்றன. ஆண்கள் பாலியல் வன்முறையில் ஈடுபடும்போது ஒரு பெண்ணுக்கு உடலோ, விருப்பு வெறுப்புக்களோ இருப்பதாகக் கருது வதில்லை. எதிரித்தரப்புப் பெண்களை துன்பப்படுத்துதல் எதிரியை வெற்றி கொண்டதற்கான ஓர் அடையாளமா கும். ஆகவே அதில் கொடூரமும் நாட கத் தன்மையும் இருக்க வேண்டும். தலைமயிரை எரிப்பது, அவர்களின் உடல் உறுப்புக்கள் சிலவற்றை வெட்டி எடுப்பது, சங்கிலியாலும் கயிற்றாலும் கட்டி இழுத்து இரத்தக் காயங்களு டன் விடுவது போன்றவற்றில் ஒரு அரக்கத்தன்மையுள்ளது. யுத்தத்தில் வெற்றி பெறுவது ஆண்கள். வெற்றி ஆண்கள் சார்புடையது. இதைத் திருப்பித் திருப்பி நிரூபணமாக்க வேண்டியுள்து.

பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்டவள் வெற்றிகொண்டவனின் இனமாக இருந்தாலும், அது வெற்றி யின் அறிகுறியாகவே கருதப்படுகிறது. அது ஆண்மையின் வெற்றி.

இரண்டாவது, யுத்தப் பாலியல் வன்முறைகள் பெரும்படியான பாலி யல் வன்முறைகளாகும். எல்லோரும் இணைந்து தோழமையுடன் செய்கின் றார்கள். குழுக்களாகப் பாலியல் வன்முறையில் ஈடுபடும்போது, மற்ற வர்கள் முன்னிலையில் அது நடை பெறுவதால், யுத்த தர்ம கோட் பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாகிறது சுடுவதும் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதும்தான் இராணுவத்தின ரின் கோட்பாடு என்றால், யுத்த காலத்திலும் அதன் பின்னரும் பெண் களின் அந்தஸ்தை அறிந்துகொள்ள லாம்.

மூன்றாவது, தம்மால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண் ணைக் கொல்வதாகும். ஒரு பெண் ணைக் கொல்வதால் சிப்பாயால் அவளை வீராங்கனையாக்கி விட முடியாது. பெண்களைக் கொல்வ தால் மேலதிகமான புள்ளிகளோ, எதிர்காலத்தில் புகழோ வந்து சேரப் போவதில்லை. பாலியல் வன் முறையே போதுமானதாக இருந்தும், பெண் கொல்லப்படுகிறாள். அவள் ஒத்துழைக்க மறுத்ததால் இருக்க லாம், அல்லது விளையாட்டாகச் சுடுவதாக இருக்கலாம். காரணம் இல்லாமலும் இருக்கலாம். ஒரு பெண் ணைக் கொல்வதா, இல்லையா என் பது இராணுவத்தினரின் சுயவிருப் பத்தைப் பொறுத்தது.

இந்த யுத்தக் கோட்பாடுகளின்படி பெண் ஒரு மதிப்புக்குரியவளாகக் கருதப்படுவதில்லை. வெறுக்கத்தக்க வளாகக் கொள்ளப்படுகிறாள். நுகர் வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரியவளாக எண்ணப்படுகிறாள்.

பெண்களைக் கொலைசெய்வ தற்கோ அன்றி அவர்கள் மீது பாலி யல் வன்முறையைப் பிரயோகிப்ப தற்கோ, பெண்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தை ஆண்கள் பிரகடனப்படுத் தத் தேவையில்லை. இருபது வருட ஆய்வுகள் இதனை மெய்ப்பிக்கின் றன. யுத்தகாலங்களில் பெண்களைக் கொல்வதற்கும், பாலியல் வன்முறை யைப் பிரயோகிப்பதற்குமான ஆண் களின் சுயமான அதிகாரம், மேலும் அதிகரித்துள்ளது.

பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல், கொலை செய்தல் என்பன அதிகாரத்தின் ஆயுதம் எனக் கருதுகின்றார்கள். பெண்களைப் பெண்களாக நினைப்பவர்கள், பாலி யல் வன்முறைக்குட்பட்ட பெண் களை பாதிக்கப்பட்டவர்களாகக் கருதுவதில்லை. பாலியல் வன் முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண் கள் ஒவ்வொருவருக்கும் இக்கட்டு ரையை சமர்ப்பிக்கிறேன். ★

https://tamileelamarchive.com/




# தமிழீழ காவல் துறையில் பெண்கள்

எதிரியிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட எம் தாயக மண்ணில் ஆட்சியமைப்புக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எமது விடுதலை இயக்கம் மேற்கொண்டு வருகிறது. இத்தகைய ஆட்சியமைப்புக்களின் ஓர் அங்கமாகவே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்டம் நடைபெறுகின்ற எல்லா நாடுகளையும் போல, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆட்சி அமைப்புக்களை உருவாக்குகின்ற விடயத்தில் நாம் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை உயர்ந்த கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் இவ் அமைப்புக்கள் நிறுவப்பட வேண்டும் என்பதில் மிகவும் கவனம் எடுத்து வருகிறோம். இந்த அடிப்படையிலேதான் தமிழீழ காவல்துறை உருவாக்கப்படுகின்ற போதே சமகாலத்தில் பெண்களையும் இதில் இணைத்துக் கொண்டோம். காவல் துறை உருவாக்கப்படுகின்ற போதே அதில் பெண்களை சமகாலத்தில் இணைத்துக் கொள்ளுதல் என்னும் நிகழ்வானது தமிழீழ வரலாற்றுக்கு மட்டும் உரித்தான தனிச்சிறப்பான அம்சமாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எங்கும் காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு பல்லாண்டு காலத்துக்கும் பின்னரே பெண்கள் மிகவும் குறைந்த அளவிலே இணைக்கப்பட்டனர். ஒரு சில காவல் பணிமனைகளில் மட்டும் ஆண் அதிகாரிகளின் கீழ் பணிபுரிகின்ற ஓர் நிலைமையை மட்டுமே அங்கு நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அதுவும் எந்த விதமான அதிகாரமுமற்ற நிலையில் பெண்களை கைதுசெய்தல் போன்ற ஒரு சில தேவைகளுக்காகவே காவல் துறையில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

தமிழீழ காவல்துறையில் பெண்களின் இணைவு என்பது இது போன்ற சில எதிர்பாராத சில தேவைகளுக்காக உருவாக்கப்பட்டதொன்றல்ல. சமூகத்திலும் ஆட்சி அமைப்பிலும் பெண்களுக்கு சமமான ஓர் பங்க



ளிப்பை ஏற்றுக்கொண்ட உயரிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ஓர் வரலாற்றுப் பரிமாணம் உண்டு. எமது தாயக விடுதலைக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமும் இந்த விடுதலைப் போரை நடத்திக் கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகள் இயக்கமும் எமது மண்ணிலே பாரிய மாற்றங்களை உருவாக்கி இருக்கின்றன. தேசிய விழிப்புணர்ச்சியுடன் சேர்ந்து சமூகத்தில் புரையோடிப்போய்க் கிடக்கின்ற பிற்போக்குத்தனமான எண்ணங்களுக்கு எதிராகவும் இங்கே பெரியதோர் போராட்ட உணர்வை உருவாக்கி விட்டிருக்கிறது. இத்தகைய போராட்ட உந்துதலினால் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியே பெண்கள் தேசிய விடுதலைப் போரிலே பாரிய அளவில் இணைந்து கொள்வதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டிருக்கிறது.




தேசிய விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்புக்கூட ஏனைய நாடுகளினின்றும் வேறுபட்ட வகையில் சிறப்பான அம்சங்களைக் கொண்டதாக எமது தேசத்தில் விளங்குகிறது.

பல நாடுகளில் இராணுவத்தில் பெண்கள் ஒரு தனிப்படைப்பிரிவில் இருப்பதில்லை. போர்க்காலங்களில் மட்டும் இவர்கள் இராணுவத்துக்கு அழைக்கப்பகின்றனர். அவ்வாறு அழைக்கப்படுபவர்கள் கூட எதிரிக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போரிடுவதில்லை. காயப்பட்டவர்களைத் தூக்குதல், மருத்துவ சேவை செய்தல், போரிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உணவு விநியோகித்தல் உட்பட சகல பின்புல வேலைகளிலுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். போரிடும் பணியில் இவர்கள் இணைக்கப்படுவதாய் இருந்தாலும் ஆண்களுடன் ஓரிருவர் மட்டும் பணியாற்றும் விதத்தில் படைகளில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். ரஷ்யாவில் ஒரே ஒரு பெண்தான் இராணுவ உயர் அதிகாரியாக இருந்திருக்கிறார்.

புரட்சிகரமான போராட்டம் நடந்த நாடுகளில் கூட போராட்ட வேளையில் மட்டும் பெண்களின் பங்களிப்பு முக்கியப்படுத்தப்பட்டது. போராட்டம் வென்ற பின் மீண்டும் பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

இந்த நிலை எமது மண்ணில் இல்லை. அந்நிய ஆக்கிரமிப்பை உடைத்தெறிவதற்கான தேசிய விடுதலைப் போராட்டத்திலே இணைந்து கொண்ட பெண்கள் சகல செயற்பாடுகளிலேயும் ஆண்களுக்குச் சரிநிகராக நின்று சாதனை படைத்து வருகின்றனர்.

பெண்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் பங்களிப்பையும் சகல நிலைகளிலும் எமது விடுதலை இயக்கம் வெளிப்படுத்தி நிற்கின்றது. எமது விடுதலை இயக்கத்தின் இத்தகைய உயரிய கொள்கைத் திட்டமும் அதனால் தமிழீழப் பெண்கள் மத்தி



யில் ஏற்பட்ட பாரிய விழிப்புணர்ச்சியும் தமிழீழ காவல் துறையின் பெருமளவு பெண்கள் இணைக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழீழக் காவல்துறையினருக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டபோது ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே அனைத்துப் பயிற்சியிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பயிற்சி வழங்கல், பொறுப்பு நிலையங்களைப் பகிர்ந்தளித்தல், வேதனம் வழங்கல் என்ற எந்த ஒரு நிலையிலும் ஆண்களோடு சமமான நிலையிலேயே பெண்கள் வைத்துப் பார்க்கப்பட்டனர்.

காவல்துறையில் பெண்களை இணைத்தது தொடர்பாக தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் கருத்துத் தெரிவிக்கையில், எந்த ஒரு நிர்வாகமும் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் பூரணமடையாது என்றார்.

மேலும் தெரிவிக்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பயிற்சி, சமமான அறிவூட்டல் என வேறுபாடற்ற வகையிலேயே பயிற்சி வழங்கப்பட்டது என்றும், இதன் போது ஆண்களுக்கு நிகராக பல இடங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழீழக் காவல்துறையில் பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட விடயமானது பழமைவாதக் கோட்பாடுகளுக்குள் ஊறிப்போன எமது சமுதாயத்தில் நடைபெற்ற ஓர் புரட்சிகரமான நடவடிக்கையாகும்.

வீட்டைவிட்டுப் பெண் வெளியே தலை காட்டுவது தவறு என்ற தவறான பார்வை இங்கே உடைக்கப்பட்டிருக்கின்றது. ஆண்களுக்கு நிகராக சகல துறைகளிலும் பெண்களால் செயல்பட முடியும் என்ற மிகப் பெரிய நம்பிக்கையுடன் தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்டிருக்கின்றனர். சட்டம், ஒழுங்கைப் பேணவும், நீதியை நிலை நாட்டவும், பெண்கள் தனித்துச் செயற்படுகின்ற தன்மையை தமிழீழ காவல் துறையில் காணக்கூடியதாக இருக்கின்றது.



தமிழீழக் காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்ட இந்நிகழ்வானது இன்று எமது சமுதாயத்திலே பெண்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை இலகுவாக செயற்படுத்தக்கூடிய ஒரு களத்தை உருவாக்கித் தந்திருக்கிறது. ஆணாதிக்க வன்முறைக் கொடுமைகளுக்கெதிராகவும், பெண்கள் தாம் சமூகத்திலே எதிர்கொள்ளுகின்ற நெருக்கடிகளுக்கெதிராகவும் நீதியான தோர் தீர்வைத் தேடிக்கொள்ள காவல்துறைப் பெண்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றனர்.

பெண்ணுரிமைப் போராட்டத்திலே இது ஓர் வளர்ச்சி நிலையைக் காட்டி நிற்கின்றது. இத்தகைய களத்தை அச்சாணியாக கொண்டு தமது வாழ்வை மேம்படுத்தவும் சமுதாய வாழ்வை மேம்படுத்தவும் பெண்கள் இது போன்ற துறைகளில் இணைந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**- ஜெயா**

நன்றி: 'சுதந்திரப் பறவைகள்'

லெனின்கிராடுப் பெண்களே, உங்களது உழைப்பின் மேன்மையை, உங்களது நாட்டிற்கான, நகரத்துக்கான, இராணுவத்துக்கான, வேலை மற்றும் குடும்பத்துக்கான விசுவாசத்தை, எல்லையற்ற துணிவைப் போற்றிடப் பொருத்தமான சொற்களை யாரேனும் கண்டு பிடிப்பார்களா? எங்கணும் உங்களது அழகிய, திறமைவாய்ந்த, பணியில் களைப்பை அறியாத கரங்களைக் காண்கிறோம். தொழிற்சாலையில் எந்திரத்தின் அருகே, காயமுற்ற போர்வீரனின் படுக்கையருகே, கூரையின் மீது விமானப் பாதுகாப்பு நிலையத்தில், அலுவலகத்தில், குழந்தைகள் இல்லத்தில், லாரிச் சக்கரத்தின் பின்னே, சுரங்க வாயிலில், படகுகளின்னிறும் பாரங்களை இறக்குகையில், தொழிலாளி, விமானப் பாதுகாப்புச் சாரணர், இரயில்வே ஆள், இராணுவ மருத்துவர், தொலைபேசி இயக்குனர் போன்று உடையணிந்தவாறு எல்லா இடங்களிலும் உங்களைக் காண்கிறோம். தோட்டங்களிலும் சாலையோரங்களிலும் உங்கள் கரங்கள் காய்கறிகளை விளைவிக்கின்றன. எல்லாப் பெரும் பொறுப்புக்களையும் உங்களது தோள்களில் ஏற்றிக்கொள்கிறீர்கள், சூரியனுடைய கதிர்களைப் போன்ற உங்களது புன்னகைகள் லெனின்கிராடின் முழு வாழ்க்கைக்குமே ஒளியூட்டுகின்றன.

'லெனின்கிராடுக்கான பாதுகாப்பு' என்னும் நூலிலிருந்து

https://tamileelamarchive.com

# தெலுங்கானப் போராட்டத்தில் பெண்கள்



காலங்காலமாக இருள் படிந்த பிரபுத்துவ ஒடுக்குமுறை கட்டாய உழைப்பு, ஊழலாலே உருவான நிர்வாகம், மக்களது மொழியையும் கலாச்சாரத்தையும் ஒடுக்கிய கொடுங் கோலாட்சி இவை யாவற்றிலும் நசுக் குண்டு வேதனையால் துவண்டு கொண்டிருந்த தெலுங்கான மக்கள், தம் வாழ்க்கையின் விடிவுக்காகத் தொடங்கிய போராட்டம் மகத்தானது; ஈடு இணையற்றது; இந்திய வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத் தைப் பதித்துக் கொண்டது.

நிஜாம் ஆண்ட ஐதராபாத் மாநிலத்தில் இப்போராட்டம் நடைபெற்றது. ஈடிணையில்லாத இந்த ஆயுதப் போராட்டம், உழவர் எழுச்சி 1946–ம் ஆண்டு ஜூலை 4–ம் திகதி தொடங்கி ஐந்தாண்டு காலம் நீடித்து 1951–ம் ஆண்டு ஒக்டோபர் 21–ம் திகதி முடிவுற்றது.

தெலுங்கானா மக்கள் முதலில் ஈராண்டு காலம் நிஜாம் என்ற இஸ்லாமிய பிரித்தானிய ஏகாதிபத்திய அடிவருடியின் படைகளையும் அவர்களது குண்டர்களையும் எதிர்த்துப் போராடினர். அடுத்த மூன்றாண்டு காலம் ஜவகர்லால் நேரு ஏவிய இந்திய இராணுவத்தையும் இதர ஆயுதப் படைகளையும் எதிர்த்துப் போராடினார்கள்.

இந்தப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய தெலுங்கான விவசாயிகளும் இப்புகழ் மிக்க உழவர் பேரெழுச்சியை வழிநடாத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விசாலாந்திரா மாநிலக் கிளையும் அளப்பரிய தியாகங் கள் புரிந்தன.

தெலுங்கானாவில் வாழ்ந்த மக்களின் குறிப்பாக ஐதராபாத்தின் சமூக, பொருளாதார வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்திய முக்கிய காரணி தங்குதடையற்ற பிரபுத்துவச் சுரண்ட லும், கட்டாய உழைப்புமாகும். தெலுங் கானா விவசாயிகளின் ஆயுதப்போ ராட்டம் ஆரம்பமாகும் வரை அ சுரண்டல் தொடர்ந்து கொண்டே யிருந்தது. துன்பமும் துயரமுமே வாடிக்கையாகப் போன வாழ்க்கை யில் சாதாரண அடிப்படை உரிமைக ளைப் பெறுவதற்கான நடவடிக்கை களில் தெலுங்கானா மக்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.

சாதாரண குடியுரிமைக்காகவும் கல்விக்காகவும் பொறுப்பாட்சிக்காக வும் அவர்கள் போராடினார்கள். இந் தப் போராட்டம் இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சி, ஆந்திர மகாசபை ஆகியவற்றின் தலைமையில் மக்களின் சக்தி மிக்க ஆயுதப் போராட்டமாக வளர்ந்தது. நிலத்துக்கும் விடுதலைக் குமான ஆயுதப்போராட்டமாக, நிலப் பிரபுத்துவச் சுரண்டலுக்கும் நிஜாமின் ஆட்சிக்கும் எதிரான ஆயுதப் போராட் டமாக வடிவெடுத்தது. இப்போ ராட்டம் தெலுங்கானாக் கிராமப் பகுதியில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதிக்குப் பரவியது. இத்தகைய கிராமங்களில் மக்களின் தன்னாட்சிப் போராட்டக் குழுக்கள் அமைக்கப் பட்டன. இப்போராட்டக் குழுக்கள் தீவிரமாகப் போராட்டக் களத்தில் குதித்தன. நிலங்களை மீட்டெடுப்பதிலும் பிரபுக்களை எதிர்த்துப் போராடுவதிலும் பலமாக அணிதிரண்டு போரிட்டன.

நிஜாமின் அதிகாரிகளும், நிலப் பிரபுக்களும் கிராமங்களை விட்டு ஓட வேண்டியதாயிற்று. நிலவெளியேற்றமும், ஊழலே உருவான அதிகாரிகளும், கிராம ஒடுக்குமுறையாளர்களும் நடாத்திய சித்திரவதைகளும் வன்முறைகளும் ஒழிந்தன. நிலங்கள் கொஞ்சங் கொஞ்சமாக மீட்டெடுக் கப்பட்டன.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முழக்கங்களைப் புரட்சியாளர்கள் முழங்கத் தொடங்கினர்.

இவ்வாறிருக்க, இந்தியக் காங்கிரசின் தலைமீடு இப்போராட்டத்தின் பால் திரும்பியது. ஐதராபாத் மாநிலத்தை இந்தியாவுடன் இணைக்கும் முகமாக இந்தியக் காவற்றுறை 1948 செப்டெம்பர் 13–ல் ஐதராபாத் மீது நடவடிக்கை எடுத்தது. இந்தியப் படைகளிடம் நிஜாம் நவாபி சரணடைந்தான். ஆனால் மக்கள் எதிர் பார்த்த நிம்மதி கிடைக்கவேயில்லை.

பழையபடி பிரபுக்களும், ஊழல் நிறைந்த அதிகாரிகளும் வந்தனர். கம்யூனிஸ்டுக்களையும், விவசாயத் தொழிலாளிகளையும் காட்டிக்கொடுத்தனர்.

நேருவின் இராணுவப்படை தெலுங்கானா மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தை நசுக்கும் பொருட்டு என்றுமில்லாதவாறு அளவுக்குச் சீர்குலைவு வேலைகளைச் செய்தது. பயங்கரக் கொடுமைகளைச் செய்து கம்யூனிசக் கெரில்லாக்களைக் காட்டித் தரும்படி மக்களை மிரட்டியது.

பெண்களைக் கொடுமைப்படுத்தினர். பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். சிறுமியரும் ஏன் கர்ப்பிணித் தாய்மாருங்கூட மிக மோசமான பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர். அப்பாவி மக்களை உயிரோடு எரித்தும் புதைத்தும் கோரமான படுகொலைச்[illegible]படுத்தினர்.

https://tamilbookmarchive.com/

இத்தகைய நிலையிலும் ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற இராணுவ உத்தரவுக்கு அடிபணியாது மக்கள் படை போராடியது. நாட்டுத் துப்பாக்கி, ஈட்டி போன்ற ஆயுதங்களுடனும் சிறிய அளவிலான நவீன ஆயுதங்களுடனும் கிராமியப்படை கெரில்லாக் குழுக்களுடன் சேர்ந்து போராடியது.

இந்தப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கெடுத்தனர். பெண்கள் ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள், பலவீனமானவர்கள் என்று சமுதாயத்தால் காலங்காலமாக நிலவிவரும் கருத்துக்களை எதிர்த்துக் கிராமக் குழுக்களும் கட்சியும் இயக்கம் நடாத்துவது இதனால் எளிதாயிற்று. ஆண்களும் பெண்களும் சம உரிமை படைத்தவர்கள் என்று பஞ்சாயத்துக் குழுக்களும் அறிவித்தன. அவ்வாறே இயக்கமும் நடாத்தியது. விருப்பமற்ற திருமணங்களைத் தடுத்தல், அதாவது பெண்ணை அவள் விரும்பாத ஆணை மணக்கும்படி கட்டாயப்படுத்தலைத் தடுத்தல், விவாகரத்துச் செய்து வைத்தல், புதிய தம்பதிகள் கண்ணியமாய் வழி நடத்தத் துணைசெய்தல் ஆகிய கடமைகளையெல்லாம் கிராமியக் குழுக்கள் நிறைவேற்றிவந்தன.

கெரில்லாக் குழுக்களில் சமத்துவமும் பரஸ்பர மரியாதையும் மீறாத நெறிகளாகக் கடைப்பிடிக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பண்பாட்டு முன்னேற்றம் என்பன இதன் கொள்கைகளாக

# சமகாலக் கண்ணோட்டம்

வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களின் தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. திருமணத்துக்காக மட்டும் அனுப்பப்படும் பெண்களின் நிலைப்பாட்டை மட்டும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

பெண்கள் தமக்குக் கணவனாக வர இருப்பவனின் உருவம், குண இயல்பு, பெயர், ஊர் எதுவுமே தெரியாமல் அவர்களைத் திருமணம் செய்த ஒரு காலம் இருந்தது. அதனைப் பழைய காலம் என்பர் பலர். நாகரிகம் வளர்ச்சியுறாத காலம் என்பர் இன்னும் சிலர். அதே காலம் மீண்டும் நவீனமயப்படுத்தப்பட்டு வந்துள்ளதோ என்று எண்ணவைக்கின்ற ஒரு நிகழ்வுதான் சிறிது காலமாகத் திருமணத்துக்காகப் பெண்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவதாகும். இவ்வாறு அனுப்பப்படும் பெண்களின் மன உணர்வுகளைப் பற்றி எவருக்குமே அக்கறையில்லை. மாப்பிள்ளை கிடைத்துவிட்டாரே அதுவே போதும்' இந்தத் திருப்தியுடன் பெற்றோர் மகளை வெளிநாட்டுக்கு அனுப்பத் துடிக்கின்றார்கள். வீட்டுக்குள்ளேயே வாழ்ந்தவள் வெளியுலகத்தைத் தரிசிக்கும்போது எவ்வளவு சிக்கல்களுக்கு ஆளாவாள், எத்துணை அச்சம் அவள் மனதைக் கவ்விப்பிடித்திருக்கும் என்பதைப்பற்றியும் எவரும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

நியாயத்தை எடுத்துச் சொல்லும் துணிவு இல்லாதவர்களாக, தமது எண்ணங்களையே வெளிப்படுத்தும் வலுவில்லாதவர்களாகவே வாழ்ந்து பழக்கப்பட்ட பெண்கள் தமது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் உரிமையை இழந்து வாழ்கின்ற நிலையைக் கூட ஊமையாகச் சீரணித்துக்கொண்டு வாழ்கின்றார்கள். பல பெண்கள் இந்த நாட்டிலேயே இந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் வேற்றுநாட்டுக்கு அனுப்பப்பட்டு இதேநிலையை விட இன்னும் கொடுமையான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த அவலத்தின் ஓர் வெளிப்பாட்டைத் தான் அண்மையில் பத்திரிகையில் வந்த செய்தி ஒன்று புலப்படுத்தி நிற்கின்றது. சுவிசுக்குப் போவதற்காக, சிங்கப்பூரில் தங்கியிருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த யுவதி ஒருவர், தாம் தங்கியிருந்த அறையிலேயே இறந்துகிடக்கக் காணப்பட்டார். இந்தச் செய்தியூடாக வெளிநாட்டுக்குத் திருமணத்துக்காகத் தனித்து அனுப்பப்படும் பெண்களின் சோகக் கதையை எல்லோரும் புரிந்துகொள்ளலாம். இந்தச் செய்தி தனித்து அனுப்பப்பட்ட ஒரு பெண்ணுக்கு நிகழ்ந்த பரிதாபத்தைச் சொல்கின்றது. இந்தப் பெண் தன்னைத் தான் அழித்துக்கொண்டாள். ஆனால், சொல்லவும் முடியாமல், மெல்லவும் இயலாமல், வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் வெளிநாட்டில் பல தமிழ்ப் பெண்கள் தமது வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள்.

வீட்டுக்குள்ளேயே வைத்து வளர்க்கப்பட்ட பெண் திடீரென்று வெளிநாட்டுக்கு முன்பின் தெரியாத ஒருவனிடம் அனுப்பப்படுகின்றாள். இந்த நிலையில் அந்தப் பெண் அனுபவிக்கின்ற உளப்பாதிப்புக்களைப் பற்றி எவருமே அக்கறை கொள்வதில்லை.

பெரும்பாலான பெண்களின் சிந்தனையோட்டங்கள் அவளின் குடும்பத்தைச் சுற்றியதாகவே உள்ளது அதற்கப்பால் அவர்களின் எண்ணங்கள் பரந்து செல்லவில்லை. இதற்கு முக்கிய காரணமாக அமைவது ஒரு பெண் வளர்க்கப்படும் முறையாகும். அவள் எப்படி வளர்க்கப்படவேண்டும் என்று சமூகம் நிர்ப்பந்திக்கின்றதோ, அதற்கேற்பவே வளர்க்கப்படுகின்றாள்.

இவ்வாறான சூழ்நிலையில் வளர்ந்த பெண் திடீரென்று வெளிநாட்டுக்குத் தனித்து அனுப்பப்படுகின்றாள். இவ்வாறு செல்லும்போது தனித்த உணர்வு, அச்சம் போன்ற பலவித உணர்வுகளால் தாக்கப்படுகின்றாள்.

இருந்தன. கிராமியக் கெரில்லாக் குழுக்களின் கட்டுப்பாடும் அர்ப்பணிப்புக்களும் மக்கள் கெரில்லாக்களை நேசிப்பதற்குக் காரணமாயின. மக்களும் தாமும் ஒன்றெனக் கெரில்லாக்களும் கருதினர்.

தெலுங்கானா ஆயுதப்போராட்டத்தில் நிஜாமினது கொடுங்கோல் ஆட்சியிலும் நேருவின் இராணுவம் இழைத்த வன்முறைகளிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. பெருமளவு அடி உதைகளால் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுதல், பாலியல் வன்முறை, மற்றும் தங்களது குழந்தைகள் தங்கள் கண்ணெதிரிலேயே சித்திரவதை செய்யப்படுவதை பார்த்துத் துன்பப்படும் நிலை இவ்வாறு நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே.

மானபங்கம், பாலியல் வன்முறை, சித்தரவதை ஆகியவற்றை எதிர்த்து இப்பெண்கள் நடாத்திய வீரமும் உறுதியும் மிக்க போராட்டம் வரலாற்றுப் புகழ்மிக்கது. புதிய சமூக சமத்துவம், புதிய ஒழுக்கநெறி, புதிய பண்பாட்டு வாழ்க்கை ஆகியவற்றில் அவர்கள் அடைந்த விழிப்புணர்வும், அவர்களது அழுத்தமான போர்க்குணமும் பொருளாதார சமூக வழிகளில் ஒடுக்கப்பட்ட பெண்களின் புரட்சிகர உத்வேகத்தையும் ஆற்றலையுமே புலப்படுத்துகின்றன.

இந்த மக்கள் ஆயுதப் போராட்டத்தில் பெண்கள், நிலத்தைப் பாதுகாக்கும் முயற்சியிலும் விவசாயத் தொழிலாளர்களின் கூலிப்போராட்டங்களிலும் நிலப்பிரபுக்களின் தானியங்களைக் கைபற்றுவதிலும் மற்றும் காவற்துறையினர், இராணுவத்தினரை எதிர்த்துப் போராடுவதிலும் கூடத் தீவிரப் பங்காற்றினர். நிலத்துக்கான போராட்டத்தில், அதாவது பிரபுக்களிடமிருந்து நிலத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கான பெண்கள் ஆண்களோடு சேர்ந்து நின்று போராடினார்கள்.

விவசாயத் தொழிலாளர் நடாத்திய கூலியுயர்வுப் போராட்டங்களில் சம்பளவுயர்வு கோரி ஏராளமான பெண்கள் கையில் கொடியேந்தி அணிவகுத்தார்கள். வேலைநிறுத்தம் செய்தார்கள்.

நிஜாமின் கொடுங்கோலாட்சிக்கான எதிர்ப்புப் போராட்டங்களில் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து போர்களில் ஈடுபட்டனர்.

*1950* செப்டெம்பரில் கோயா கிராமத்தில் ஆண் – பெண் எல்லோருமே இராணுவ அட்டூழியங்களை எதிர்த்துப் போராடினர். இராணுவத்தைக் கொன்று, அவர்களது துப்பாக்கியையும் கைப்பற்றினர். அதற்குப் பிறகு இராணுவம் பெரிய படை திரட்டிக் கொண்டு வந்தபோது, ஊரே அடர்ந்த காட்டுப்பகுதியில் தஞ்சம் புக வேண்டியதாயிற்று. பெண்கள் கடுமையான இந்தச் சோதனைக் காலத்தை வீரத்தோடு சமாளித்தார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சத்தமிட்டு அழவிடவில்லை. அவர்களின் இந்த வீரஞ்செறிந்த வாழ்க்கை பெண்கள் எந்தளவுக்கு உறுதியாகவும் அழுத்தமாகவும் இருக்க வல்லவர்கள் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தது.

கெரில்லாக் குழுக்களைக் காப்பதில் பெண்கள் அசாதாரணமான முன்னெச்சரிக்கையோடு செயற்பட்டது தெலுங்கானப் போராட்டப் பகுதியில் மிக முக்கிய அம்சமாகும். கெரில்லாத் தலைவர்கள் ஓய்வெடுக்கும் போது அவர்களுக்குக் காவலாக நிற்பதும், காடுகளிலும் குன்றுகளிலுமிருந்து மறைவிடங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுசென்றதும் அவர்களின் அசாத்தியத் துணிச்சலைக் காட்டிநின்றன.

> காலங்காலமாக உலகம் முழுவதும் பெண், ஆணின் ஆளுகைக்குள் அடங்கியிருக்கத்தான் தகுதியானவள் என்ற கருத்தே ஓங்கியிருக்கிறது. அவளுடைய உடற்கூற்று இயலையும், தாய்மைப் பொறுப்பையும் அவளுடைய பலவீனங்களாக மிகைப்படுத்தி, குடும்பம் என்ற அமைப்பையே அவள் உழலக்கூடிய இருட்சிறையாக்கி, அவளைப் பொலிவற்ற இயந்திரமாக்கிவிடும் மரபுகள் காக்கப்பட்டன.
>
> வீட்டுப்பணி செய்பவர்களுக்குக் கல்வி மலர்ச்சி எதற்காக? அவள் ஆணுக்குச் சரியாகக் கல்வி கற்று வெளியே வேலை செய்ய வந்துவிட்டால் வீடுகளைப் பார்த்துக்கொள்பவர் யார்? மக்களைக் கருத்தாகக் கவனிப்பவர் யார்? என்ற பிரச்சினைகளுக்குச் சமுதாய வரைமுறைகளை மாற்றியமைப்பதன் வாயிலாகத் தீர்வுகான முடியும் என்று லெனின் கண்டார்.
>
> ராஜம் கிருஷ்ணனின்
> 'புதிய கீதம் இசைக்கின்றனர்'
> என்ற நூலிலிருந்து.

இன்னும், வயதுபோன மூதாட்டிகள் கூட கெரில்லாக்களுக்குத் தங்க இடம் அளித்து, துண்டுப்பிரசுர விநியோக வேலைகளை மேற்கொண்டு, இவர்களின் போராட்ட இரகசியங்களைக் காப்பதிலும் துணை நின்றார்கள்.

அந்தக் காலங்களில் தெலுங்கானாவில் பெண்கள் பரவலான அளவில் பாலியல் வன்முறைகளுக்கும் ஏனைய கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். தெலுங்கானாவுக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவமும் தனி ஆயுதப்படையினரும் ஓர் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் செய்வதை விட மிகமோசமான பாலியற் கொடுமைகளைச் செய்தன. இதனை எதிர்த்துப் பெண்கள் இராணுவத்தினர் மீது கையிற் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு தாக்கிய சம்பவங்களும் நடைபெற்றன.

மேலும் பெண்களின் அரசியல் ரீதியாக மக்களை அணிதிரட்டுவதிலும் இராணுவத் தளபாடங்களைப் பாதுகாத்து வைப்பதிலும் முக்கிய பங்காற்றினர். சில பெண்கள் ஆண்களுக்கு நிகராக வனப்பகுதிகளில் துப்பாக்கி ஏந்திப் போராடினர். கோயா வனப் பகுதிகளில் முக்கியமாகக் கோயாப் பெண்கள் கெரில்லாக் குழுக்களில் ஏராளமாகச் சேர்ந்து தீவிரமாகச் செயற்பட்டார்கள். ஒன்பது பெண்கள் கெரில்லாக் குழு உறுப்பினர்களாகவும், பதினைந்து பெண்கள் தகவல் ஊழியர்களாகவும், இரண்டு பெண்கள் கெரில்லாக் குழுவின் துணைத் தலைவர்களாகவும், இரண்டு பெண் அமைப்பாளர்களாகவும், பத்துப் பெண்கள் உள்ளூர் கெரில்லாக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தார்கள்.

தெலுங்கானா மக்களின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாறு உலக வரலாற்றிலேயே தனித்துவமான முத்திரையைப் பதித்துக்கொண்டது. போராளிகளினதும் மக்களினதும் எண்ணற்ற தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் அந்த மண்ணை மீட்க அவர்கள் போராடிய வரலாறும் மெய்சிலிர்க்க வைப்பன. எல்லாவற்றுக்கும் மேலாக அத்தகைய காலகட்டத்தில் பெண்கள் செய்த தீரமும் வீரச்சாதனைகளும் 'பெண்கள்' என்ற உலகின் பார்வையில் வியப்பையும் தன்னம்பிக்கையையுமே ஏற்படுத்தியது.

**சோற்றுடன் மட்டும் மனிதர்கள் வாழ்ந்துவிடுவதில்லை. உணவு, உடை, உறையுள் போன்றவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருப்பினும், இவை மட்டுமே போதுமாய் இருந்துவிடுவதில்லை. இவற்றிற்கு அப்பால் மனித வாழ்க்கைக்கு எண்ணங்கள் தேவைப்படுகின்றன. மனிதன் தன் இருப்பிற்கான தேவையையும் எவ்வாறு அதை நிறைவு செய்து கொள்வது என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். எண்ணங்கள் மலராத மனித வாழ்க்கை வெறும் அர்த்தமற்ற வாழ்க்கையாகப் போய்விடும்.**

https://tamileelamarchive.com/

# சமூகத்தின் அரங்கு



**க. சிதம்பரநாதன்**

'உணர்ச்சிகள்' பற்றி நாம் என்ன சொல்லலாம்? உணர்ச்சிகள் அற்ற மனிதன் வெறும் சடமாக, பிசாசாக மாறிவிடுகிறான்.

எண்ணங்களும், உணர்ச்சிகளும் அற்ற மனித வாழ்க்கையால் என்ன பலன்? எண்ணங்களும், உணர்ச்சிகளும் மனிதர்களுக்கு சூழலை ஊடுருவிப் பார்க்க உதவிசெய்து அவர்களது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

மனிதர்கள் தமது உணர்ச்சிகள், எண்ணங்கள், அநுபவங்கள் என்பவற்றை ஒன்றாகக் கூடி தமக்கிடையே பகிர்ந்துகொள்வதற்கான இடமாக அரங்கு தொழிற்படமுடியும். அரங்கின் தொடர்பு இரத்தமும் சதையுமாக இருப்பதால் அதாவது ஆற்றுபவர்கள், பார்வையாளர்களிடையே உயிருள்ள தொடர்பு நடைபெறுவதால் மேற்கூறிய பகிர்ந்து கொள்ளல் சாத்தியமாகிறது.

எனவே அரங்கு மனித சமூகத்தில் கட்டாயம் நிலவவேண்டிய தேவை உள்ளது. வெறும் அலங்காரம் அல்லது மகிழ்வளிப்பு என்பவற்றிற்கு அப்பால் அரங்கின் பணி உள்ளது. இதன் காரணமாகத்தான் அநேகமான அடக்குமுறை ஆட்சியாளர்கள் அரங்கைத் தடைசெய்து விடுகின்றனர். இன்று சிறிலங்காவில் அரங்கு சுயாதீனமாகத் தொழிற்பட முடியாத சூழ்நிலை உள்ளது. ஆனால் குறிப்பிடத்தக்களவில் நமது பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளமையால் இங்கு அரங்கு தன் முழு வீரியத்துடன் செயற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. நாம் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடக்கூடாது.

ஆனால் நம்மிடையே அரங்கு ஒரு மகிழ்வளிப்புக் கலையாக மட்டும் கருதப்படுகின்ற போக்கு நிலவி வருகிறது. அதாவது அரங்கை ஒரு பொழுது போக்குச் சாதனமாகவே அநேகர் கருதுகின்றனர். இந்நிலையை மாற்றுவதற்கு அரங்கச் செயலாளிகள் பணிபுரிய வேண்டும். உண்மையில் அரங்கு ஓர் ஆயுதம். மனித மனங்களில் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மலர்விக்கும் தூண்டியாக அரங்கைப் பயன்படுத்த முடியும். மனித மனங்களில் நல்ல எண்ணங்களும், உணர்ச்சிகளும் மலரும் போதே உண்மையான சமூக மாற்றம் ஏற்பட முடியும். ஒரு மனப்புரட்சி, ஒரு விழிப்பு நிலை ஏற்படுதல், ஒரு சமூகம் மாறுவதற்கு அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும். இதனை சமூகப்புரட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

எனினும் புரட்சியாளர்கள் அரங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் அவதானத்துடன் செயல்புரிய வேண்டும். மக்களுக்குச் சலிப்பேற்படுத்துகிற ஒரு முயற்சியாக இது அமைந்துவிடக்கூடாது. அவ்வாறு அமைந்துவிடுமெனில் அது ஓர் எதிர் விளைவையே தோற்றுவிக்கும். ஏனைய நாட்டு அரசியற் போராட்டங்களில் இவ்வாறு நடைபெற்றுள்ளன. எனவே நாம் அவதானமாக இக் காரியத்தில் பணிபுரியவேண்டும்.

அரங்கு மக்களுக்கானதாக ஆக்கப்படும்போது அரங்கின் அடிப்படையான கவர்ச்சி அம்சங்களுக்குப் பாதிப்பில்லாத முறையில் அரங்கு மீள் கண்டுபிடிப்புச் செய்யப்பட வேண்டும். அரங்கின் கவர்ச்சி மையங்கள் எவையென்பதை நாம் ஆய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். படைக்கப்படும் அரங்கு பார்வையாளரைக் கவரக்கூடியளவிற்கு அழகியல் வன்மையுடையதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் மட்டுமே பார்வையாளர்களை ஓர் கலை அனுபவப் பரப்பினுள் இழுத்துவர முடியும். அந்த அனுபவப் பரப்பினுள் இருந்தபடி ஆற்றுபவர்கள், பார்வையாளர்கள் தமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்ள முடியும். இந்த அனுபவப் பகிர்வானது வெறுமனே ஆற்றுபவர்களிடமிருந்து பார்வையாளர்களுக்கான ஒரு வழிப்பாதையாக மட்டும் இராமல், பார்வையாளர்களிடமிருந்து ஆற்றுபவர்களுக்கும், ஆற்றுபவர்களிடையேயும், பார்வையாளர்களிடையேயும் ஏற்படமுடியும்: ஏற்பட வேண்டும். இந்நிலையானது இறுதியில் ஆற்றுகையில் கலந்துகொள்ளும் அனைவரிடமும் ஒரு சங்கம நிலையை உருவாக்கும்.

அநேக அரசியல் அரங்குகள், மக்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்ளுவதில் தீவிர எண்ணங்கொண்டு அல்லது அவசரப்பட்டு மேற்கூறிய அழகியல் அம்சங்களில் போதிய கவனம் செலுத்தாமல் விட்டுவிடுவதன் காரணமாக அவர்களது முயற்சி – அது எத்தகைய தீவிரமும், நேர்மையுணர்வும் கொண்டிருந்தாலும் – இறுதியில் அவர்கள் நேசிக்கும் மக்களிடமே அந்நியப்பட்டு விடுகிறது. சர்வதேச அனுபவங்களைக் கவனித்தால் இது தெளிவாகத் தெரியும்.

அநேகமாக 'மக்களுக்காக' என்று உருவாக்கப்பட்ட அரங்குகள் 'தெருவெளி அரங்க' வடிவத்தை எடுப்பதைப் பல நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வழமையாக அரங்க நாட்டம் உடைய பார்வையாளர்களை விடப் புதிய பார்வையா

https://tamileelamarchive.com/

ளர்களை பரந்துபட்ட மக்களிடம் இருந்து உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் "தெருவெளி அரங்கு" தோன்றுவதற்கான அடிப்படைக் காரணியாகும். ஒரு சனரஞ்சக அரங்கு என்பதன் அடிப்படையே இதுதான். அதாவது ஒரு சனரஞ்சக அரங்கு இயலுமான வரை ஆகக்கூடுதலான பார்வையாளர்களை கவரக்கூடிய அரங்காக இருத்தல் வேண்டும். தெருவெளி அரங்கு மக்களை நாடிச்சென்று மக்கள் கூடும் இடங்களில் "கண்டவெளிகளில்" நிகழ்த்தப்படுகின்ற அரங்காகும். இந்த வகையில் தெருவெளி அரங்கு பரந்துபட்டு மக்களை அணுகும் வாய்ப்புள்ள ஒரு சாதகமான வடிவமே.

ஆனால், துரதிஷ்டவசமாக அநேகமான தெருவெளி அரங்குகள் (நம்மிடையே இவை தெருக்கூத்து என்று அழைக்கப்படுகின்றன.) சாயலில் அதிகூடிய விவரணத்தன்மை உடையதாக இருந்து விடுவதும் உண்டு. இதன் காரணமாக இத்தகைய தெருவெளி அரங்குகள் பார்வையாளர்களுக்குச் சலிப்பை ஊட்டுகின்றன. இதையே சாட்டாக வைத்துக் கொண்டு நாடகம் கற்றறிந்த 'பெரியோர்கள்' தெருவெளி அரங்கை ஒரு கலைவடிவமாகவே கருதுவதில்லை. ஒரு சமூக மாற்றப் போராட்டத்தில் அரங்கு ஒரு கருவியாக பயன்பட முடியும் என்பதையே நிராகரிக்கும் அளவிற்கு சென்று விடுகிறார்கள். ஏனைய நாடுகளில் இந்த நிலைமை சமூக மாற்ற அரங்க இயக்கத்தினைரை அச்சுறுத்தும் அளவிற்கு உண்டு. அந்நாடுகளில் உள்ள நியம அரங்குகள் பலம்வாய்ந்தவையாக உள்ளன. ஆனால், எமது மண்ணில் அத்தகைய ஒரு பலம்வாய்ந்த நியம அரங்கு இல்லை. இங்கு மக்களுக்கான மாற்று அரங்கு நியம அரங்காக தொழிற்படும் நிலைமைதான் உண்டு. இது ஒரு சாதகமான நிலைமை.

இச்சாதகமான நிலைமையை மனதிற்கொண்டு உற்சாகத்துடன் பணிபுரிய சமூக மாற்ற அரங்கச் செயலாளிகள் முன்வரவேண்டும். அழகியல் வன்மையுடைய அரசியல் அரங்கை உருவாக்க முடியாது என்பதல்ல. ஒரு வெற்றிகரமான சனரஞ்சக அரங்கு அரசியற் கருத்துக்களை அரங்கத் தன்மையற்ற வெற்றுத்தகவல்களாக வெளிப்படுத்தாமல் வேடிக்கையும், மகிழ்வளிப்பும் கலந்த அரங்க நிகழ்ச்சியாக வெளிப்படுத்த வேண்டும். உண்மையில் ஒரு சனரஞ்சக அரங்கின் சாரமாக கல்வியினதும், மகிழ்வளிப்பினதும் பிரிக்க முடியாத சேர்க்கை இருக்கவேண்டும். மக்களுக்கான அரங்கை உருவாக்க விளைபவர்கள் இச்சிறு விடயத்தை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். ★

# யுகங்களின் சுமை



**கா**த்திருந்தேன்
யாரோ ஒரு முகம் தெரியாத
ராஜகுமாரன் வருவான்.
இன்றில்லாவிட்டால் நாளை
மேற்குலகிலிருந்து — குறைந்தது
ஒரு மத்திய கிழக்கிலிருந்தாவது.

சொத்து, நகை
கூட்டல், கழித்தல்
விற்றல் , வாங்கல்
பேரம் படிந்தது
பனிவிழும் நிலங்களில்
சகோதரன் சிந்திய வியர்வை
ஆவியாய்.

கிடுகு வேலியின் கட்டுக்கள்
அறுத்து
கண்டம் தாண்டிய நெடும்
பயணம்
ஒரு புகைப்பட மணாளனுக்காய்
ஏன்? எதற்கு? எப்படி?
எதிர்க்கேள்விகள் கூடாது.
சொன்னதைச் செய்!
அனுசரித்துப் போ!

குனிந்த தலை
நிமிர்ந்து பாராதே!
பேசத் தெரிந்த நாளிலிருந்து
வழியனுப்பும் வரை
அம்மாவின் வழித்துணை மந்திரம்
வாசலுக்குப் பின்னும் என்னுடன்.

புதிதாய் விரியும் உலகினுள்
சிட்டுக் குருவி
சிறகு விரிக்கும்

தோப்புக் குயிலும்
வேலிக் கிழுவையும்
அந்தி வானமும்
அழகிய நிலவும்
முற்றத்து மணலில்
பேச்சுத் துணையும்
கட்டிடக் காட்டுக்குள்
இல்லைத்தான்.

இப்போது நாட்களைத் தின்றது
அவசரம்
வேலை, குழந்தை, பாடசாலை
சமையல் படுக்கை
ஓயாமல் உருளும் இரும்புச்
சக்கரம் கழுத்தை நெரிக்கும்
மூச்சுத் திணறும்.

கண்ணுக்குத் தெரியாத
வலைகளும்
நெஞ்சுக்குத் தெரியாத
சுமைகளுமாய்
யுகங்கள் கடந்தும்
சுமைகளில் நசுங்கும்
பெண் ஜென்மம்.

— சுடர்

# செஞ்சோலை

https://tamileelamarchive.com/



## முன்னுதாரண கல்வி நிறுவனம்

புதிய தேவை, புதிய பொருளாதாரச் சம்பிரதாயம். உற்பத்தி உளநிலைகளில் மாற்றம் ஆகியவற்றிற்கு ஏற்ப இங்கிலாந்தின் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாகிய *(RED BRICK)* றெட்பிறிக் பல்கலைக்கழக கோட்பாட்டை செஞ்சோலை ஞாபகமூட்டுகிறது. *RED BRICK* இன் நோக்கம் கல்வியின் கவனத்தை நாட்டின் தேவைகள் பக்கம் திருப்புவதுதான். செஞ்சோலையின் நோக்கமும் சிறுவர்களை மையமாகக் கொண்ட வாழ்க்கைக்கல்வி (வாழக் கற்றல்) என்று அதன் ஸ்தாபகர்கள் வெளிப்படுத்துகிறார்கள். இந் நிறுவனத்தின் முதுகெலும்பு ஜனனி விடுதலைப்புலிகள் மகளிர் படைப்பிரிவின் செயற்திட்டங்களுள் ஒன்று செஞ்சோலை மகளிர் பாடசாலை. தற்போது நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் தாய் தந்தையரின் பராமரிப்பை இழந்தவர்கள். மூன்று வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் உட்பட்ட பெண் பிள்ளைகளுக்கு இங்கு கல்வி வழங்கப்படுகிறது. இவர்களது உடல் ஆரோக்கியத்திற்கும் கல்வி நலனுக்குமாகச் சேர்த்து சிறுவர் இல்லத்தின் இருப்பிட வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கல்வியின் நோக்கம் பரீட்சைக்கு மாணவரைத் தயாரிப்பதால் வாழ்க்கைக்குத் தேவையான பூரண ஆளுமை உள்ளவர்களை உருவாக்குவதுதான் எமது நோக்கம் என்கிறார் செஞ்சோலை அமைப்பின் பொறுப்பாளர் ஜனனி. போர்க்காலச் சூழலிலேயே எமது வாழ்க்கைக்கான கல்வியை நாமே அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு செஞ்சோலை ஓர் முன்னுதாரணமாகும்.

எமது மண்ணில் துள்ளிக் குதித்து விளையாடிக் களித்திருக்க வேண்டிய குழந்தைகள் அச்சத்தால் நாளும் நடுங்கிக் கொண்டும் பசியால் துடித்து துவண்டு கொண்டும் இருக்கிறார்கள். அன்பு காட்டி அரவணைத்துக் காத்த பெற்றோரை வாழ்ந்து ஆதரவின்றி அலைந்து கொண்டிருக்கிறார்கள். குதூகலத்தையும் குழந்தைகளையும் பிரிக்கமுடியாது.

ஆனால் எமது தமிழீழக் குழந்தைகள் இதற்கு விதிவிலக்காகி போவதா. இன்று அங்கு வாழும் ஒவ்வொருவரும் இறந்தாலாவது நிம்மதி கிடைக்குமா என்ற கேள்வியுடன்தான் வாழ்கிறார்கள். வாழ்நாளில் அவலங்களை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருப்பதால் வாழ்வில் நம்பிக்கையை இழந்துவிட்ட அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் பணி எங்களுடையதே. பொதுநல நோக்குடன் செயற்பட்டு வருவதாக சொல்கின்ற சமூக சேவை நிறுவனங்கள்கூட எமது மக்கள் படும் அவலங்களைப் பார்த்தும் பாராதது போல மௌனித்திருக்கின்றன. இக்காலத்தில் "நாம் இருக்கின்றோம். நீங்கள் நம்பிக்கை இழக்க வேண்டாம்" என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களால் இயன்ற அனைத்தையும் கொடுத்து உதவி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கத்த துடிக்கும் எதிரிகளுக்கு சவாலாக நிற்கும் எம் தேச மக்களுக்கு தோள் கொடுத்து நிமிர்ந்து நிற்க வைப்போம். தோற்கப் போவது அடக்குமுறையும் அநீதியும்தான் என்பதை நிரூபிப்போம். எமது தாயக சிறார்களை எமது நாட்டின் எதிர்கால மனித வளத்தை பட்டினிச் சாவிலிருந்தும் கொடிய தொற்று நோயிலிருந்தும் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை என உணர்ந்து செயற்படுவோம்.



https://tamileelamarchive.com/

# தாயினும் நல்ல....

— இயல்வாணன் —



"அம்மாவென்றழைக்காத
உயிரில்லையே
அம்மாவை வணங்காது
உயர்வில்லையே"

எங்கோ தொலைவிலிருந்து காற்றின் வீசலுக்கேற்ப காதுள் நுழைந்த இந்தப் பாடல் அவனை இவனது நினைவுள் கொணர்கிறது.

இந்த நான்கு ஆண்டுகளில் இவனோடு சமர்க்களங்களில் நின்றவர்களில் பலர் இல்லை. அவர்களுள் ஒருவனாக, எப்போதுமே நினைவுக்குத் தட்டுப்பட்டு நிற்கும் ஒரு பாத்திரமாக அவன் நின்றான். ஏனையோரிலிருந்து மாறுபாடான அவனது சுபாவம் இவனுக்கு அவனில் பிடிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

மெல்லிய அரிசிப் பற்களுக்குள் முளைத்த "தெத்திப்பல்"லை வெளிக்காட்டி கண்களைச் சிமிட்டி நீண்ட ஒல்லியான உடலை வளைத்து அவன் சிரிக்கும் போது, அதுகூடக் காலமெல்லாம் அவனை ஞாபகத்தில் வைத்திருக்கும்.

கடைசியாக நடந்த பெரும் சமர் ஒன்றில் எறிகணைச் சிதறல்கள் உடலைத் தாக்க, குருதி தோய அவன் மரணித்த அந்தக் கணத்தில், இவன் அருகே நின்றான். இன்னும் நான் கைந்து ஆயுதங்களை தூக்கிக் கொண்டு வெற்றியுடன் இவர்கள் திரும்பிய போது, அதைப் பாட அவன் இல்லை.

இவன் அவனது உடலைத் தூக்கி வந்தான். மௌனத்தில் பொங்கிக் கொண்டு வழியெங்கும் சோக விதைகளைத் தூவி தூவி எல்லோரும்.....

அவனுடைய உடல் விதைகுழியில் நடப்பட்டபின்னர், அவனது குறிப்புப் புத்தகத்தை இவன் தனதாக்கிக்கொண்டான். விலைமதிக்க இயலாத அவனது நேசத்திற்கு அடையாளமாய் அது இருந்தது,

அதற்குள் இரு படங்கள் இருந்தன. ஒன்றில் அவனது அம்மா சிரித்தபடி இருந்தார். மற்றதில் சிரித்தபடி தலைவர். அப்போதுதான் இவனுக்கு அழுகை பீறிட்டு வந்தது. கண்ணீர் பெருக, ஓவென அழுதான். உடலோடு ஒட்டியிருந்த ஒன்று, இல்லாமல் போனதுபோல இதயத்தின் ஒருபக்கத்தில் உதிரம் உறையும்படியாக எதையோ இழந்து தவித்திருப்பது போல....

நீண்ட நேரம் அவன் நினைவுகள் அறுபட இயலாதனவாகப் பற்றிப் பிடித்தன.

ரைபிளைத் தூக்கிக் கொண்டு காவலரணுக்குப் போகும் போதும், சாப்பிடும் போதும், குளிக்கும் போதும்.... அருகே அவன் துணையின்றி மனம் அவஸ்தைப்படும். நினைவில் அவன் முகம் தோன்றி உயிரைத் துவட்டும்.

அநேக வேளைகள் —

தனது *'T 56 – 2'* வை மடியில் வைத்து, கால்களைப் பரவி, காவலரண் மண்மூட்டைகளில் உடல் சாய்த்து அமர்ந்திருந்து அவன் பாடுவான்.

"தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னைக் காக்கின்றாள்"

உடலைச் சிலிர்த்து மயிர்க்கால்களூடாக நுழைந்து என்பைக் கிச்சுமூட்டுவதாக அவன் பாடல் இவனைப் புரட்டும். எக்காலத்திலும் அவன் ஞாபகத்தை நீக்க முடியாதது போன்ற உணர்வை அவனது பாடல் தொற்றவைக்கும்.

மிகச் சன்னமாய் கைகளை அசைத்து உடலைக் குலுக்கி 'புலிகளின் தாகம்...' பாடும் போது கை தட்டி இணையாதவர் இல்லை. தாயினும் மேலான காவலன் யாரடா என்னும் போது அதை முடித்து வைத்து பாடாதவனுமில்லை.

மிகவும் உற்சாகமாக — இரவுக் காவல் விழிப்பின் அசதி சற்றுமின்றி அவன் பாடல்தான் இவர்களைத் துயிலெழுப்பும். மார்கழியின் விடிகாலைப் பொழுது. பனி சொட்டாய் இலைகளிலிருந்து வடியும். வெயில் புகாரை ஊடறுக்க முனையும். எப்போதுமே நிசப்தம் குடிகொண்ட அந்தச் சூன்யப் பிரதேசத்தில், எப்போதாவது எழும் பறவைச் சத்தத்தைத் தவிர, இடையிடையே எழும் வெடியோசையை விட, அவனது குரலுக்கு ஒரு வலிமை இருந்தது என்பது இவன் எண்ணம்.

காவலரணுக்கு மேலே தலை நீட்டினால் இராணுவத்தின் குறி பார்த்தலில் இருந்து மீள முடியாத— அந்த இடைவெளிக்குள் இவனது பாடல் இராணுவத்தினரையும் எட்டி இருக்கும். இரவு வேளைகளில் தம் பீதியைப் போக்க — அவர்கள் காதை அடைக்குமாறுசிங்கள 'பைலா' பாடல்களைப் போட்டிருப்பார்கள். அது ஓயும் பொழுதில் வேண்டுமென்று இவன் பாடும் 'இயக்கப்' பாடல்கூட அவர்களை எட்டி இராமல் போகாது.

ஒரு தேவதையின் அழகு அவன் குரலுக்கு இருக்கும் என்பது இவன் எண்ணம்.

ஒரு காவலரண், தாக்குதலுக்குத் தயாராகும்போது அவனது அம்மா இறந்தார். தகவல் வந்ததும் சண்டையில் இருந்து நிறுத்தி, வீட்டிற்குச் செல்லுமாறு பொறுப்பாளர் பணித்தார். அவன் போகவில்லை. இரவுச் சண்டையை முடித்த பின்னர் போவதாக உறுதியாக நின்றான். இவனது வறபுறுத்தலைக் கூட அவன் ஏற்கவில்லை.

சண்டைக்குப் போகும்போது வாகனத்தில் இருந்தவாறு தனது "ரி.56–2" அழுந்தப் பற்றி மௌனமாக இருந்தான். எவருடனும் எதுவும் பேசவில்லை. பிறகு நள்ளிரவிரவில் காவலரண்கள் மீது தாக்குதல் நடந்தது.

அரைமணி நேரத்தில் எல்லாவற்றையும் முடித்துவிட்டு வரும்போது "அம்மா... அம்மா.. எந்தன் ஆருயிரே" என்று பாடினான். விம்மல் வெடிக்க அழுதான். பின்னர் வீட்டுக்குப் போனான்.

இவனுக்கு ஒரு சகோதரனுக்குரிய தோழமையுடன் அவன் தனது வீட்டுக்கதையைச் சொன்னான். தனது சின்ன வயதிலேயே அப்பா இறந்து போனதையும், அம்மா தானே உழுதும், விதைத்தும் வயலைச் செய்து தங்களை வளர்த்ததையும், அதற்காக அம்மா பட்ட கஷ்டங்களைப் பற்றியும், இன்னும்....

ஒரு லீவின் போது இவன் அவன் வீட்டிற்குப் போனான். வயல்கள் சூழ்ந்த அந்தப் பகுதியில் சிறியதொரு கல்வீடு. அம்மாவின் உழைப்பால் உருவானதாம். அதற்குள் இவன் சென்றபோது அவர் ஆஸ்மாவால் பீடிக்கப்பட்டிருந்தார். இங்கும் அங்குமாய் புரண்டு மூச்சிழுக்க முடியாமல் பேரவஸ்தைப்பட்டார். அவனது அக்கா அவரருகே இருந்து விசுக்கிக்கொண்டிருந்தார். இவன் அப்போது அவனை நினைத்தான். அவன் அம்மாவின் மீது வைத்திருக்கும் அன்பு அளவிடத்தக்கதல்ல என்று இவனுக்குத் தெரியும்.

"என்ர வாழ்க்கையில ஆக உயர்ந்தது என்று நினைக்கிறது 'எவரெஸ்ட்'டை இல்லை; என்ர அம்மாவையும் என்ர நாட்டையும்தான்." என்று அவன் சொல்லிக்கொள்ளும்போது, அவனைப் போல இயல்பாகப் பேச ஏன் முடிவதில்லை என இவன் நினைப்பதுண்டு.

மஞ்சள் சூரியன் மேற்கில் படுத்த ஒரு பொழுதில் தாக்குதல் ஒன்றிற்காய் அணிசேரும் வேளையில்தான் அவன் இவனை சந்தித்தான்.

மிக இயல்பாய் –

"தாய் மேல் ஆணை.... தமிழ் மேல் ஆணை..." பாடிக்கொண்டு... கண்களை வெட்டி புன்னகை சிந்திக்கொண்டு.... காலாதிகாலத்தில் மறக்கக்கூடியதா அவன் நினைவுகள்?

★★

https://tamileelamarchive.com/

# அம்மா

தனித்திருந்த கிராமத்தில் அவள் வாழ்ந்து வந்தாள்
நாள் முழுவதும் மௌனமாய்
வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்த அவள்
கோடை வானத்தில் விம்மித் துடித்த சூரியனை
மிதந்து சென்ற மேக ஓடங்களைக்
கவனித்ததே இல்லை..

அவளது சின்னஞ்சிறு உலகிற்கு அப்பால்
அவளது காலடி ஓசை கேட்டதே இல்லை;
அவள் வெளியே சென்றதும் இல்லை.
அது அவள் தனக்குத் தானே விதித்துக் கொண்ட
நாடுகடத்தல்;
அவளுக்கே உரிய எளிய வாழ்வு அது.
இறந்து போன அவளது பெற்றோரின் நினைவுகள் மட்டுமே
ஒரு ஏக்கம்கலந்த வேதனையை அவளிடம் தூண்டி விடும்.

திடீரென ஒரு நாள்
அவளது நாடு முழுவதுமே
சினங்கொண்ட கடவுள் போல்
தன் தலையை உயர்த்தியது
செய்திகள் வந்தன;

ரத்த சாட்சிகள் பற்றி
ரத்தத்தில் தோய்ந்த மண் பற்றி
ரத்தக் கறை படிந்த மகனின் ஆடைகள்
அவளைத் தன் கிராம வீட்டிலிருந்து வெளியேறச்செய்தன
அவள் சென்றாள்.

வேலிக்கு அருகே உள்ள கொடிகளை;
ஆற்றை
நிலங்களை
அவளுக்குப் பரிச்சயமான குளத்தை
அவள் விட்டுச் சென்றாள்
இன்று அவளது காலடி ஓசை
நகரத் தெருக்களில் ஒலிக்கிறது
அந்தக் குறுகலான தெருக்களில், சந்துகளில்
இறந்துபோன மகனின் நினைவுகளும்
புண்பட்ட அவளது நெஞ்சின் கண்ணீரும்
எதிரொலிக்கும் கோஷங்களுடன்
கலந்து விட்டன.

– ஷம்ஷுர் ரஹ்மான் (*Shamsur Rahman*)
பங்களாதேஷ்

https://tamileelamarchive.com/

# காலமழையில் கரையாத காற்சுவடுகள்

பூபதி அம்மா!
உன் பாதச் சுவடுகள்;
காலமழையில் கரையாது.
தினமும் பூக்கும் சிவப்பு மலர்கள்,
உன்முகம் காட்டியே முறுவலிக்கும்
தாயே! நீ தவமிருந்தாயே,
அந்தக் குருந்தமரம்,
அது வேர்பரப்பும் வேளையெல்லாம்;
இந்தமண் கூர்பிடிக்கும்.
குனிந்ததலை நிமிர்த்திக் கூத்திடும்.
அம்மா! நீ பேச்சிழந்து போனது,
உண்மைதான்.
ஆனால்....
மூச்சிழந்து போய்விட்டதாக,
முற்றுப் புள்ளியிட முடியாது.
எங்கள் மூக்குக்குள் நுழையும் காற்று,
வெறும் காற்றல்ல.... உன் மூச்சுத்தான்.
அடிக்கடி புயலடிக்கும் மண்ணில்தான்,
"பூபதிப்புயல்" மையம் கொண்டது.
புயல் புறப்பட்டதும்,
புழுதிமேகம் சுருதியடங்கியது.
அந்நியர் பாதங்கள்,
எங்கள் நெஞ்சை மிதித்தபோது,
அன்னை கண்களைத் திறந்தாள்,
எங்கள் நெஞ்செரிந்த நெருப்பில்,
பாரதம் குளிர்காய எண்ணியது.
அரிசிப் பொரியோடு அணிவகுப்பு ஆரம்பமானது.
தங்கள் முகத்திரையைக் கிழிக்க,
இங்கே பூபதித்தாய் இருந்ததை,
அவர்களின் புலனாய்வுக் கமராக்கள்,
புகைப்படம் எடுக்கத் தவறிவிட்டன.
வீரத்துக்கு எங்கள் மண்ணில்,
வித்தியாசங்கள் கிடையாது.
ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதங்கள் இல்லை
குஞ்சென்றும், மூப்பென்றும் எல்லைகள் இல்லை
இங்கு எல்லாமே போரிடும்.
பூபதி அம்மாவின் கால்பட்ட மண்,
எப்படிக் கைகட்டிநிற்கும்?
தேரோடும் வீதியெல்லாம்,
எதிரிக்கு எதிராகப் போராடும் வீதிகளாயின,
பட்டினி வில்லெடுத்த பார்த்திபன்,
நல்லூரிலே நாணேற்றினான்,
"என்மரணம் பலருக்கு ஜனனம்" என்றான்.

எங்கே அந்த விடுதலைக் குழந்தைகள்?
தமிழீழம் பார்க்கத் துடித்தது.
கட்டித் தழுவக் காத்திருந்தது.
பாரதம் மீண்டும் குருசேத்திரத்தைக் கண்டது.
எங்கள் மண் குருதி சேத்திரமானது.
எழுவான் திசையில் ஒரு ஒளிப்பிழம்பு
இந்தா எழும்புகிறேன் என்று,
திசைகள் சிவக்க சிலிர்த் தெழுந்தது.
"அன்னை பூபதி"
விஸ்வரூபமாக விண்தொட நிமிர்ந்தாள்.
தேசமே எரியும்போது எப்படித் தென்றல் வீசும்,
குருந்தமர நிழல்,
அவளுக்கு குளிரவில்லை.
எரிமலைமுகட்டின் பெருவாய் திறந்து,
அக்கினிக் குழம்பு ஆறாய்ப் பாய்ந்தது.
சப்பை மூக்குகளும்,
தலைப்பாகைத் தலைகளும்,
அடிமுடி காண முடியாது நின்றன.
ஏவிவிட்ட சூனியக் காரர்கள்,
என்னசெய்வது என்று திகைத்தனர்.
பாரதத்தின்
விரல்களெல்லாம் விஷம்
இதழ்களில் மட்டும் இனிப்பு
இதைப் புலிகள்மட்டுமே புரிந்து கொண்டனர்
தேசம் தெரிந்து கொள்ள சிறிது நாளாச்சு.
தெரிந்தபோது
பூபதி அம்மா போருக்குப் புறப்பட்டாள்.
நெஞ்சுக் கவசம்
வெள்ளைக்குதிரை பூட்டியதேர்
கைநிறைய அஸ்திரங்கள்
எதுவுமின்றி,
நெஞ்சில் எரிந்த நெருப்புடன்
நேர்வந்தாள்;
வென்றாள்.
"ஆவடி" ஆயுதங்களால்
நாவலடிக் கல்லறையைக் கூட
சல்லடை யாக்க முடியவில்லை
எப்படி இயலும்
அது கல்லாலும் மண்ணாலுமா கட்டப்பட்டது?
இல்லையே,
எங்கள் வீரத்தாலும், குருதியாலுமல்லவா
உறுதியாக்கப்பட்டது!

- புதுவை இரத்தினதுரை 'நினைவழியா நாட்கள்'

https://tamileelamarchive.com/

## கப்டன் தமயந்தி



"வெற்றியோட திரும்பி வரவேணும் தமயா" – தமயாவின் உயிர்த்தோழி சொல்கிறாள். "நான் சாகமாட்டன். ஆனையிறவைப் பிடிச்சு இயக்கச்சி றோட்டால என்ர குறூப்பை கூட்டிக்கொண்டு நடந்து வருவன் அப்ப பார்." என்று தோழிக்கு உறுதி கூறுகிறாள் தமயா.

"தனது துப்பாக்கியைத் துடைக்கும் போது இந்தமுறை மாத்திரம்தானே பழைய ரைபிள். ஆனையிறவில் பொயின்ர அடிச்சு நாலஞ்சு ரைபிள் எடுப்பன். பிறகு ஒவ்வொரு சண்டைக்கும் ஒவ்வொரு ரைபிளைக் கொண்டு போவன்." என்று சொல்லிச் சொல்லித் துடைப்பாள். தாக்குதலுக்குப் போக முன்னர் புதுச் சீருடை அணிந்து வோக்கி, ரோச்லைட் எல்லாவற்றையும் அணிந்துகொண்டு "சாகிற நேரம் நீற்றாகச் சாகவேணும்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

## 2ம் லெப். அமராவதி



*1991* ஜூலை "போய் வருகிறோம்" கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குள் இருந்து 'கீச்சுக் குரல்' ஒன்றும் "போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தது. குரலுக்குரியவள் அமராவதிதான் அமரா அடிக்கடி சொல்லிக் கொள்வாள். "எங்கட வீட்டையும் எல்லாரும் புலிக்குடும்பம்" என்று சொல்ல வேணும்" இதுதான் அவளுடைய கனவாக இருந்தது. பயிற்சிக் காலத்தின் போது ஒருநாள், இவளை "மரம் தூக்கி வாருங்கள்" என்று பயிற்சியாளர் சொன்னபோது "ஏன்? நான் உங்களுக்கு மரம் தூக்கவோ வந்தனான்? றெயினிங் எடுக்க வல்லோ வந்தனான்" என்று கேட்டவளிடம் இதுவும் பயிற்சிதான் அமரா. எங்களுக்குத் தேவையானதை நாங்கள்தான் தூக்கிவர வேணும்" என்றதும்,

"சரி தூக்கி வாறன்" என்றாள்.

சண்டைக்குப் போகவேணும். ஆமியைச் சுட வேணும் என்ற இவளது ஆவலைத் தீர்ப்பதற்கு முதற் களமாக அமைந்தது காரைநகர் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல்தான். இவளுக்கு ரி–81 என்றால் பிடித்தமான ஆயுதம். ஒரு முறை பொறுப்பாளர் "ரி–81 ஐ தாங்கோ வேறு ஆயுதம் தருகிறேன் என்ற போது "எனக்கு ஒரு ஆயுதமும் வேண்டாம். ரெண்டு குண்டு தாங்கோ. குண்டோட போய்ச் சண்டையில் நின்று எனக்கு ரி–81 எடுக்கிறன்" "ஆமி கட்டாயம் ஓடுவான். என்ர கையால் ஆயுதம் எடுத்து அண்ணைக்குக் குடுப்பன்" என்று சொல்லிக்கொண்டு, அதே கனவோடுதான் விஷேட பயிற்சியையும் பெற்றுக் கொண்டாள். சண்டைக்கும் போனாள். ஆனால்....

## கப்டன் தேனுஜா



*14.07.1992* "தேனுஜா வருவாள்" என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதித்தபடி காத்திருந்தனர். ஒரு முறை வேவு பார்க்கப் போனவள் திடீரென்று வோக்கி ரோக்கியில் அறிவிக்கிறாள். "ஆர்.பி.ஜி யோடை உடனே வாங்கோ" என்று. மறுகணம் "வேண்டாம், நானே நேரில் வருகிறேன்" என்று அறிவித்தாள். நேரில் வந்த போது தேனுஜா சென்னாள் "அக்கா எங்கட இடத்தில எதிரி வந்து குசாலாகத் திரிகிறதைப் பார்த்தவுடன் எனக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுவிட்டன். அக்கா, அந்தப் பொயின்ரில இரண்டு டொங்கான் இருக்கு. எப்பிடியும் நான்தான் அதையும் எடுப்பன். இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டக் கொடுத்து எங்களுக்கு எம். *203* ஒன்று வாங்குவேன்" என்றாள். பதினைந்து நாட்களாகக் குளிக்கக்கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக் கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. "எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத்தான் குளிப்பன்." என்று கூறிக்கொண்டே வேகங்கொண்டெழுந்தாள்.

பாதுகாப்பற்ற பெரு வெளி. நல்ல நிலவு. இவை இரண்டும் எதிரிக்குச் சாதகமாக அமைந்துவிட்டன. ஆனாலும் எம்மவர் விட்டுவிட்டு ஓடிவிடவில்லை. முடிந்தவரை தாக்குதலை நடாத்திக்கொண்டிருந்தார்கள். மாலதியின் இரண்டு கால்களிலும் ரவைகள் துளைத்துச் சென்றுவிட்டன. மாலதி இரு கால்களிலும் காயப்பட்ட அந்த வேளைதான், குண்டுகளின், ரவைகளின் ஓசையின் நடுவே மாலதியின் அந்தச் செய்தி.....

"என்ரை ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு, என்ரை ஆயுதத்தைப் பிடி விஜி"

"ஓ! நான் ஆயுதத்தைப் பிடிக்கிறன், முதலில் நீ வா மாலதி"

"நான் சொல்லுறதை முதலில கேள்"

"இல்லை. நீ வா முதலில்

ரவை மழையின் நடுவே தோழிகள் இருவரினதும் வாக்குவாதம் தொடர்கிறது.



2ம் லெப். மாலதி – வீரவேங்கை விஜி

https://tamileelamarchive.com/



## மீண்டும் மலைகள் நகரும்

மலைகள் நகரும்
நாட்கள் வருகின்றன.
நான் சொல்கிறேன்
நம்புங்கள்.
முன்பொரு காலம்
பூகம்பங்களால்
பூமி விழித்தபோது
மலைகள் நகர்ந்தன.

இன்றைய காலம்
தூங்கும் பெண்கள்
விழித்துக் கொள்கிறார்கள்.
அவர்கள் விழித்து
எழுந்ததும்
மீண்டும்
மலைகள் நகரும்

– அகிக்கோ ஜொசானா (ஜப்பான்)